www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

රුපා 11/00

දිනමුරසු වාරමලර්

நவ.08–14,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 282

# தென்னாபிரிக்காவில் புலிகள்



## மண்டேலா வருவாரா



## அந்தநாள் விஜய்

# சிலாவத்துறைச் சமர்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கொல்லப்பட்டுள்ள தமிழ்ப் பத்திரிகையாளர்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தமிழ்ப் பத்திரிகையாளர்
ஸ்ரீகஜன் விடுதலை!
மொத்தமாக 105 நாட்கள்
உள்ளே வைத்திருந்தார்கள்!
தொல்லை தவிர்ப்புக்குழு.
மனித உரிமை ஆணைக்குழு
போன்றவை வழக்கம்போல
கேட்டும் பார்த்தன.
ஆதாரத்தின்படி
கைது செய்து
விசாரணை நடப்பதாகவே
அவற்றுக்குக் கூறப்பட்டது!
இப்போது அந்த
ஆதாரங்கள் என்னாகின?
கஜன் கைதானபோது
சோடிக்கப்பட்ட கதை
கற்பனை என்பதை
முரசு தெளிவாக
எடுத்துக்காட்டியிருந்தது!
அனாவசியமான கைது
என்பது இப்போது
அம்பலமாகிவிட்டது!
தமிழ்ப்பத்திரிகையாளர்களான
மாணிக்கவாசகம், மதுசூதனன்
விடயத்திலும்
இதேதான் நடந்தது.
ஆதாரத்தின்படி
கைது செய்திருப்பதாகவே
தொல்லை தவிர்ப்புக்குழுவுக்கு
அப்போதும் கூறப்பட்டது!
பின்னர் மதுசூதனனும்
மாணிக்கவாசகமும்
விடுதலையானார்கள்!
குறிப்பிட்ட பத்திரிகையாளர்கள்
விடுதலையான செய்தி
மகிழ்ச்சி தரத்தக்கதுதான்!
ஆனால், அவர்களை
காரணமின்றிக் கைது செய்து
தடுத்து வைத்ததற்கு
பரிகாரம் என்ன?
தொல்லை தவிர்ப்புக்குழுவும்
மனித உரிமை ஆணைக்குழுவும்
தங்களுக்குத் தரப்பட்ட
தவறான தகவல்களையிட்டு
என்ன நடவடிக்கை
எடுக்கப்போகின்றன?
ஆதாரத்துடன்
கைது செய்ததாக
கூறிய அதிகாரிகள்மீது
நடவடிக்கை எடுக்க
இக் குழுக்களால் முடியுமா?
மேற்படி இரு குழுக்களும்
அரசால் நியமிக்கப்பட்டவை!
அக் குழுக்களுக்கே
நிரபராதிகளை விடுவிக்க
முடியவில்லையே!
ஏன் கைது செய்தீர்கள்?
என்று காரணம் கேட்கவும்,
அதற்குத் தரப்படும் பதிலை
அப்படியே ஏற்றுக் கொள்ளவும்
இக் குழுக்கள் எதற்கு?
மனித உரிமை
காக்கப்படுவதாக
உலகை ஏமாற்றவே
இக் குழுக்களின்
ஆரவாரங்கள் உதவுகின்றன.
அதுவே
இக் குழுக்களின்
பணியாகவும் இருக்கின்றன!
அவ்வாறில்லையெனில்
செயல் மூலம் நிரூபிக்கட்டும்!
நாடறிந்த
தமிழ்ப் பத்திரிகையாளர்கள்
'பயங்கரவாதிகள்' என்று
முத்திரை குத்தப்பட்டனர்!
நீண்ட நாட்கள்
விசாரணையின்றி
தடுத்து வைக்கப்பட்டனர்!
இதுவும் அப்பட்டமான
மனித உரிமை மீறலேயாகும்!
இத்தகைய பொறுப்பற்ற
நடவடிக்கைக்கு
காரணமானவர்கள்மீது
தக்க நடவடிக்கை எடுக்க
மேற்படி குழுக்கள்
வழிவகை செய்யட்டும்!
அப்படி நடக்குமானால்,
உலகை ஏமாற்றும்
நாடகம் என்ற
எமது கருத்தை
முற்றாகக் கைவிடலாம்!
சிங்கள நீதிபதி ஒருவரை
கைது செய்ததில்
ஏற்பட்ட தவறால்
புலனாய்வு அதிகாரி
புரட்டி எடுக்கப்பட்டார்.
ஜனநாயகக் கட்டமைப்பில்
நீதித்துறைக்கு உள்ள
முக்கியத்துவம்
பத்திரிகைத் துறைக்குமுண்டு!
சிங்களப் பத்திரிகையாளர்
ரிச்சார்ட் டி சொய்ஸாவுக்காக
அனுதாபப்பட்டவர்கள்.
தமிழ்ப் பத்திரிகையாளர்களை
'பயங்கரவாதிகள்' என்கிறார்கள்.
ஆளைக் கொல்வதைவிட
நற்பெயரைக் கொல்வது
மிக மோசமானது!
பயங்கரவாதிகள்
என்று பிரசாரப்படுத்தி
தமிழ்ப் பத்திரிகையாளர்களை—
உளவியல் ரீதியாக
கொலை செய்துள்ளனர்!
இதற்குச் சில
சிங்கள, ஆங்கிலப்
பத்திரிகையாளர்களும்
ஒத்துழைத்ததுதான்
மகா மகா கொடூரம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்



### கலியனாரின் கலி

தொண்டை நாட்டிலே திருவொற்றியூர் என்னும் திருத்தலத்திலே தியாகராசப் பெருமானைப் போற்றும் அடியவராக விளங்கினார் கலியனார். இவர் செக்கார் குலத்தைச் சேர்ந்தவர்.

கோயிலின் உள்ளும் புறமும் ஒளிதரும் சிறந்த திரு விளக்குகளை ஏற்றும் பணியிலே ஈடுபட்டார் கலியனார்.

இவரை வறுமை வாட்டிற்று. ஆனாலும் சோர்வுறாமல் தம் மரபினரிடம் எண்ணெய் எடுத்து விற்றுக் கூலியைக் கொண்டு திருவிளக்குப்போடும் பணியைச் செய்தார். அதிலும் சிரமம் வரவே, எண்ணெய் ஆட்டும் செக்காரப் பணியிலே ஈடுபட்டார். அதிலும் பல சிரமங்கள் வந்ததால் தன்னுடைய வீட்டைப் பிரித்து விற்றுத் திருவிளக்குப் போட்டார். பின்னர் மனைவியையும் விற்கத் துணிந்தார். ஆனால் ஒருவரும் வாங்குவாரில்லை.

"என் குருதியிலேயே விளக்கெரிப்பேன்!" என்று வாளை எடுத்து கழுத்தை அரியத் தொடங்கினார். அப்போது இறைவன் கை அச்செயலைத் தடுத்து நிறுத்தி, கலியனாரின் கலியும் தீர்த்து அருளினார்.

மனத்தூய்மை காரணமாக எச்சம் (புகழ்) நன்றாயிற்று.

தொகுப்பு:-செல்வி ஜெயந்தி சிதம்பரம், புத்தளம்.

### நிரந்தர மாளிகை

ஒரு முறை ஜைனப் பின்த் அதபா என்னும் பெண்மணி அன்னை பாத்திமா (ரழி) அவர்களின் வீட்டுக்குச் சென்றார்.

அங்கே பாத்திமா நாயகியின் எளிமையையும், ஏழ்மையையும் கண்ட அதபா பாத்திமாவை நோக்கி "உங்கள் வீடு மாளிகை போல் அல்லவா இருக்க வேண்டும். ஆனால் இங்கு சில பழைய பாய்களைத் தவிர வேறு எதையும் காணவில்லையே?" என்றார்.

அதற்கு அன்னை பாத்திமா அவர்கள் "சோதரியே! சிறிது காலம் நாம் தங்கிச் செல்லும் ஒரு வீட்டைப் பற்றி ஏன் கவலை கொள்ள வேண்டும்? என்றும் நாம் தங்கியிருக்கப்போகும் மறுவுலக அழியாத இல்லம் இருக்கிறதே அதைப்பற்றியல்லவா நாம் அக்கறை கொள்ள வேண்டும்?

நிரந்தரமற்ற இவ்வீடு மாளிகையாக இருக்க வேண்டுமென நான் விரும்பவில்லை. நிரந்தரமான மறுவுலக வீடு எனக்கு மாளிகையாக இருக்க வேண்டும். அதற்காகவே என்னை நான் தயார்படுத்திக் கொண்டிருக்கிறேன்!" என்றார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல. 279

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



### பரிசுக்குரிய கவிதை

#### வெட்கப்படு

நம் நாட்டு
கிருஷாந்திக்கும்...
அயல் நாட்டு
ரீட்டாவுக்குமாக..
து(வெ)க்(ட்)கப்படு!

இரா. இரமேஷ்குமாரி-
நானுஓயா.

#### ஏக்கம்?

நடந்தால் மிதிவெடி;
ஓடினால் துவக்குவெடி;
பார்த்தால் குண்டுவெடி;
பதுங்கினால் 'ஷெல்' அடி;
எல்லாமே மரண அடி-
என்ன வாழ்க்கையடா நமக்கு?

அ. அச்சுதன்- சேனையூர்-06.

#### அணையாது

என் கண்கள்
சிந்தும் கண்ணீரால்
லயங்கள் எரிவது
அணையாது!

எஸ்.பி. பாலமுருகன்,
பதுளை.

#### சொந்தமல்ல...

மெல்லத் திரும்பிப்பார்...!
உனக்காகக் காத்திருக்குது-
இன்னொரு வசந்தவாசல்!

கோட்டைமுனை முத்துமணி-
வாஹிட் ஏ. குத்தூஸ்.

#### கொடிது

கொடிது கொடிது
இளமையில் வறுமை;
அதை விடக் கொடிது
இங்கு தமிழரின் நிலைமை

எம். முஹைஸ்-திருகோணமலை.

#### அன்றும் இன்றும்!

அன்று-
மண்ணைத் தோண்டியது
மாணிக்கக் கற்கள் தேடி!
இன்று-
மண்ணைத் தோண்டுவது
மண்டையோடுகள் தேடி!
எனதருமைத் தாயகமே- நீ
எலும்புக் கூடுகளின்
விளைநிலமா?

செல்வி மதுரா யோகேந்திரன்-
திருக்கோவில்.

#### அவ்ளோதான்!

இனி
யோசித்துப் பயனில்லை;
செம்மணியை
எரித்துவிட்டார்கள்!!

எஸ். பிரபா- பதுளை.

#### அடையாளம்

புல்டோசர் போட்டு
இடிக்கப்பட்ட
வீட்டின் அடையாளமாக
இரண்டு தூண்கள்!


த. நகுலேஸ்வரன்-
கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

#### என்ன குழப்பமிது....?

கை நீட்டிப் பெற்றதோ நானூறு!
கணக்கில் கூறியதோ நூற்றறுபத்தெட்டு!
கணக்கில் குழப்பம் யாருக்கு!?
கடவுளே... தலையே வெடிக்கிறதே!

வே. ஆ. புட்கரன்- திருப்பழுகாமம்.

## கவிதைப் போட்டி இல.282



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 14.11.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.282
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அசத்தலான ஆரம்பம்தான் 'உதட்டில் ஒரு மச்சம்'. வித்தியாசமான தொடர்கதைகளைத் தரும் முரசுக்கு வாழ்த்துக்கள். 'மேற்கே ஒரு குற்றம்' விறுவிறுப்பாகச் சென்று அனைத்து வாசகர்களையும் கொள்ளை கொண்டுவிட்டது.

செல்வி பஸ்லி ஃபரீட், திஹாரிய.



பிரிய முரசே,

அருமையான இரண்டு தொடர் கதைகளைச் சுமந்து வந்து நிறைவு செய்த வேளையில் மீண்டும் அசத்தலான தொடரை அறிமுகம் செய்தமைக்கு நன்றி கலந்த பாராட்டுக்கள்.

இராஜதந்திரியின் அலசல், 'சந்திக்கு வராத சங்கதிகள்', நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' நெத்தியடியாகத் தரும் அதிரடியாரின் அறிக்கைகள் அத்தனையும் சிந்தனையில் நிலைக்கவைக்கும் சூப்பர் அம்சங்கள்!

அ. அரசரெத்தினம், சேனையூர்-06.

கண்மணி முரசே!

இப்போதெல்லாம் உன்னை வாசி (சுவை)க்க நான் தவறுவதேயில்லை! க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் 'தங்கக் கதை' 'முள் நிலவு' கடைசியில் என்(ம்) மனதையும் முள்ளாய்க் குத்தி விட்டது. கதையின் நாயகி 'நிலா'வின் நிலைமை என் கண்களை குளமாக்கிவிட்டது! ஆனாலும் புதுமையான ஒரு தொடரைத் தந்த எழுத்தாளரைப் பாராட்டாமல் இருக்கவும் முடியாது! முரசே! உன்னில் வரும் அனைத்து அம்சங்களுமே அசத்தல்தான்!

செல்வி எம். ஆர். ஃபாத்திமா ரிஸானா, வத்தேகெதர.



தன் முன்னிலையில் நிற்பவர்களை மட்டுமல்ல படிப்பவர்கள் வயிற்றிலும் புளியைக் கரைக்கச் செய்கிறான் 'இடி அமீன்'!

'திஸ் இஸ் வெரி எக்ஸைட்டிங்...'

முனீரா ஸன்பர், ஹார்ட் ப்ளேஸ், கிண்ணியா-06.

'முள் நிலவு' முழு நிலவாய் மனதில் நிற்கிறது. முடிவுதான் நெஞ்சில் முள்ளாய்த் தைத்தது. கிருஷ்ணகாந்த் போன்ற இதயம் இல்லாதவர்கள் இருக்கும்வரை, நிலா போன்றோரின் நிலை என்றும் கேள்விக்குறியே. சோகங்களை சொந்தமாக்கி, தியாகங்களை சுவாசமாய் கொண்டு வாழத் துணிவது பெண்ணினமே என்பதை கதையில் சொல்லாமல் சொன்ன என் அபிமான எழுத்தாளர் ராஜேஸ்குமாருக்கு என் பாராட்டுதல்களோடு கதையைத் தாங்கி வந்த முரசுக்குமாய்ச் சேர்த்து நன்றிகள்!

ரணீஸா யாசீன், அக்குறணை-07.

அதிரடி அய்யாதுரையாரின் குட்டிக் குட்டி செய்திகள் கடுகு சிறிதானாலும் காரம் பெரிதுபோல் சூடு, சுவை, சுவாரசியமாக இருக்கின்றன.

'உதட்டில் ஒரு மச்சம்' தொடர் கதை முதல் அங்கத்திலே அசத்தல் தான். சுபாவுக்கும், முரசுக்கும் எமது வாழ்த்துக்கள்!

பி. ஆர். அசோக்குமார், டிக்கோயா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு. வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

### தாளம் ஏன்?

அரசும், எதிர்க்கட்சியும் ஒன்றுபடவேண்டும் என்று பேரினவாதிகள் எதிர்பார்ப்பது சரிதான். இந்த தமிழ்க் கட்சிகள் ஏன் தாளம் போடுகின்றன. தம் இன நலனை அழிக்க தாமே கத்தியைத் தீட்டிக் கொடுக்கப் போகிறார்களா? இவர்கள் விவேகம் புல்லரிக்க வைக்குதய்யா.

பி.எம். சதானந்தன், வவுனியா.

### எடுத்த எடுப்பில்

'உதட்டில் ஒரு மச்சம்' எடுத்த எடுப்பிலேயே பலே பலே. சுபாவின் கதைகளை முரசு இதுவரை தரவில்லை என்ற குறையை இத்தொடர் முதல் வாரத்திலேயே போக்கி விட்டது. நிறைவுற்ற 'மேற்கே ஒரு குற்ற'மும் அபாரம்.

செல்வி இ. ஊர்மிளா, பண்டாரவளை.

### ஹெலியும் வாளும்

ஹெலியும், வாளும் அருமையான ஒப்பீடு. இராஜதந்திரியின் அரசியல் அலசல் சூடு கிளப்பி வருகிறது. மிகத் தெளிவான விளக்கங்கள். காலத்திற்கு ஏற்ற அரசியல் வகுப்புக்கள்போல ஒவ்வொரு வாரமும் அலசல் மெருகூட்டுகிறது. சபாஷ் இராஜதந்திரியாரே.

சி. சுதர்சன், மட்டக்களப்பு.

### முத்தாய்ப்பு

கணேஷ், வசந்த் இணைந்து மிரட்டிய அல்லது துப்புத் திரட்டிய 'மேற்கே ஒரு குற்றம்' அருமையிலும் அருமை. முரசின் தொடர்கள் சோடை போகாது என்பதற்கு புதிய தொடர் 'உதட்டில் ஒரு மச்சம்' முதல் வாரமே முத்தாய்ப்பு வைத்துவிட்டது.

ஆ. திவாஸ், காலி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
ஃபக்ஸ்- 074-513266

### எப்போது மாறும்?

அன்பு முரசே!

அரசியல் தொடரில் 1990களில் கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் மீதான இராணுவத்தின் அத்துமீறல்களை உன் அத்தியாயத்தில் தந்தமைக்கு என் நன்றிகள். மேலும், அம்பாறை மாவட்டத்தில்-அக்கரைப்பற்று எனும் கிராமத்தில் நடைபெற்ற அட்டூழியங்கள் எம் ஊர் மக்களின் மனங்களில் ரணங்களாக-மாறாத நிகழ்வுகள் அவை. கோவிலில் தஞ்சம் புகுந்தவர்களை விசாரணை என்ற போர்வையில் 1990.6.24ல் கைது செய்து அழைத்துச் சென்றவர்கள்தான்-இன்றுவரை அவர்களைப் பற்றிய எத் தகவல்களும் தெரியவில்லை. தேவமாதா கோயிலில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்களில் எனது சகோதரனும் ஒருவர். ஏ.எல். விஞ்ஞான மாணவன். இந்தக் கொடூர சம்பவம் போல் மீண்டும் ஒரு சம்பவம் நடைபெறக் கூடாது என்றே இறைவனை வேண்டுகிறேன். இப்படியான நிலைமை எம்மை விட்டு எப்போ மாறும்?

கே.எஸ். லதா, அக்கரைப்பற்று.

### தங்கமோதிரம்

'மேற்கே ஒரு குற்றம்' சுஜாதாவின் புகழுக்கு மற்றும் ஒரு வைரக்கல். எப்படி முடிந்தது என்று தெரியாமல் கதையை நகர்த்திய சுஜாதாவின் கரத்திற்கு தங்க மோதிரம் தரலாம்.

மா. சிவபாலன், மட்டக்களப்பு.

### சொல்ல வேண்டியதை.....

எக்ஸ்ரே என்றால் எக்ஸ்ரேதான். நாரதர் சொல்ல வேண்டியதை, சொல்ல வேண்டிய முறையில் சொல்லிவிடுகிறார். முரசை விரித்ததும் படிப்பது எக்ஸ்ரேயும், அரசியல் அலசலுமே.

பா. டேவிட், வத்தளை.


படிப்பகம்

www.padippakam.com

# ஒன்றிணைந்த இராணுவ நடவடிக்கை
## திட்டமிடுகிறார் ஜனாதிபதி சந்திரிக்கா

ஒன்றிணைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கான அதிகார அமைப்பை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி ஏற்படுத்தவிருப்பதாகவும் இதனையொட்டிய இறுதித் தீர்மானத்தை அவர் விரைவில் அறிவிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வமைப்பு பாதுகாப்புப்படைகள் மற்றும் பொலிஸ் ஆகிய இருபிரிவுகளையும் ஒன்றிணைத்து நடவடிக்கைகளைத் திட்ட மிடுவதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிகிறது. பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இவ்வமைப்பே வடிவமைக்கும் என உயரதிகாரிகள் கூறுகின்றனர்.

இதுகாலவரை தானாகவே திட்டமிட்டு, நடைமுறைகளைத் தானாகவே வகுத்து நடைமுறைப்படுத்தி வந்தவர் பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை. இவ்வாறு நடைபெற்றமையினால் பல மூத்த இராணுவ அதிகாரிகளின் கசப்பான எதிர்ப்புகளுக்கு அமைச்சர் ரத்வத்தை முகங்கொடுக்க வேண்டியவரானார். ஜனாதிபதி வகுத்துள்ள ஒன்றிணைப்புத் திட்டத்தை அமைச்சர் ரத்வத்தை கடுமையாக எதிர்த்து வருகிறார்.

நடைமுறைக்குச் சாத்தியமற்ற காலக்கெடுக்களைக் கூறி அவசரப்படுத்தும் தாக்கங்களும் இனிமேல் இருக்கமாட்டாது என்று பாதுகாப்புத்துறை உயர் பீடங்களுக்கு உறுதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. தீர்க்கமான கால எல்லையை நிர்ணயித்து அதற்கிடையில் உரிய பலனைப் பெறுவதையே அரசாங்கம் எதிர்பார்க்கும்.

இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான பிரதான விநியோகச் சாலையைத் திறப்பதற்கு கடந்த 18 மாதங்களாக ஏராளமான உயிர்களை இழந்தும் கோடிக்கணக்கான ரூபா பெருமதியான பொருளை இழந்தும் உரிய பலன் கிடைக்கவில்லை. அதே வேளை யாழ்குடாநாட்டில் நிர்வாக இயந்திரத்தைச் சீர்குலைக்கவும் குடாநாட்டுடனான ஏனைய பகுதிகளின் ஆகாயம் மற்றும் கடல் வழிகளினூடான தொடர்புகளை முழுமையாகத் தடுக்கவும் புலிப்படையினர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

உளவுத் துறையினர் இவை தொடர்பாகக் கொடுத்த தகவல்களை வைத்து உயர் மட்டக்கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது. ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பாதுகாப்புச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்டபெந்தி, இராணுவ அதிகாரி லெப். ஜென. ரோகன் டி.எஸ்.தலுவத்த, மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோரும் கலந்து கொண்டனர் என்றும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. ■

# யாழ் நிலவரம் ஆராய மாநாடு ஏன்?
## பின்னணி குறித்து பலத்த சந்தேகம்!

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள், புதைகுழிகள் பற்றிய செய்திகள் சர்வதேச ரீதியாக இலங்கை அரசுக்கு அபகீர்த்தியை உண்டாக்கியுள்ளன.

யாழ் குடாநாட்டு அபிவிருத்தி என்ற பெயரில் பெரும் நிதியை வெளிநாடுகளில் இருந்து பெறும் முயற்சிகளும் தடைப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் அரசு உள்ளூராட்சித் தேர்தல் நடத்தியதற்கான காரணங்களில், வெளிநாடுகளில் அபிவிருத்தி நிதி பெறுவதும் ஒன்றாகும்.

ஆனாலும் அரசே எதிர்பார்க்காமல் தோன்றிய செம்மணி விவகாரம் யாழில் நல்லதோர் சூழ்நிலை நிலவுகிறது என்று அரசு கூறமுடியாமல் செய்துவிட்டது.

செம்மணி புதைகுழி விடயத்தில் அரசு தான் தாமதம் செய்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

செம்மணி விவகாரத்தில் தான் ஆர்வமாக இருப்பதாகவும் விரைவாக நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் ரூபவாஹினி பேட்டியில் ஜனாதிபதி கூறியிருந்தார்.

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக உதவத் தயார் என்று தாம் அனுப்பிய கடிதத்துக்கு அரசு பல மாதங்களாகியும் பதில் போடவில்லை என்று சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்கமாகக் கூறியுள்ளது.

இந்நிலையில் யாழ் குடாநாட்டில் புலிகள்தான் அமைதிக்குக் கேடு விளைவிக்கிறார்கள் என்று வெளியுலகுக்கு காண்பிப்பதற்காக தமிழ்க் கட்சிகளது தயவை நாடியுள்ளது அரச தரப்பு.

இதன் முதற்கட்டமாக யாழ் நிலவரம் தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்க் கட்சிகளுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்க் கட்சிகள் யாவும் தம் பக்கம் நிற்பதாகவும், யாழ் குடாநாட்டில் அமைதியை ஏற்படுத்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக காண்பிக்கவும் இந்த மாநாடு உதவும் என்று கருதப்படுகிறது.

### நிதி நெருக்கடி

நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள அரசுக்கு யாழுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்காக என்று பெறப்படும் நிதி உதவி அவசியப்படலாம். அதற்கான தயாரிப்பே இம் மாநாடு என்றும் கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்குக்கு என்று ஒதுக்கப்படும் நிதி அங்கு வந்து சேர்வதில்லை என்று முன்னாள் ஆளுநர் காமினி பொன்சேகா கூறியதை இதுவரை அரசு மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் நலன்களுக்காக ஒன்றுபட தயாராக இல்லாத தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் மட்டும் ஒன்றாக அமரச் சம்மதித்துள்ளன.

தமிழ்க் கட்சிகள் அடுத்த தேர்தலில் சில ஆசனங்கள் பெறுவதையே முக்கியமான நோக்கமாகக் கொண்டுள்ளன. அதற்கான வேலைத்திட்டத்தில் ஜனாதிபதியை சந்தித்துவிட்டு அறிக்கைவிடுவதும் ஒன்றாகும். எனவே மாநாட்டின் நோக்கம் என்னவென்று ஆராய்வதைவிட, அதனை தமது விளம்பரத்துக்கு பயன்படுத்துவதையே விரும்புவர் என்றும் அரசியல் அவதானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல, மட்டக்களப்பில் கூட நிலைமை பதற்றமாகவே உள்ளது. அப்படியிருக்க யாழ் நிலை பற்றி மட்டும் மாநாடு கூட்டப்படுவது ஏன் என்று கூட தமிழ்க் கட்சிகள் கேள்வி எழுப்பவில்லையே என்றும் அவர்கள் ஆச்சரியம் தெரிவித்தனர். ●

# "புலிகள் பசித்தாலும் வெற்றிலை உண்பதில்லை!"

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து உயிலங்குளம் ஊடாக வவுனியா வந்த மக்களுக்கு சீருடையினர் சில நிபந்தனைகள் விதித்துள்ளனர்.

திரும்பி வரும்போது மண்ணெண்ணெய் கொண்டு வரக்கூடாது. மூன்று கிலோ உருளைக் கிழங்கு மட்டுமே அனுமதிக்கப்படும். 25 வெற்றிலை மட்டுமே எடுத்து வர வேண்டும் என்று பெரிய பட்டியலே கொடுக்கப்பட்டதாம்.

இது புலிகளுக்கான தடையாகத் தெரியவில்லையே. புலிகளுக்கு வெற்றிலை ஏன்? என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். வெற்றிலைத் தடையால் வன்னியில் ஒரு வெற்றிலை 5 ரூபா விற்கிறதாம். இதுபற்றிக் கூறிய ஒரு பொதுமகன் "புலிகள் பசித்தாலும் வெற்றிலை உண்பதில்லை" என்று கூறினார்.

மரக்கறி எண்ணெயும் எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் புலிகள் தமக்கான எண்ணெய் வகைகளை தாமே தயாரிக்கின்றனர். இத்தடையும் பொது மக்களையே பாதிக்கிறது. ■

# தடை எங்கே போனது?

சமீபத்தில் வடகடலில் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் காணாமல்போன 17 கடற் படையினரைத் தேடும் பணி தொடர்வதாக படைத் தரப்பு கூறியுள்ளது.

லயன் எயார் விமானம் வீழ்ந்தபோது மட்டும் பயணிகள் உடல்களைத் தேட பாதுகாப்பு பிரச்சனை தடையாக இருப்பதாகக் கூறப்பட்டது. இப்போது படையினர் உடல்களை தேடுவதற்கு மட்டும் பாதுகாப்பு பிரச்சனை தடையாக இல்லையோ? என்று விமானத்தில் பலியானவரின் உறவினர் ஒருவர் விசனப்பட்டார். ●

# திட்டமிட்ட தாமதம்

யாழ் குடாநாட்டில் இராணுவ நிர்வாகம் நடப்பதாகக் கூறுவதை மறுத்த மேஜர் ஜெனரல் பலகல்ல சமீபத்தில் பேட்டியளித்திருந்தார்.

"யாழில் சிவில் நிர்வாகம்தான் நடக்கிறது. அங்கு யாருக்கு பாதுகாப்பு தேவையானாலும் வழங்கத் தயாராக உள்ளோம்!" என்று கூறியிருந்தார்.

ஆனால், கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் சட்டமா அதிபர் கருத்துத் தெரிவிக்கும்போது: "செம்மணி புதைகுழிகளை ஆராய பாதுகாப்புப் பிரச்சனை இருக்கிறது. அடையாளம் காட்ட இராஜபக்ஷவை கொண்டு செல்லக்கூடிய பாதுகாப்பான சூழல் இல்லை" என்று கூறியிருந்தார்.

செம்மணி விவகாரத்தை இழுத்தடித்து மூடி மறைப்பதற்கான முயற்சிகளே நடந்து வருகின்றன என்று மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

# அகதிகளுக்கு தரமற்ற உணவு
## "உங்களுக்கு இது போதாதா?"

(நமது நிருபர்)

வவுனியாவில் அரசால் நடத்தப்படும் அகதி முகாம்களில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தங்கியுள்ளனர்.

1996ம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் பின்னர் வன்னியில் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களே அகதிகளாக உள்ளனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருமாறும், சகல வசதிகளும் உண்டு என்றும் அழைத்துவிட்டு, தற்போது இவர்கள் விடயத்தில் பாராமுகமாக உள்ளனர். அரச அதிகாரிகள் காட்டும் அலட்சியம் அகதிகளை விரக்திக்கு உள்ளாக்கியுள்ளது.

தக்க வசதிகள் செய்து தருமாறு அகதிகள் கேட்டால், "வன்னியில் இருந்தபோது உங்களுக்கு ஒழுங்கான மலசலகூடம் இருந்ததோ, மின்சாரம் இருந்ததோ, கொட்டிலில் தானே இருந்தீர்கள்?" என்று அதிகாரிகள் கேட்கிறார்களாம்.

"அங்கு கொட்டிலில் இருந்தாலும் நிம்மதியாக இருந்தோம்!" என்று அகதிகள் புலம்புகின்றனர்.

21.10.98 அன்று வவுனியா பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரியில் உள்ள நலன்புரி நிலையத்தில் மிகமோசமான மதிய உணவு அகதிகளுக்குத் தரப்பட்டதாம்.

அதனை உண்ண முடியாது என்று அகதிகள் கூறியபோது, "யார் யாருக்கு நாம் பணம் கொடுக்க வேண்டி இருக்குது தெரியுமா?" என்று உணவு வழங்கும் குத்தகைக்காரர் துள்ளினாராம். அகதிகள் உண்ணா விரதம் இருக்கத் தலைப்பட்டதால், இரவு பத்து மணியளவில் பாணும் பருப்பும் கொடுக்கப்பட்டதாம். அகதி முகாம்களுக்கு உணவு சமைத்து வழங்குவதை குத்தகை எடுத்து பெரும் பணக்காரராக மாறியவர்கள் பலர் உள்ளனர்.

மதிய உணவுக்கு பீட்ரூட், ஈரப்பலாக்காய் போன்றவைதான் அநேகமாக கொடுக்கப்படுகிறதாம்.

இவைபற்றி அகதிகள் புகார் செய்தால் வெளியே செல்வதற்கான நாலு மணிநேர பாஸ் முகாம் பொலிசாரால் மறுக்கப்பட்டு விடுமாம்.

### முறையீடு

இதேவேளை 3.11.98 அன்று பூந்தோட்ட நலன்புரி நிலைய அகதிகள் தங்கள் அவல நிலையை சுகாதார பரிசோதகர், அரச அதிபர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர்.

27.10.98 அன்று தரப்பட்ட கறிக்குள் கைவிரல் புண்ணுக்குக் கட்டிய துணி கிடந்திருக்கிறது. அன்றைய இரவு உணவில் ஆணிகளும் கற்களும் கிடந்துள்ளன.

29.10.98 அன்று உணவுக்குள் உடைந்த போத்தல் துண்டுகள் கிடந்தன. அதில் ஒரு துண்டை சிவானந்தன் என்பவரது குழந்தை விழுங்கிவிட்டது. இவற்றையிட்டு முகாம் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டும் பொலிசாரிடம் புகார் செய்தும் கண்ட பலன் ஏதுமில்லை என்று அகதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் உண்ணும் தரமற்ற பிட்டு வெளியே கொட்டப்பட்டதாகவும், அதற்கான பணம் மட்டும் உணவுக் குத்தகைக்காரருக்குக் கொடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. உணவுக் குத்தகைக்காரருக்கும் முகாம் அதிகாரிகளுக்கும் இடையே பங்கீடுகள் உள்ளனவாம். ●

# கொழும்புத் துறைமுகத்தில் தமிழ் பேசுவோருக்கு அவஸ்தை!
## தமிழ்-முஸ்லிம் ஊழியர்கள் திண்டாட்டம்!

கொழும்புத் துறைமுகத்தில் தொழில் புரியும் சுமார் 2500க்கு மேற்பட்ட தமிழ்-முஸ்லிம் ஊழியர்கள் தற்சமயம் அங்குள்ள பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பெரும்பான்மை இன ஊழியர்களின் இனவாத நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகக் கூறுகின்றனர்.

துறைமுகத்தின் சகல பிரிவுகளிலும் தற்சமயம் தமிழர்களும் முஸ்லிம்களும் கடமை புரிகின்றனர். முன்னர் தமிழ் வாடையே வீசாத பகுதியில் இப்பொழுது தமிழ் பேசப்படுவதால் பல நேரடியான, மறைமுகமான தொல்லைகளுக்குத் தாங்கள் ஆளாவதாக இந்த ஊழியர்கள் வேதனைப்பட்டுக்கொள்கின்றனர்.

முஸ்லிம்கள் 'ஜிஹாத்' என்ற கண்ணோட்டத்திலும், தமிழர்கள் 'கொட்டி' (புலி) என்றும் அழைக்கப்படுகிறார்களாம். பெரும்பான்மை இனத் தொழிலாளர்களின் இனத்துவேஷப் பேச்சுக்களாலும், பல்வேறு நச்சரிப்புக்களாலும் மனமுடைந்த பல தமிழ் பேசும் ஊழியர்கள் அச்சத்துடன் வெளியேறுகின்றனர்.

தமிழ் ஊழியர்கள் விசாரணை என்ற போர்வையில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடு விக்கப்படுகின்றனர். விடுதலையானவர் மீண்டும் வேலைக்கு வந்தால் 'கொட்டி' என்றே அழைக்கப்படுகின்றாராம். இதன் விளைவாக பல தமிழ் இளைஞர்கள் துறைமுக வேலையை விட்டே அகன்று விடுகின்றனர் என்று கூறப்படுகிறது.

பல தமிழ்-முஸ்லிம் ஊழியர்கள் எவ்வித காரணமுமின்றி தண்டனை இடமாற்றத்திற்கு உட்பட்டுள்ளனராம். பண்டாரநாயக்க இறங்கு துறைப்பகுதியில் கடமையாற்றிய 8 முஸ்லிம்களும், 2 தமிழர்களும் சமீபத்தில் காரணமின்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலதிக நேரக் கொடுப்பனவுக்குரிய வேலைகளும் இவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள்.

இதனைவிட துறைமுகப் பாதுகாப்பு ஊழியர்களாக தமிழ்-முஸ்லிம் உத்தியோகத்தர்களும் கடமையாற்றுகின்றபோதிலும் சந்தேகம் காரணமாக அப் பாதுகாப்பு ஊழியர்களையே அடையாள அட்டை சோதித்து உள்ளே அனுமதிக்குமளவுக்கு நிலைமை மோசமடைந்திருப்பதாக நெருக்கடிக்குள்ளான துறைமுகத்தின் தமிழ்பேசும் ஊழியர்கள் 'முரசு'க்குத் தெரிவித்தார்கள். ●

# தொல்லை தவிர்ப்புக் குழுவும்
## தொடர்பில்லாத நடவடிக்கைகளும்!

சட்ட பூர்வமற்ற கைதுகள், தொல்லைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இதனுடன் சம்பந்தப்பட்ட எதுவித நடவடிக்கைகளையும் அதிகார பூர்வமாகத் தடுக்க இலாயக்கில்லாத, கையாலாகாத குழுவென்பதை 'முரசு' முன்னரே தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறது.

இதை உறுதிப்படுத்தும் விதமாக இக்குழுவிற்குத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாக குழுவினர் எடுக்கும் உப்புச் சப்பில்லாத நடவடிக்கைகள் பற்றி அவர்கள் முறைப்பாட்டாளருக்குத் தெரியப்படுத்தும் விதம் இதுதான்: "பொலிஸ், படையினர் அடித்துத் துன்புறுத்தியது தொடர்பாக தங்களது கடிதத்தில் காட்டப்பட்டுள்ள விடயம் குறித்து மேற்கொண்டு விசாரணை செய்வதற்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு முறைப்பாடு செய்யும்படி தங்களுக்குத் தெரியப்படுத்துமாறு குழு என்னைப் பணித்துள்ளது என்பதை அறிவிக்கிறேன்..." என்று அக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒவ்வொருவருக்கும் கடிதம் அனுப்பி வருகிறார்.

காரணமின்றிக் கைதுசெய்து அடித்துத் துன்புறுத்தித் தொல்லைகள் தருதல் சம்பந்தமாக முறைப்பாடு செய்வோருக்கு மேற்படி சட்ட பூர்வமற்ற கைது தொல்லைகள் தொடர்பாக ஜனாதிபதிக் குழுவினர் எடுக்கும் நடவடிக்கையாக இப்படியான கடிதங்களைத்தான் அனுப்பி வருகிறார்கள்.

அதுவும் இந்தக் குழுவிற்கு முறைப்பாடு கிடைத்து சுமார் 20 நாட்களின் பின்னர்தான் முறைப்பாட்டாளருக்கான பதில் அனுப்பப்படுகிறது.

வெறும் மாயையான இந்தக் குழு நீதி, அரசியலமைப்பு விவகார இன உறவு அலுவல்கள் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருகிறது. ■

# கிராம சேவகர்கள் கொழும்பில் தடுத்து வைப்பு!
## சொந்தப் பகுதியில் விசாரணை செய்க!

கிராம சேவகர்களைக் கொழும்புக்கு அழைத்து விசாரணை செய்வதை நிறுத்தி அவர்களை விசாரணைசெய்ய வேண்டியிருப்பின் மட்டக்களப்பிலேயே விசாரணைக்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரச சேவை கிராம உத்தியோகத்தர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

"திடீர் திடீரென கிராமசேவை உத்தியோகத்தர்கள் புலன் விசாரணைப் பிரிவினரால் கொழும்புக்கு விசாரணைக்கு வருமாறு அழைக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

சென்ற 16.11.1997 அன்று புலன் விசாரணைப் பிரிவினரால் கொழும்புக்கு வரவழைக்கப்பட்ட இ. சந்திரசேகரம் எனும் கிராமசேவை உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு கொழும்புச் சிறையில் ஒருவருடமாக வாடுகிறார். நோய்வாய்ப்பட்டவரான அவரது மனைவி தனது ஐந்து பிள்ளைகளுடன் சீவனோபாயத்திற்கு வழியின்றித் தவிக்கிறார். கிராமசேவகரின் சம்பளப்பணம்கூட கடந்த ஒரு வருட காலமாக வழங்கப்படவில்லை. அவரது சம்பளப் பணத்தை மனைவிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்மீதான விசாரணையைத் துரிதப்படுத்த வேண்டும்.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலை ஏனைய கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும் ஏற்படக்கூடாது." இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரச சேவை கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் திரு.கே. வாமதேவன் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார். ■

# சிறப்புத் தலையங்கம்
## வளமழிப்பு

'வன்னியில்
காடுகளை அழிக்க
உத்தரவு' என்று
செய்தி வெளியாகியுள்ளது!

வவுனியா முதல்
மாங்குளம் வரை
இருபுறமும்
தலா ஐம்பது மீட்டர்
காடுகளை அழிக்க
முடிவு செய்யப்பட்டுள்ளதாம்!

வவுனியா முதல்
மாங்குளம் வரையான
நீளப்பாதை 44.5 கிலோமீட்டர்.
எனவே அழிக்கப்படவுள்ள
காடுகளின் மொத்தப் பரப்பு
சாதாரணமானதல்ல,

44 இலட்சத்து
50 ஆயிரம் சதுரமீட்டர்!

வீட்டுக்கு ஒரு மரம் நடு
என்கிறார்கள்!
நாட்டு மரங்களை
வெட்டியழிக்கலாமா?

பானைக்குள் சிக்கிய
ஆட்டை மீட்க
தலையை வெட்டிய
கதையாக இருக்கிறது!

புலிகளின் ஏவுகணைகளுக்கு
விமானம் தப்புவதற்காக
நாட்டின் வளத்தை
அழிப்பது
என்ன நியாயம்?

இதனால் ஏற்படப்போகும்
இயற்கைப் பாதிப்புக்கள்
மிகக் கடுமையாக இருக்கும்!

வடக்கில் மட்டுமல்ல,
நாடு முழுவதும்
சுற்றாடல் பாதிப்புக்கு
உள்ளாகும்.
காலநிலைகள் கெடும்!

மரங்களை வெட்டினால்
ஏவுகணையிடம் இருந்து
தப்பலாமாம்!
புலிகள் ஷெல்லடித்தால்
மரங்கள்தானே
காப்பாற்றுகின்றன!

ஆகவே, எவ்வித
திட்டமும் இன்றி
பின்னடைவுகளுக்கு
காரணம் தேடும்
முயற்சிகளே இவை!

யார் அழிந்தாலென்ன....
வளம் ஒழிந்தாலென்ன
வெற்றியே முக்கியம்
என்ற எண்ணப்பாடு
பொறுப்பானதுதானா?

இந்த மாபெரும்
வளமழிப்பு முயற்சியை
கண்டிக்கக்கூட
இங்கு எவரும் இல்லை!

வெட்டப்படும் மரங்கள்
ஒவ்வொன்றும்
பல இலட்சம் தேறும்!
அப்பணம் யாரிடம் சேரும்?

மட்டக்களப்பு வாகரையிலும்
சமீபத்தில்
மரம்வெட்டு நடந்திருக்கிறது!

புலியழிப்பு என்பது
பல்வேறு அழிப்புக்களையும்
உள்ளடக்கியதோ
என்றே கருதவேண்டியுள்ளது!

-ஆசிரியர்-



படிப்பகம்

www.padippakam.com

# மக்களின் விருப்பமும் பா.உ.வின் எதிர்ப்பும்

(திருமலை நிருபர்)

தனியார் கட்டடமொன்றில்-பொருத்தமற்ற இடத்தில் இயங்கும் மூதூர் ஆயுள்வேத மருந்தகத்தை வசதியான இடத்துக்கு மாற்றித் தருமாறு பொதுமக்களும், பொதுஸ்தாபனங்களும் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் மேற்படி தனியார் கட்டடத்தை அரசாங்கப் பணத்தில் திருத்தியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் பா.உ.ஜனாப் நஜீப்.

ஆயுள்வேத மருந்தகத்தை இடமாற்ற ஆயுள்வேதப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்ததும் அம்முயற்சி பா.உ. நஜீப் அவர்களின் தலையீட்டால் தடைப்பட்டதும், இதனால் மூதூர் பொதுமக்களும் ஸ்தாபனங்களும் வெகுண்டெழுந்து தங்கள் பலமான ஆட்சேபனையைப் பாராளுமன்ற உறுப்பினருக்குத் தொவித்ததும் ஒக்.11-17, 1998 முரசில் செய்தியாக வெளிவந்திருந்தது.

இந்த எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் பாராளுமன்ற உறுப்பினர் தனியார் கட்டடத்தைத் திருத்தியமைப்பதற்காக இரண்டு இலட்சம் ரூபாயை அரச நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார். வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சால் 12.10.98 திகதியிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம்-திருத்த வேலைகளுக்கான மதிப்பிடப்பட 20.10.98க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளர் திரு டபிள்யூ.ஏ. திசேரா, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுக்கு எழுதியுள்ள பதிலில் 'மேற்படி நிதியைத் தனியார் கட்டடத்துக்குப் பயன்படுத்தலாமா, என்பதை அறியத்தரவும்' எனத் தெரிவித்துள்ளார்.

தனியார் கட்டடம் என்பதை நன்கு அறிந்திருந்தும்- அந்த இடம் மக்களால் விரும்பப்படவில்லை என்பதை உணர்ந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார் என்று மூதூர் மக்கள் கேட்கிறார்கள். ●

# புலிகளின் அனுமதி தேவை – மின்சார ஊழியர் தெரிவிப்பு

ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஹபறணை, இங்கினியாகலை ஆகிய இருவழியின் விநியோகத்தையும் புலிகள் இயக்கத்தினர்- மின் கம்பங்களையும் கோபுரங்களையும் வீழ்த்தியதன் மூலம் கட்டம் கட்டமாக மின் விநியோகத்தை தடைப்படுத்தினர்.

புலிகளின் வசமுள்ள பகுதிகளையும் சேர்த்து அபிவிருத்தித் திட்டங்களுக்கான (குறிப்பாக மின்விநியோகம்) வாக்குறுதியை அளித்துவிட்டு புலிகளது நிர்வாகத்திற்கும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியதாலேயே அரச நிருவாகத்திற்கும் அது சம்பந்தமான அரசாங்க உயர் பிரமுகர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இழுபறி நிலையே இது என்று தெரியவருகிறது.

புலிகளின் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திக்கு என ஒப்புக் கொள்ளப்பட்ட நிதி வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டதும் தற்சமயம் மட்டக்களப்பு மாவட்ட அரச நிர்வாகத்தை புலிகள் சீர்குலைப்பதற்கான காரணங்களில் ஒன்று என்று கூறப்படுகிறது.

இதுவரையில் வெவ்வேறு இடங்களில் 32 மின்கம்பங்களும், கோபுரங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. முதலில் சேதமாக்கப்பட்ட மின்கம்பங்களின் திருத்த வேலைக்காகச் சென்ற 30 இ.மி.ச. ஊழியர்களையும் புலிகள் விசாரணைக்கு அழைத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட மின்சாரசபை ஊழியர்கள் அனைவரும் பிராந்திய மின் பொறியியலாளருக்கு மின் கம்பங்கள் வீழ்த்தப்பட்ட இடங்களில் அச்சம் காரணமாக அவைகளைத் திருத்தும் பணிகளில் ஈடுபட மாட்டோம் என்று தனித்தனிக் கடிதங்களை அனுப்பிவைத்தனர். அதனையடுத்தே புலிகளின் அனுமதி பெறும் முயற்சிகள் ஆரம்பமாகின.

சமீப சில காலத்திற்கு முன்னர் புலிகளின் ஒப்புதல் பெறாது திருத்த வேலைகளில் ஈடுபட்ட மின்சாரசபை ஊழியர்கள் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பதும் நினைவிருக்கலாம். ■

# பாவிக்கப்படாத ஜெனரேட்டர்

## அஞ்சல் ஊழியர்கள் அதிருப்தி

"மட்டக்களப்புப் பிரதம அஞ்சல் அலுவலகத்தில் இருக்கும் மின்சார ஜெனரேட்டர் எந்த நோக்கத்துக்காக அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் அன்பளிப்புச் செய்யப்பட்டதோ, அதற்குப் பயன்படுத்தாமல் அழகுக்காகவா வைத்திருக்கிறார்கள்?" இவ்வாறு அஞ்சல் அலுவலக ஊழியர்கள் கேட்கிறார்கள்.

மின்சாரம் இல்லாத வேளைகளில் இரவுக் கடமைகளில் ஈடுபடும் ஊழியர்கள், அதிகாரிகள் நன்மை கருதித்தான் ஜெனரேட்டர் இருக்கிறது. ஆனால் இங்கே ஜெனரேட்டரை வைத்துக்கொண்டு மூன்றே மூன்று பெற்றோமாக்ஸ் விளக்குகளுடன் அங்குமிங்கும் ஓடித்திரிந்து இரவுக் கடமைகளை நாம் செய்ய வேண்டி இருக்கிறது!" என்று அஞ்சலக ஊழியர்கள் நிருபரிடம் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் மாவட்டத்தின் பிரதான அலுவலகமான மட்டக்களப்பு அஞ்சலகத்தில் குவியும் கடிதங்களை உடனுக்குடன் உரிய பகுதிகளுக்கு அனுப்பும் நடவடிக்கை தடைபடக்கூடாதென்ற நல்லெண்ணத்தினால் அரச சார்பற்ற நிறுவனமொன்று அஞ்சலகத்துக்கு ஜெனரேட்டர் ஒன்றை வழங்கியிருந்தது.

எனினும் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு. சந்தான கிருஷ்ண ஐயர், திணைக்களத்தில் நல்லபெயரெடுக்கும் நோக்கில் ஜெனரேட்டர் இயக்குவதற்கு டீசல் பெற்றுக்கொள்ளும் செலவினத்தை அங்கீகரிக்க மறுத்து வருகிறார். இதனால் இரவுக் கடமையிலிருப்போர் பெற்றோமாக்ஸ் விளக்குகளை அங்குமிங்கும் கொண்டு அலைய வேண்டி இருக்கிறது.

இங்கே இரவுக் கடமையின்போது 169 நிலையங்களுக்குத் தபாற் பைகள் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு தபாற்பைக்குள் பல பிவுத் தபாற்பைகள் இடப்பட வேண்டியுள்ளன. இதன்படி பார்த்தால் ஆகக் குறைந்தது ஒரு இரவில் 500 பைகளாவது கட்ட வேண்டி இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

'தெய்வம் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடார்' என்பது சரியாகத்தான் இருக்கிறது. ●

# தமிழ்மொழி அமுலாக்கம் தலைகீழ்!

(நமது நிருபர்)

ஊவா மாகாண பண்டாரவளைப் பிரதேசத்தில் கணிசமான அளவு தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். ஏராளமான ஆசிரியர்களும், தகைமை பெற்ற தமிழ் பேசும் உத்தியோகத்தர்களைக் கொண்ட பகுதியே இது. எனினும் அங்கு தமிழ் மொழி அமுலாக்கம் கவனிப்பற்று உள்ளதைப் பாருங்கள்- அவற்றுள் சில:

* ஊவா மாகாண கல்வியமைச்சு முகாமைத்துவ ஆசிரியர் பயிற்ச்சி நிலையம் பண்டாரவலை.
* அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டு பிரிவு.
* பண்டாரவளை நூலகத்தில்: வாசியசாலை. மனி.
* நீர்ப்பாசன மின்சக்தி ரிபெருள் அமைச்சு.
* பண்டாரவளைப் பிரதேச செயலகத்தில்: நிலம் ரிதாடர்பான நடவடிகை, அபிவிருத்தி.

மேற்கண்டவாறு அங்குள்ள அரச திணைக்கள, கூட்டுத்தாபனங்களின் முகப்பு அறிவித்தல்களில் ஏராளமான தமிழ்ச் சொற் பிழைகள் கவனிப்பாரின்றிக் காணப்படுகின்றன. இது தொடர்கதையாய்த்தான் ஆகுமா? ●

## அறிவித்தல்

1988 ஜனவரி மாதம் முதல் 1997 செப்டெம்பர் மாதம் வரை காணாமல்போனோர் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கான பிராந்திய ஆணைக் குழுக்களுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து சமர்ப்பித்த முறைப்பாடுகளுள் விசாரணைக்குட்படுத்தப்படாத முறைப்பாட்டுக்காரர்களுக்கு இவ்வாணைக்குழு அனுப்பிய கடிதங்களுள்- பெருமளவிலானவை- குறித்த நபர்கள் அங்கு இல்லை என்ற காரணத்தினால் எமக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

ஆகவே அவ்வகையிலான யாழ் மாவட்டத்தில் குறித்த காலத்திற்குள் காணாமல் போனவர்கள் பற்றி முறைப்பாடு செய்தவர்கள், தாமதம் இன்றி தாங்கள் தற்சமயம் வதியும் இடத்தின் விலாசத்தினை கீழ் தரப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பிவைத்தால் குறித்த முறைப்பாடுகளின் விசாரணைகள் சம்பந்தமாக தொடர்புகொள்ளக் கூடியதாக இருக்கும்.

இலங்கை மன்றம்,
இல.27 சுதந்திர அவெனியு,
கொழும்பு-07.

எம்.சி.எம். இக்பால்,
செயலாளர்,
ஜனாதிபதி ஆணைக்குழு


## O/L மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள்

O/L பரீட்சை எழுதும் மாணவர்களே! வேகமாக முன்னேறும் நவீன கம்பியூட்டர் உலகத்தில் உங்களுக்கான கணனிப் பாடநெறிகளைக் கற்பதற்கு ஓர் சிறந்த வாய்ப்பு. கணனிப் பாடநெறியை புலமைப் பரிசில் மூலம் இலவசமாக கற்பதற்கு **Metro Computer World** ஒரு அரிய சந்தர்ப்பத்தை பெருமையுடன் வழங்க மீண்டும் முன் வந்துள்ளது.

பாடநெறிகள்
- Computer Literacy
- Electronics Construction Microelectronics
- Database (Access)
- Programming (Pascal, Visual Basic)
- Word Processing (Ms Word)
- Spreadsheet (Excel)
- Payroll, Accounts, Stock Control (DacEasy)
- Presentation Graphics
- Computer Control Technology, Internet, Email.

புலமைப்பரிசை பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது கீழ்க்கண்ட கூப்பனை நிரப்பி ரூபா 100 இனை காசுக்கட்டளையாக இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு 25-12-98 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி உங்களுக்கான புலமைப்பரீட்சையில் தோற்றுங்கள். (காசுக்கட்டளை வெள்ளவத்தை தபாற் கந்தோருக்கு எடுக்கப்படல் வேண்டும்.) பரீட்சைக்கான நேரம் இடம் திகதி பரீட்சார்த்திகளுக்கு பின்னர் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி

**Metro Computer World**
17, Charlemont Road, Colombo-06. T.P : 599479, 074-511164

Name :-................ **மாதிரி விண்ணப்பப்படிவம்
Address :-................ School :................
Class :-................ Sex :-................ Phone:................

பாடநெறி முடிந்ததும் என்ன செய்வது என்ற கவலை வேண்டாம். நீங்களும் எமது கணனி நூலகத்தில் ஒரு உறுப்பினர்கள். எந்த நேரத்திலும் கணனியைப் பயன்படுத்த முடியும்.

உங்களின் கணனி உலகம்
Metro Computer World
இப்பாடநெறி ஆரம்பமாகும் திகதி 10.01.1999

## மகளிர்க்கான பயிற்சி

தையல் கலை, பின்னல், பூக்கள் செய்தல், பெப்ரிக் வர்ணம் பூசுதல் (Fabric Painting) மனையியல், சமையல், ஆங்கிலம் ஆகியனவற்றில் ஆறு மாத கால பயிற்சி அளிக்கப்படும். காலை 8.30மணி தொடக்கம் பகல் 2.30 மணிவரை சகல கிழமை நாட்களில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அடுத்த பயிற்சிக்கு நவம்பர் 9ம் திகதி தொடக்கம் நேரில் வரவும்.
கொழும்பு நகர பணியகம், 135, டாம் வீதி, கொழும்பு-12. (கச்சேரியின் முன்னால்)

**வத்தளையில்** புதிய கணனி வகுப்புகள் (A/L முடித்த மாணவர்களுக்காகவும்) (Page Maker, Corel Draw, MS Excel, MS Access, MS Word, Word perfect, Lotus 1-2-3, dBase III+, Diploma in Desk Top Publishing, Diploma in Windows) திங்கள், புதன், வெள்ளி, ஆகிய நாட்களில் ஆரம்பமாகின்றன. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் Type Setting செய்து கொடுக்கப்படும்.
D.S. COMPUTER STUDIES
6A, HEKITTA ROAD, WATTALA. TEL: 075-349247

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 21ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067. (நன்மை பயப்பவை மட்டும் செய்து தரப்படும்.)
வியாழன் விடுமுறை

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

- தொய்வு
- இளைப்பு
- மூச்சுத்தட்டல்
- சளி
- தலைவலி
- இழுப்பு
- மாய்ச்சல்
- இருமல்
- மூக்கடைப்பு
- தும்மல்
- பீனிசம்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

30.10.97 வீரகேசரி - தினக்குரல் பேப்பரில் வெளிவந்தது.
அஸ்மா நோயைக் குணப்படுத்திய டாக்டருக்கு நன்றி

பலவருடங்களாக இரவு பகலாக நித்திரையின்றி அமைதியின்றி அஸ்மாவால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த நான் தற்சமயம் இல.25, செனட் சில்வெஸ்டர் றோட், கல்கிசையிலுள்ள அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களிடம் சிகிச்சை பெற்ற பின்னர் பூரண சுகமடைந்து மறுபிறவி எடுத்துள்ளேன் என்பதனை இந்நோயால் கஸ்டப்படும் பிறருக்கு தெரிவிப்பதன் மூலம் டாக்டருக்கு எனது நன்றிக்கடனைச் செலுத்துகின்றேன். இப்படிக்கு ராஜ் பொன்னன்டோ 156/44, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.

டாக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
Ph.D.H(Ind): M.B.B.S.C.H (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)
தினமும் மாலையில் 4மணிமுதல் 7மணிவரை

02.05.98 வீரகேசரி பேப்பரில் வெளிவந்தது.
அஸ்மா நோயைக் குணப்படுத்திய டொக்டருக்கு நன்றி

பலவருடங்களாக அஸ்மா நோயினால் மிகவும் கஷ்டபட்டு மூன்று நேரமும் மருந்துகள் பாவித்தும் நேர காலமின்றி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்து நடக்கவும் முடியாத நிலையில் சென்ற என்னை 25, சில்வெஸ்டர் வீதி, மவுண்ட்லேவினியா (கல்கிசை) இல் வைத்தியம் செய்யும் அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்கள் சிகிச்சை அளித்து முழுக்குணமடைய வைத்துள்ளார். பல மாதங்களாக மருந்தே பாவிக்காமல் ஒருகாலத்தில் இப்படியான நோயாளியாக இருந்தேனா என்ற நினைப்புக்கூட இல்லாமல் சந்தோஷமா இருக்கிறேன் என்பதை இந்நோயால் கஷ்டபடும் பிற நோயாளர்களுக்கு அறிவிப்பதன் மூலம் என் கண் கண்ட தெய்வமான டொக்டருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். க. மகேஸ்வரி 221/6 நாயககந்த வீதி, ஹெந்தலை, வத்தளை. T.P 933912

தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறைநாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பெற்று வரவும்.
074-201582


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சர்மிளா அன்ரனிற்றோ
07.11.1998

செல்வி சர்மிளா தனது முதலாவது பிறந்த தினத்தை 07.11.1998 அன்று அவுஸ்திரேலியாவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.
அன்பு அப்பா, அம்மா, மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென பேபி சர்மிளாவை வாழ்த்துகின்றனர்.

தகவல்:- அப்பா, அவுஸ்திரேலியா

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



பிரவீணா புஸ்பராஜா (யோபிஹா) 11.09.1998

திருமலையைச் சேர்ந்த புஸ்பராஜா இந்திராணி தம்பதியின் செல்வப் புதல்வி பிரவீணா (யோபிஹா) முதலாவது பிறந்த தினத்தை தனது கொழும்பு இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.
இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, மாமாமாரான நடராஜா, தங்கேஸ்வரன், டினேஸ்குமார், பெரியம்மா சித்ரா, மாமிமாரான செல்வமலர், ஷைலஜா, சித்தி பரமேஸ், சித்தா ஸ்டாலின், அண்ணாமாரான பிரதாப், தனன்ஜன், அருண் பிரசாந்த், ரவின்ஷான், அக்கா வினோ தர்ஷினி, அத்தை கனகா, அங்கிள்மாரான குகன், பத்மன், வசந்தன், ஹரிச்சந்திரா, அசோக், பவான், சாந்தன், மூர்த்தி (மூர்த்தி ஜுவலர்ஸ்-வெள்ளவத்தை) குடும்பத்தினரும், திருகோணமலை அப்பம்மா, அத்தைமார், சித்தாமார், மாமாமார், செல்வநாயகம், யோகானந்தம், சிந்து அத்தை, நந்தன் குடும்பத்தினரும் நண்பர்களான லதா, நிலுக்கா, ஈசன், நந்தினி, கவிதா, வசந்தி, கல்யாணி, லோஜினி, சீதா, பவானி, விஜிதா, பிருந்தா, சாரங்கன் ஆகியோரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் துர்க்கை அம்மன் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்தியுள்ளார்கள்.

தகவல்: மூர்த்தி ஜுவலர்ஸ், வெள்ளவத்தை.


## விளம்பரப் பகுதி

New Victors



பழுது பார்க்கும் இடம்
நியூ விக்ரஸ்
40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ற்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

## மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி:

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road
Clombo 13.
Tel: 342463, 344831, 431137
Fax: 0094 1 342464




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வான்-கடல் விநியோகம் நெருக்கடியில்

## படையினரின் போக்குவரத்து உத்தியும் குறுக்கீடும்

**பெ**ப்ரவரி 23,1998ற்கு பின்னர் வடகடலில் 30.10.98 அன்றுதான் கடற்சமர் மூண்டது.

இவ்வருடம் பெப்ரவரி 23ல் நடைபெற்ற கடற்சமரில் 52ற்கு மேற்பட்ட கடற்படையினர் பலியாகினர். கடற்புலிகள் தரப்பில் பதினொரு கடற்கரும்புலிகள் பலியாகினர்.

வலம்புரி என்னும் இராணுவ சரக்குக் கப்பலும், பவத்த என்னும் தரையிறக்க கப்பலும் கடற்கரும்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டன. இச் சண்டையின்போது போர்க் கப்பல் தப்பியதால் அதிலிருந்த சுமார் 700 படையினர் தப்பினார்கள்.

மிகப் பாரிய கடற்படை தொடரணிமீது பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலே அதுவாகும்.

போர்க்கப்பல் ஒன்று, பீரங்கிப் படகுகள் இரண்டு, டோரா அதிவேகப் படகுகள் இரண்டு, தரையிறக்கக் கப்பல் ஒன்று, இராணுவ சரக்குக்கப்பல் ஒன்று, மொத்தம் ஏழு கடற்கலங்கள் கொண்ட அத் தொடரணியே தாக்குதலில் சிக்கியது.

அத் தாக்குதல் கடற்படையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியது.

தொடரணியாக சென்றால் கடற்புலிகளின் தாக்குதலை முறியடித்துவிடலாம் என்ற நினைப்பை பருத்தித்துறை கடற்சமர் கெடுத்துவிட்டது.

கடற்பாதையூடாக படையினரையும், ஆயுத தளபாடங்களையும் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பான ஒரே வியூகம் கடற்படை தொடரணிதான் என்றே நம்பப்பட்டது.

அந்த நம்பிக்கை பெப்ரவரி 23ல் பலத்த அடிவாங்கிவிட்டது. கடற்சமரில் புலிகளின் பலம் மேலோங்கி வருகிறது என்பதற்கு ஒரு உதாரணம் போல் அந்தச் சமர் அமைந்தது.

அதன் பின்னர் கடல் மூலமான விநியோகங்கள் குறைந்தன. கடற்படை தொடரணிகள், ரோந்துக்கள் குறைந்தன.

வான் பாதை வழியாக யாழ் குடாநாட்டு படையினருக்கு விநியோகங்களை மேற்கொண்டனர். ஆனாலும் போதிய விமானங்கள் விமானப்படையினரிடமும் கைவசம் இல்லை.

ஒரே ஒரு அன்ரனோ 32 ரக விமானம் மட்டுமே போக்குவரத்துக்களுக்கு பாவிக்கும் நிலையில் இருப்பதாக தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல் வான் பரப்பிலும் புலிகளின் ஏவுகணை தாக்குதல் அச்சுறுத்தல் இருக்கிறது.

எனவேதான் யாழ் குடாநாட்டு மக்களுக்கான தனியார் விமான சேவைகள் மற்றும் சரக்குக் கப்பல் சேவைகள் என்பவற்றை படைத்தரப்பு பயன்படுத்த ஆரம்பித்தது.

யாழ் குடாநாட்டுக்கான தனியார் விமான சேவைகளான லயன் எயார், மொனரா விமானங்களில் படையினர் பல முறை கொண்டு செல்லப்பட்டனர். பொது மக்களுக்கான பயண சேவைகள் நிறுத்தப்பட்டு படையினர் ஏற்றி இறக்கப்பட்டதும் உண்டு.

இத் தகவல் புலிகளுக்கு எட்டியதும் தனியார் விமான சேவைகளை நிறுத்துமாறு எச்சரிக்கை கடிதம் தயாரானது. சம்பந்தப்பட்ட தனியார் விமான சேவை நிறுவனங்கள், முகவர் நிறுவனங்கள் என்பவற்றுக்கு அனுப்பட்டன.

"பொதுமக்களுக்கான பயண சேவை என்ற பெயரில் மிகத் தந்திரமாக இராணுவ விநியோக சேவை நடைபெற்றுவருகிறது" என்று புலிகள் குற்றம் சாட்டினார்கள்.

அக் குற்றச்சாட்டை குறிப்பிட்ட தனியார் விமான நிறுவனங்களும் மறுக்கவில்லை. படைத்தரப்பும் மௌனம் சாதித்தது.

குறிப்பிட்ட விமான சேவை நிறுவனங்கள் நினைத்திருந்தால், 'இனிமேல் பொது மக்களின் பயணம் தவிர்ந்த வேறு பணிகளுக்கு சேவை நடத்தப்பட்டமாட்டாது' என்று பகிரங்கமாக அறிவித்திருக்கலாம்.

அதற்கு மாறாக புலிகளின் எச்சரிக்கையை அலட்சியம் செய்ததோடு, சவால் விடுவது போன்று படையினரின் பாதுகாப்புடன் யாழில் பயணச் சீட்டுக்கள் வழங்கத் தொடங்கினர்.

யாழில் முகவர் நிலையம் நடத்த தமிழ் ஆட்கள் தயங்கினால் சிங்கள ஆட்களை போட்டு காரியம் பார்ப்போம் என்ற ரீதியில் செயற்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நாகவிகாரைக்கு முன்பாக இருக்கும் கட்டடத்தில் அலுவலகம் திறந்து பூரணபாதுகாப்புடன் செயற்படவும் முடிவு செய்யப்பட்டது.

'பொதுமக்களை மட்டும்தான் ஏற்றி இறக்குவோம்' என்ற உத்தரவாதம் அளிக்கக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதையே மேற்கண்ட நடவடிக்கைகள் காட்டின.

1996ல் யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை அங்குள்ள மக்களுக்கு அரசு தனது ஏற்பாட்டில் கப்பல் சேவையோ, விமான சேவையோ நடத்த முன்வந்ததில்லை.

சென்ற அரசின் காலத்தில் நூறு ரூபா கட்டணத்தில் யாழுக்கான கப்பல் சேவை நடத்தப்பட்டது. போய் வருவதற்கு மொத்தம் 200 ரூபா போதும். தனியார் விமான சேவையில் போய் வருவதானால் ஆறாயிரத்தி ஐநூறு ரூபாய் தேவை.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு சகல சௌபாக்கியங்களும் தருவதாக அழைத்த அரசு குறைந்த கட்டணத்தில் கப்பல் விடவும் முன்வரவில்லை.

அதே சமயம் தனியார் சேவைகள் யாழ் மக்களிடம் கொள்ளை இலாபம் அடிப்பதற்கு அனுமதி கொடுத்ததோடு, அம் மக்களின் பெயரால் நடைபெறும் பயண சேவைகளை தனது துருப்புக்களின் விநியோக தேவைகளுக்கும் பயன்படுத்தத் தொடங்கியது அரசு.

இந்நிலையில் போதிய எச்சரிக்கை கொடுக்கப்பட்டபின்னரே புலிகளால் லயன் எயார் சுட்டுவீழ்த்தப்பட்டது.

ஒரு யுத்தத்தில் பிரதானமான காரணிகளில் ஒன்று விநியோகப் பாதை. மனித உடலுக்கு இரத்த ஓட்டம் எத்தனை அத்தியாவசியமோ, யுத்தத்தில் விநியோகப்பாதையும் அத்தனை அவசியம்.

கடல் சூழ்ந்த யாழ் குடாநாட்டில் படையினர் வான், கடல் மார்க்கத்தை மட்டும் விநியோகப் பாதைகளாக நம்பியுள்ளனர்.

அப்பாதைகளில் அரச துருப்புகளுக்கு சொந்தமான விமானங்களோ, கடற்கலங்களோ மட்டும் போக்குவரத்தில் ஈடுபட்டால் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதால், பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவைகளை தந்திரமாக உபயோகிக்கும் அவசியமும் படைத்தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் மூலம் புலிகளுக்கு மறைமுகமான செய்தி ஒன்று தெரிவிக்கப்படுகிறது. எமது விநியோகப் பாதையை தடுத்தால் மக்களும் பயணம் செய்ய முடியாது. அதனால் புலிகளை மக்கள் எதிர்ப்பார்கள் என்பதுதான் அந்த மறைமுகமான செய்தி.

லயன் எயார் சுட்டு வீழ்த்தப்பட்டபோது உடல்களை மீட்பதிலோ, அதுபற்றிய தகவல்களை அறிவதிலோ அரசு துளியளவுகூட அக்கறை காட்டவேயில்லை என்பது கசப்பான ஆச்சரியம்.

ஆனால் உடனடியாக தனியார் விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. தாம் போக்குவரத்து நடத்த தயாராக இருப்பதாக கூறியும் கூட பாதுகாப்பு அமைச்சு அனுமதி கொடுக்கவில்லை.

அவ்வாறு நிறுத்திவைத்தால் யாழ் மக்களிடையே பாரிய எதிர்ப்புக்கள், வெறுப்புக்கள் புலிகளுக்கு எதிராகத் தோன்றும். அதனால் வான், கடல் விநியோக பாதைகளில் குறுக்கிடுவதை புலிகள் கைவிடவேண்டி ஏற்படும் என்று நினைத்திருக்கலாம்.

மனித உயிர்கள் மேல் அக்கறை என்ற காரணம் ஏற்கத்தக்கதல்ல. அப்படி அக்கறை இருந்திருந்தால் அக்டோபர் 23ம் திகதி சுமார் 500 படையினருடன் கிட்டத்தட்ட 450 பொது மக்களையும் ஏற்றிக்கொண்டு 'லங்கா முதித்த' கப்பல் திருமலைக்கு வந்துசேர பாதுகாப்பு அமைச்சு எப்படி அனுமதி கொடுத்தது?!

படையினர் சென்றால் தாக்குவோம் என்பதுதான் புலிகளின் எச்சரிக்கை. அப்படியிருக்க படையினருடன் பொதுமக்களை ஏற்றி அனுப்பியுள்ளனர்.

வானைவிட கடலில்தான் புலிகளின் ஆதிக்கம் அதிகம். தாக்குதல் சாதகமும் அதிகம். எனவே தமிழ்ப் பயணிகள் உயிர் முக்கியம் என்று கருதியிருந்தால் படையினருடன் பயணிகளை ஏற்றிவர பாதுகாப்பு அமைச்சு அனுமதித்திருக்காது.

எனவே தனியார் விமான சேவைகளுக்கு அரசால் விதிக்கப்பட்ட தடை புலிகளுக்கு எதிரான யாழ் மக்களது எதிர்ப்புணர்வை தூண்டும் உத்திதான்.

ஆனால் அந்த உத்தி போதிய பயனளிக்கவில்லை. சமீபத்தில் விமானத்தை வீழ்த்தியதையும் கண்டித்து ஈ.பி.டி.பி. யாழில் நடத்திய ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கானோரே கலந்துகொண்டனர். இதுவே கப்பல் போக்குவரத்தை நடத்துமாறு அரசிடம் கோரும் போராட்டமாக இருந்திருந்தால் பல ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டிருப்பர்.

யாழ் குடாநாட்டு மக்கள் போக்குவரத்தை நடத்தக்கூடாது என்று புலிகள் குறுக்கே நின்றால் அது கண்டிக்கப்படவேண்டியது என்பதில் ஐயமில்லை.

ஆனால், யாழ குடாநாட்டு மக்களிடையே புலிகளால் விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தில், 'விமானப் பயணத்தை தவிர்த்து, கப்பல்மூலம் பயணம் செய்வதே சிறந்தது' என்று கூறப்பட்டிருந்தது.

எனவே பொதுமக்களுக்கான கப்பல் சேவை நடத்தப்படலாம் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

கப்பல் சேவை என்றால் இடைக்கிடையே தடுத்து தாம் சோதனை நடத்தி உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்பதும் புலிகளின் எண்ணமாக இருக்கலாம்.

பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையும் நடக்கவேண்டும், இராணுவ விநியோகத்தையும் தடுக்கவேண்டும், அதற்கு என்ன செய்யலாம்? என்பதை ஆராய்ந்து புலிகள் கூறிய தீர்வுதான் கப்பல் சேவை.

அரசும் புலிகளுக்கான விநியோகத்தை தடுக்கவேண்டும் என்று வன்னிக்கு நிவாரணம் அனுப்பாமல் நிறுத்தியுள்ளது. எலும்புக்கூடுகளாக வன்னிக் குழந்தைகள் மாறிக்கொண்டிருக்கின்றனர். பட்டினி அபாயம் அம்பலமாகியுள்ளது. அப்படியிருந்தும் அரசு பிடிவாதமாக இருக்கிறது. நூறு தமிழர்கள் பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை ஒரு புலிக்கு உணவு போய்ச்சேரக்கூடாது என்று அரசு நினைக்கிறது போல் உள்ளது.

ஆனால் புலிகள் யாழுக்கு அரசு அனுப்பும் உணவுக் கப்பல்களை தடுக்கவில்லை. பொது மக்களின் போக்குவரத்துக்கும் கடல் மார்க்கமாக அனுமதிதர முன்வந்துள்ளனர்.

ஆனால் அரசு யாழ்ப்பாணத்திற்கு பொது மக்களுக்கு பொருட்களை கொண்டுசெல்லும் லங்காமுதித்த சரக்குக்கப்பலில் கவசவாகனங்களை ஏற்றிச்செல்ல அனுமதித்திருக்கிறது.

யாழ் குடாநாட்டு மக்களின் நலன் கருதி புலிகள் அனுமதிக்கும் சரக்குக் கப்பல் போக்குவரத்தை தனது நலனுக்காக அரசு பயன்படுத்தியுள்ளமை கவச வாகனம் கடலில் வீழ்ந்ததால் அம்பலமானது.



கடற்படைப் போர்க்கப்பல்கள் தரையிறக்க கப்பல்கள் இருக்கக்கூடியதாக 'சரக்குக் கப்பலை' கவச வாகனத்திற்கு பயன்படுத்தியது 'பொதுமக்களுக்கான சேவைகள் என்ற பெயரில் இராணுவ விநியோகம் நடத்தும் உத்தி' என்ற புலிகளின் குற்றச்சாட்டை நிரூபித்துவிட்டது.

அதன்பின்னரே 'லங்கா முதித்த'மீது புலிகளின் பார்வை திரும்பியது.

புலிகளை மேலும் தூண்டிவிடுவதுபோல ஒக்டோபர் 23ம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து படையினரை ஏற்றிக்கொண்டு அவர்களோடு பொதுமக்களையும் ஏற்றியபடி லங்கா முதித்த திருமலைக்கு வந்தது. இச்செய்தி பத்திரிகைகளிலும் வெளியானது.

ஒக்டோபர் 23இல் லங்காமுதித்த பயணிகளுடன் புறப்படுவதாக ஆரவாரமாக அறிவிப்பு செய்துவிட்டே படையினர் ஏற்றப்பட்டனர். அதனால் 450 பயணிகள் தவிர 500ற்கு மேற்பட்ட பயணிகள் திருப்பி அனுப்பப்பட்டனர். முன் கூட்டியே தெரிந்தும்கூட ஒரு திசை திருப்பலுக்காக 500 பயணிகளை காத்திருக்க வைத்து திருப்பி அனுப்பினார்கள்.

பயணிகளைவிட படையினர்தான் அதிகளவில் ஏற்றப்பட்டனர். எனவே, படையினருக்குரிய போக்குவரத்துத்தான் முக்கிய அம்சமாக இருக்கிறது.

'லங்கா முதித்த' பலத்த பாதுகாப்புடன் திருமலைக்கு செல்வதை ஒக்டோபர் 23இல் புலிகள் தங்கள் ராடர் திரைகள் வழியே அவதானித்திருந்தனர்.

அதில் சென்றவர்கள் படையினர் என்று அறிந்ததும், 'லங்கா முதித்த'வின் அடுத்த பயணத்தில் குறுக்கிடுவது என்று முடிவு செய்து, பாதுகாப்பாக வரும் கடற்படை அணியை தாக்கும் திட்டம் வகுக்கப்பட்டது.

'லங்கா முதித்த'வில் படையினர் அக்டோபர் 23இல் திருமலை சென்றது பகிரங்கமான பின்னரும், மீண்டும் அதே விதமாக பயணம் செய்ய படையினர் முன்வந்ததுக்கு காரணங்கள் உள்ளன.

1. 500 படையினரை தாக்கினால் அதேயளவு மக்களும் பலியாவர் என்பதால் புலிகள் தாக்கியழிக்க முன்வரமாட்டார்கள் என்று நம்பிக்கை.

2. விடுமுறையில் ஆயிரக்கணக்கான படையினர் ஊர்திரும்ப காத்திருக்கிறார்கள். எப்படியும் அனுப்பியாகவேண்டும். வேறு வழியில்லை.

ஆனால் புலிகள் வேறுவிதமாக திட்டமிட்டனர். பாதுகாப்பாக வரும் கடற்படை அணியை தாக்குவது, முடிந்தால் கப்பலை கடத்தி பயணிகளை இறக்கிவிட்டு கப்பலை அழிப்பது என்பதுதான் திட்டம்.

முதற்பயணம் பகிரங்கமானதால் இம்முறை லங்கா முதித்தவுக்கு சற்று கூடுதலான பாதுகாப்பு கடற்படையால் வழங்க முடிவுசெய்யப்பட்டது.

இரு பீரங்கிக் கப்பல்கள், டோராப்படகுகள் கொண்ட கடற்படையணி லங்கா முதித்தவுக்கு பாதுகாப்பளிக்க விரைந்தது. வானத்தில் இரண்டு ஹெலிகள் பறந்து கடற்பரப்பை கண் காணித்தபடி இருந்தன.

30.10.98 காலை 6.30 மணியளவில் கடற்புலிப் படகுகள் கடற்பரப்பில் தோன்றின.

கடற்படை அணியை நோக்கி முன்னேறிய கடற்புலிப் படகுகளை நோக்கி கடற்படையினர் தாக்கினார்கள். கடற்பரப்பில் மோதல் தீவிரமானது.

கடற்புலிகளை தாக்க முன்னேறிய டோரா கப்பல் ஒன்று கடற்புலிகளது, தாக்குதலால் சேதமானது.

அந்த நேரம் 'லங்கா முதித்த' வந்த வழியே திரும்பி காங்கேசன்துறை முகத்துக்கு விரைந்தது.

காலை 9 மணிவரை சண்டை தொடர்ந்தது. கிட்டத்தட்ட 3 1/2 மணி நேரம் கடற்சண்டை நீடித்தது.

கப்பலை கைப்பற்றி படையினரை முற்றுகையிடும் கடற் புலிகளின் திட்டம் நிறைவேறாதபோதும், கடற்சண்டையில் படையினரின் தகவல்படி பார்த்தாலும்கூட 17 படையினர்வரை பலியானதாக கருத முடிகிறது. ஆனால் ஒருவர் பலியானதாகவும் ஏனையோர் காணாமல் போய்விட்டதாகவும் படையினர் கூறியுள்ளனர். காணாமல் போனவர்களில் ஒருவர் உயரதிகாரி. லெப்டினன்ட் கொமாண்டர் துஷந்தா.

தமது தரப்பில் பலியான கடற்புலிகள் இருவரது பெயர்களை வெளியிட்டுள்ள புலிகள் டோரா கப்பலை கைப்பற்றி அதிலிருந்த கனரக ஆயுதங்களை மீட்டதாக அறிவித்துள்ளனர்.

டோராவில் பீரங்கி ஒன்றும், இயந்திரத் துப்பாக்கி ஒன்றும் இருப்பதுண்டு.

அக் கப்பலை புலிகள் இழுத்துச் செல்கையில் மூழ்கிவிட்டது.

இச் சமரின் பின்னர் 'லங்கா முதித்த' பயணம் நிறுத்தப்பட்டது.

படையினர் செல்ல முடியாவிட்டால் பயணிகளும் செல்ல முடியாது என்பதை கூறாமல் கூறுவது போன்றே கப்பல் பயணத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

புலிகளது அச்சுறுத்தலை மீறி தமது படையினரைக்கூட கடற்பாதையால் கொண்டு வந்து சேர்க்க முடியாமல் பயணத்தை நிறுத்துவதாக அறிவிக்கும் நிலையில் அரசு இருக்கிறது. எனவே வடகடலில் புலிகளின் ஆதிக்கமே நிலவுகிறது என்பதை அரசு ஒப்புக்கொண்டதாகிவிட்டது.

### நாரதர்

யுத்தத்தின் இரத்த ஓட்டமான விநியோகத்தை ஒருவருக்கொருவர் தடுப்பதில் இரு தரப்புமே குறியாக இருக்கின்றனர். மற்றும் பொதுமக்களுக்கான விநியோக மார்க்கங்களை தாம் பயன்படுத்துவதில்லை என்று இருதரப்பும் உடன்படுவதுதான் இதற்கு பரிகாரம்.

ஆனால், யாழ் குடாநாட்டு மக்களது போக்குவரத்து நெருக்கடிக்கு புலிகளை விட அரசின் .இராணுவ நலன் சார்ந்த உத்திகளே தடையாக உள்ளன என்பதற்கு ஆயிரம் உதாரணங்கள் உள்ளன.

## அதிரடி அப்பாத்துரை



***ரெண்டு எழுத்தாரைக் கண்டித்து*** போராட்டங்கள் நடத்துமாறு யாழில் உள்ள தமிழ்க்கட்சிகளுக்கு விடுக்கப்படுகிறதாம் வேண்டுகோள். அதனை விடுப்பது சீருடைத் தரப்பார் தானாம். ரெண்டு எழுத்தாருக்கு எதிராகப் போராட்டம் நடத்தி சீருடையாரிடம் நல்ல பெயர் எடுப்பது யார் என்று போட்டா போட்டி தூள் கிளப்பப் போகுதோ தெரியவில்லை!

***யாழ்ப்பாண நாயன்மார் கட்டைச் சேர்ந்த*** இளைஞர் மரணமா? தற்கொலையா? யாழ் மரணவிசாரணையில் வெளியான தகவல்கள் பலத்த சந்தேகங்களைக் கொடுத்ததாம். ஆனால் தலைநகர மரணவிசாரணையில் காட்சிமாறிவிட்டது. மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதாகக் கூறும் டமில் கட்சிகள் ஏன் மூச்சுக் காட்டவில்லை?

***ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல்*** நடக்கும் என்று நீதிக்குப் பொறுப்பானவர்கூடக் கூறியிருந்தார். வாய்ப்புக் கிடைச்சா நடத்தலாம் என்று கூறியிருந்தார். அப்படியிருக்க, 'ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடக்கும் என்பது வதந்தி' என்று அதிகாரமுள்ள சக்தியே கூறியதாக அரச பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அப்படிப் பார்த்தால் வதந்தி பரப்புவது யார் என்று அர்த்தமாகுது? கொஞ்சம் யோசித்துப் பாருங்கோ!

***'குடாநாட்டில் சிவில் நிர்வாகம்*** குறைந்த முறையில் நடைபெறுகிறது!' இந்தச் செய்தியை ரூபவாஹினி தமிழ்ச் செய்தியில் கேட்டபோது புல்லரித்துப்போச்சு. "மன்னிக்கவும்-சிறப்பான முறையில் நடைபெறுகிறது" என்று திருத்திச் சொன்னபோது புல்லரிப்பு வித்றோ.

'ஒரு முறையாவது உண்மையை வாஹினி வாயால் கேட்டோம்!' என்று சரித்திரத்தில் பொறிக்கும் வாய்ப்பை தவறவிட்டுப்போட்டினம்.

***மத்தியஸ்தம் பற்றிய*** சூழலை ஆராய நோர்வேயில் இருந்தும் ஒருவர் வந்து போயிருக்கிறார். அதிகாரத் தரப்பில் முன்பிருந்த நம்பிக்கை அற்றுப்போய்விட்டது என்ற மாதிரித்தான் அபிப்பிராயப்பட்டாராம். தமிழ்க் கட்சி பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினவராம்.

***எங்கள் ஆட்கள்*** ஐயாயிரம் பேர் விடுமுறையில் ஊர் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். உங்களுக்குத் தனியான கப்பல் சேவை கேட்கிறதோ? இப்படிக் கேட்டாராம் ஒரு சீருடை அதிகாரி. தங்களுக்கு தனியாக கப்பல் சேவை நடத்தி தருமாறு கேட்ட ஒருவரிடமே அவ்வாறு கேட்கப்பட்டதாம்.

***கூட்டான கட்சியின்*** சங்கதியாரிடம் வானொலி நிகழ்ச்சி ஒன்றில் கேள்வி கேட்டனர். "யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளுக்கு எதிராக விடப்பட்ட மகஜரில் கையொப்பம் போடப்பட்டதா?" என்பதுதான் கேள்வி. கிடையாது, கிடையாது, நாமாவது கையொப்பம் போடுவதாவது என்ற ஸ்ரைலில் பதில் சொன்னார் மனுசர். அத்தனையும் பச்சைப் பொய்! யாழில் உள்ள கூட்டான கட்சி உள்ளூராட்சி உறுப்பினர்கள் கையொப்பம் போட்டிருக்கினம். வாயைத் திறந்தால் பொய்தவிர வேறெதுவும் வராது. இந்த இலட்சணத்தில் பத்திரிகைகள்மீது வழக்குத் தொடுக்கப்போகிறாராம். பொய் அம்பலமானால் புகையும்தானே!

***ரெண்டு எழுத்தாரிடம்*** ஹெலிகளே கிடையாது என்கிறார் பாதுகாப்புக்கு பிரதிப் பொறுப்பானவர். மறுபக்கத்தில் ஏவுகணை கொள்வனவுக்கு டெண்டர் கோரப்பட்டுள்ளது. அவைமிடம் பறப்பது இல்லையென்றால் இவைக்கு பறப்பதை வீழ்த்த ஏவுகணை எதற்கு? இரண்டுக்கு மேற்பட்ட ஹெலிகள் இருப்பதாகவும் உளவு விமானம் கண்டதாகவும் பாதுகாப்பு தரப்பு கூறியிருக்குது. இங்கே யார்-யாருக்கு மறுப்பறிக்கை விடுகினம்? தங்களுக்குள்ளேயே விட்டுக் கொண்டிருக்கினம் போல கிடக்கு. அதிகாரத் தரப்பு ரொம்பத்தான் குழம்பிப் போய் நிற்குது.

***அதிகாரமுள்ள சக்தியானவருக்கும்,*** பாதுகாப்புக்கு பிரதிப் பொறுப்பானவருக்கும் இடையே பனிப்போர் மூண்டுள்ளதாம். யுத்தத்தை நிறுத்துவதில் அல்ல, தொடர்ந்து எப்படி முன்னெடுப்பது என்பதில்தான் முரண்பாடாம்.

***'வன்முறை அழிவை*** இளைய தலைமுறையான நாம் ஏற்க மாட்டோம்' என்று தமிழ்க்கட்சித் தலைவர்களிடம் ஒப்புதல் பெற சில பொது அமைப்புக்கள் முயற்சி செய்கினமாம். அதெல்லாம் சரி, தமிழ்க் கட்சித் தலைவர்கள் இப்போதும் இளைஞர்கள்தானோ? எது நடந்தாலும் அமைதிகாத்து, நாற்காலிக்காகச் சிந்திக்கும் முதிர்ச்சி கொண்டவையைப் போய் இப்படி குறைத்து மதிப்பிடக்கூடாது!

***கடற்சண்டை பற்றி*** செய்தி கேட்டனியளோ? முதலில் மறுதரப்பைப் பற்றி சொல்லி முடிச்சுப்போட்டு கடைசியாக தமது தரப்பு இழப்பைப் பற்றி சொல்வதுதான் புது ஸ்டைல். அதனால் மறுதரப்பு பற்றி கடும் ஸ்கோர் கூறுகினம் என்றாலே பெரும் விஷயம் ஒன்று நடந்திருக்குது எண்டு சனம் தாமாக ஊகித்துப்போடுகினம்.

***இவ்வாரப் பொன்மொழி:***

***"உனது ஒவ்வொரு தவறும் உன் எதிரியை உத்தமனாக்கிவிடும்!"***



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் தொடர்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




# விடிய விடிய நடந்த முற்றுகைப் போர்

மன்னார் மாவட்டத்தில் கரையோரப் பகுதியான சிலாவத்துறை இராணுவ முகாமை குறிவைத்த புலிகள், அதற்கேற்ற திட்டம் நீட்டி நாள் குறித்தனர்.

முட்பற்றைக் காடுகளையும், உவர் நிலத்தையும், இதன் காரணமாக குறுகியதும், நீண்டதுமான வெளிகளையும் கொண்ட பகுதிதான் சிலாவத்துறை.

இராணுவ முகாமின் பின்புறம் (மேற்கு) கடலை அரணாகவும், ஏனைய மூன்று பக்கமும் பொட்டல் வெளிகள், முட்பற்றைகள் என்பவற்றைக் கொண்ட புவியியல் அமைப்பில் முகாம் இருந்தது.

இத்தகைய புவியியல் சூழ்நிலை புலிகளைவிட படையினருக்கே சாதகமாக இருந்தது.

புலிகள் முகாமை நோக்கி நகர்வதை படையினர் கண்டுவிட்டால் பொட்டல் வெளியில் புலியணிகளை இனம்கண்டு கனரக ஆயுதங்களால் தாக்கமுடியும். ஷெல் மழை பொழிந்து திணறடிக்கவும் இயலும்.

வன்னியில் புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட மாங்குளம் முகாம், கொண்டச்சி முகாம் போன்றவற்றுக்கு அருகே புலிகள் அதற்கு முன்னரே முற்றுகை இட்டிருந்தனர்.

படையினர் முகாம்களை விட்டு வெளியேறாமல் தடுத்தும் வந்தனர்.

ஆனால் சிலாவத்துறை முகாம் புலிகளின் முற்றுகைக்குள் சிக்காமல் இருந்தது. முற்றுகையிட்டு நிற்கக்கூடிய புவியியல் சாதகம் இருக்கவில்லை.

பாதகமான புவியியல் சூழல் இருந்தாலும்கூட மன்னார் மாவட்டத்தில் புலிகளது தரை, கடல் நடமாட்டங்களுக்கு அச்சுறுத்தலான முகாமாக அது அமைந்திருந்தது.

அதுதவிர ஆனையிறவு முகாம்மீதும் குறிவைத்திருந்த புலிகள் அச் சண்டைக்கு முன்பான பரீட்சார்த்த களமாகவும் சிலாவத்துறை சமரை திட்டமிட்டனர்.

அப்போது மன்னார் மாவட்ட தளபதியாக இருந்தவர் சுபன். தாக்குதலுக்கு உரிய முன் தயாரிப்புக்களை சுபன் மேற்கொண்டார்.

யாழ் மாவட்ட தளபதி தினேஷ் (தமிழ்ச் செல்வன்) தலைமையில் பெரும் படையணி ஒன்று பிரபாகரனால் மன்னாருக்கு அனுப்பிவைக்கப் பட்டது.

அதேசமயம் மன்னாரில் புலிகள் ஒன்று திரளும் செய்தி படையினருக்கும் எட்டியது.

### தகவல் கிடைத்தது

மன்னாரில் இருந்து கொழும்பு வந்த சில பயணிகள் மூலம் படைத் தலைமைக்கு தகவல் கிடைத்தது.

அதனையடுத்து சிலாவத்துறை முகாமுக்கு ஹெலிக் கொப்டர்கள் மூலம் மேலதிக படையணிகள் அனுப்பி வைக்கப் பட்டன.

புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் மேலதிக படைகள் கொண்டு சென்று இறக்கப்பட்டன.

கடலில் பீரங்கிக் கப்பல்கள் முகாமுக்கு நேராக கொண்டுவந்து நங்கூரமிடப்பட்டன.

சிலாவத்துறை முகாம் மட்டுமன்றி மன்னார் மாவட்டத்தில் இருந்த வேறு சில படைமுகாம்களும் தாக்குதலை எதிர்பார்த்து தயார் நிலையில் இருந்தன.

சிலாவத்துறையில் முகாமை அண்டிய பகுதிகளில் விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.


புலிகள் வந்து பதுங்கி நிலை எடுக்காமல் தடுப்பதற்காகவே விமானத்தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

அவ்வாறிருந்தும் தாம் திட்டமிட்டபடி 19.03.1991 மாலை புலியணிகள் தாக்குதலுக்கு புறப்பட்டன.

நீண்டதொரு கடல் எல்லையைக் கொண்ட முகாம் என்பதால், கடற்பாதையூடாக உதவி வரலாம் என்று கருதிய புலிகள், சுமார் 5 கிலோமீட்டர் நீளத்திற்கு கடற்கரை பகுதியை கட்டுப்படுத்த தமது அணி ஒன்றை நிறுத்தி வைத்தனர்.

சிலாவத்துறை முகாமுக்கு ஆறுகிலோமீட்டர் தூரத்தில் இருந்த கொக்குபடையான், கொண்டைச்சி முகாம்களைச் சேர்ந்த படையினர் உதவிக்கு வருவதை தடுப்பதற்காக இன்னொரு புலியணி காடுகளிலும், வெளிகளிலும் நிறுத்தப் பட்டது.

இவற்றைத் தவிர சிலாவத்துறை முகாமையும், அதனைச் சூழ இருந்த மினி முகாம்கள் இரண்டையும் தாக்கி அழிக்கும் படையணிகள் தமது முற்றுகையை ஆரம்பித்தன.




இரவு 9.15 மணியளவில் சிலாவத்துறை முகாமை நோக்கி புலிகளின் பசிலான்கள் ஏவப்பட்டன. மினி முகாம்களை நோக்கியும் பசிலான் மோட்டார்கள் ஷெல்களை ஏவின.

ஷெல்லடித்து ஓய்ந்ததும் மினி முகாமை கைப்பற்றும் முயற்சி ஆரம்பமானது.

முதலில் மினி முகாம்களை கைப்பற்றிவிட்டு, பின்னர்தான் பிரதான முகாமை கைப்பற்றுவதாக திட்டம்.

மினி முகாம்களில் ஒன்று இருந்த உதவி அரசாங்க அதிபர் விடுதிக்கு முன்பாக உள்ள தென்னம் தோட்டத்தில் படையினர் நிலை எடுத்து தாக்குதலை எதிர்பார்த்துக் கிடந்தனர்.

முன்னரே தகவல் கசிந்ததால் தமது எதிர்த்தாக்குதலுக்கு ஏற்ற நிலைகளை தெரிவு செய்து முன்கூட்டியே படையினர் காத்திருந்தனர்.

அதனால் தென்னம் தோப்புக்குள் நிலை எடுத்திருந்த படையினருக்கும் புலிகளுக்கும் இடையே பலத்த சண்டை ஆரம்பமானது.

உதவி அரச அதிபர் விடுதியில் இருந்த மினி முகாமை கைப்பற்றுவது சண்டையில் முக்கியமான அம்சம்.

சிலாவத்துறை முகாமுக்கு செல்லும் பாதையை வழிமறித்தபடி அந்த மினி முகாம் அமைந்திருந்தது.

பிரதான முகாமுக்கு செல்லும் பாதையை திறக்க வேண்டுமானால், அந்த மினி முகாமை தகர்க்க வேண்டும். அதனால் தங்கள் பிரதான பலத்தை அந்த முனையில் ஒன்று குவித்து புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இதே நேரம் தாக்குதல் செய்தியறிந்து விமானங்கள் குண்டுகளுடன் விரைந்தன.

இரவு நேரம் என்பதால் வெளிச்ச குண்டுகளை வீசி இரவைப் பகலாக்கியபடி புலியணிகளை குறிவைத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தரையில் இருந்தும் படையினர் பலத்த தாக்குதலை தொடுத்த வண்ணம் இருந்தனர்.

புலியணிகள் தங்களை பாதுகாக்க நிலை எடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் குறைவாக இருந்தன.

அதனால் புலிகள் பலர் காயமடைந்து வீழ்ந்து கொண்டிருந்தனர். காயமடைந்தவர்களை களத்தை விட்டு அகற்றவும் அவகாசம் இருக்கவில்லை.

### அதிரடித் தாக்குதல்

மினி முகாமின் பாதுகாப்புக் கவசமாக ஒரு அரண் விளங்கியது. அந்த அரணில் இருந்த படையினர் புலிகளது முன்னேற்றத்தை கடுமையாக தடுத்துக் கொண்டிருந்தனர்.

உடனடியாக ஒரு உபாயம் ஒன்றை புலிகள் வகுத்தனர். அந்த அரணை நோக்கி ஆர்.பி.ஜி ஏவுகணைகளை ஏவவேண்டும். அவை அரணில் பட்டு வெடித்தவுடன் இரண்டு அல்லது மூன்று விநாடிகளுக்கு அரணில் உள்ள படையினர் பதுங்கு நிலை எடுப்பர். அச் சந்தர்ப்பத்தில் அரணை நோக்கி மின்னலென பாய்ந்து கைப்பற்ற வேண்டும். அதுதான் திட்டம்.

அதன்படியே ஆர்.பி.ஜி. ஏவப்பட்டதும், இரு பெண் புலிகளும், ரஞ்சன் என்னும் புலியும் அரணை நோக்கிப் பாய்ந்தனர்.

அரணுக்குள் புகுந்து அங்கிருந்த இயந்திரத் துப்பாக்கியை எடுத்து தொடர்ந்து தாக்கிய ரஞ்சன் படையினரின் தாக்குதலில் பலியானார். அதேசமயம் பெண் புலிகள் இருவரும் துரிதமாக செயற்பட்டு அரணை கைப்பற்றினார்கள்.

குறிப்பிட்ட அரண் வீழ்ந்ததும் மினி முகாமை கைப்பற்றுவது சுலபமானது. சரியாக இரவு ஒரு மணிக்கு மினி முகாம் வீழ்ச்சியடைந்தது.

மினி முகாம்.கைப்பற்றப்பட்டதால் சிலாவத்துறைக்கு செல்லும் பிரதான பாதை புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது.

அந்தப் பாதைக்கு குறுக்கே போடப்பட்டிருந்த தடைகளை புலிகள் அகற்றினார்கள்.

ஏனெனில் அப்பாதையூடாக கரும்புலி வண்டி சென்று பிரதான முகாம் பகுதியில் மோதி வெடிக்க வேண்டும்.

தாக்குதல் திட்டத்தின் பிரதான பகுதி அதுதான். அதற்காக தயாரான கரும்புலி வாகனம் சற்றுத் தொலைவில் முள்ளியகுளம் சிலாவத்துறைப் பாதையில் தயாராக நிறுத்தப் பட்டிருந்தது.

அந்த வாகனத்தை செலுத்த தெரிவு செய்யப்பட்ட கரும்புலியின் பெயர் டாம்போ.

இதற்கிடையே மினி முகாம் புலிகளிடம் வீழ்ந்துவிட்டதை படையினர் விமானப் படையினருக்கு அறிவித்துவிட்டனர்.

அதனால் விமானப்படையினர் மினி முகாமை நோக்கியும், அதனைச் சூழவும் குண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த குண்டு மழை மத்தியில் கரும்புலி வாகனம் இலக்கு நோக்கிச் சென்றாக வேண்டும்.

இடைநடுவே குண்டு வீச்சுக்கு உள்ளானால் அப்படியே வெடித்துச் சிதறிவிடும்.

கரும்புலித் தாக்குதலுக்கு முன்னர் புலிகள் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

காயமடைந்த போராளிகளை உடன் களத்தைவிட்டு அப்புறப்படுத்த வேண்டியிருந்தது.

இல்லையெனில் அவர்களும் தாக்குதலில் பலியாக நேரும். கரும்புலித்தாக்குதல் நடக்கும்போது போதிய தற்காப்பு நிலையில் புலியணிகள் நின்றாக வேண்டும்.

தாக்குதலால் தாமும் பாதிப்பில்லாமல் தப்புவதும் முக்கியம். தாக்குதல் அதிர்வு அடங்க முன்னரே முகாமை நோக்கி பாய்ந்து செல்வதும் அவசியம்.

இதேசமயம் சிலாவத்துறை முகாமை பக்கவாட்டில் நெருங்கி இன்னொரு புலியணி தாக்குதல் நடத்தியது.

அக்குழுவினர் பொட்டல் வெளிப் பக்கமாக நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

தற்காப்பு நிலை எடுக்க வேண்டுமானால் அவர்கள் மேலும் முன்னேற வேண்டும், அல்லது பின்வாங்க வேண்டும். இடை நடுவே நின்றால் படையினரது துப்பாக்கிகள் அவர்களை இனம்கண்டு குறிபார்த்து ரவைகளை கக்கும்.

கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டால் அந்த அணி முழுவதுமே பாதிக்கப்படும் சூழ்நிலை.

அதற்கிடையே, புறப்பட்டு வருமாறு தகவல் கிடைத்து கரும்புலி டாம்போ வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனத்தோடு முன்னேறிக் கொண்டிருந்தார்.

கைப்பற்றப்பட்ட மினி முகாமுக்கு நூறு யார் தூரத்தில் வைத்து கரும்புலி வாகனத்தை நிறுத்துமாறு கூறிவிட்டு, தற்காப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் புலிகள் ஈடுபட்டனர்.

### புகைமண்டலம்

மிகச் சிக்கலான ஒரு சூழ்நிலை.

வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் இடைநடுவே நிற்கிறது.

விமானங்கள் மூர்க்கமாக தாக்கிக் கொண்டிருக்கின்றன.

கடலில் நிறுத்தப்பட்டிருந்த பீரங்கிக் கப்பல்கள் குண்டுகளை ஏவிக்கொண்டிருந்தன.

கரும்புலி வாகனம் செல்ல வேண்டிய பாதை ஒரே புகை மண்டலமாக காட்சியளித்தது.

புகைமண்டலம் ஊடாக வாகனத்தை செலுத்துவதே கடினம். இலக்கை கண்டறிந்து மோதுவது அதைவிடக் கடினம்.

கரும்புலி தாக்குதலுக்கான பாதை தயாரானதும் புறப்படுமாறு உத்தரவு பிறந்தது.

வாகனம் புறப்பட்டது.

'பாதை சரியாக தெரியாது என்பதால் தானும் வந்து பாதை காட்டுவதாக இன்னொரு புலி கூற, அதனை மறுத்த டாம்போ, தன்னால் இலக்கை கண்டறிய முடியும் என்று கூறிவிட்டு வாகனத்தோடு புறப்பட்டான்.

அதிகாலை மூன்று மணியளவில் கரும்புலி வாகனத்தோடு டாம்போ புறப்பட்டான்.

கரும்புலித் தாக்குதலின் அதிர்வை எதிர்பார்த்து புலியணிகள் தற்காப்பு நிலை எடுத்து காத்திருந்தன.

மினி முகாம் பகுதியில் இருந்து திரும்பி நேராகச் சென்றால்தான் பிரதான முகாம் பகுதி வரும்.

ஆனால் மினி முகாம் பகுதியை தாண்ட முன்னரே அந்த எதிர்பாராத நிகழ்வு நேர்ந்தது.

கரும்புலி வாகனம் வெடித்துச் சிதறியது.



மேஜர் டாம்போ

விமானக் குண்டு அல்லது கடலில் இருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுபட்டே கரும்புலி வாகனம் வெடித்துச் சிதறியது.

இடைநடுவே கரும்புலி வாகனம் வெடித்தமை புலியணிகளுக்கு சற்று தளர்வைக் கொடுத்துவிட்டது.

ஆனால், புலியணிகளுக்கு பொறுப்பாக இருந்தவர்கள் கொடுத்த உற்சாகத்தால் தற்காப்பு நிலைகளில் இருந்து வெளியே வந்து மூர்க்கமான தாக்குதல் நடத்தினர்.

இரவு விடிந்து கொண்டிருந்தது. கரும்புலி வாகனம் இலக்கை எட்டாததால் புலிகள் தாக்குதலை நிறுத்துவார்கள். அப்படியே நிறுத்தாவிட்டாலும் காலையில் போதிய வெளிச்சத்தில் விமானத் தாக்குதல் நடத்தி புலியணிகளை திருப்பி அனுப்பலாம் என்று படையினர் நினைத்தனர்.

### இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் சண்டைக்கான காலை மலர்ந்தது. அதுவரை நடந்த சமரில் கரும்புலி டாம்போ உட்பட 14 புலிகள் பலியாகி இருந்தனர்.

இரண்டாம் நாள் சண்டைகள் விமானக் குண்டுவீச்சுக்களுடனும், புலிகளின் பதிற் தாக்குதல்களுடனும் ஆரம்பமானது.

நான்கு பெரும் விமானங்களும் இரண்டு அவ்ரோ விமானங்களும் பீப்பாய் குண்டுகளை உருட்டிவிட நான்கு ஹெலிகள் கலிபர் ரக துப்பாக்கிகளால் புலியணிகளை நோக்கி தாக்குதல் நடத்தின.

பாடசாலைக் கட்டடத்தில் அமைந்திருந்த இரண்டாவது மினி முகாமை கைப்பற்ற புலியணிகள் முயற்சித்தன.

காலை 10 மணியளவில் போர் விமானமும், அவ்ரோ விமானமும் குண்டுகளை பொழிந்து பாதுகாப்பு கேடயமாக நிற்க, ஹெலிக்கொப்டர் ஒன்று சிலாவத்துறை முகாமுக்குள் இறங்கியது.

## அற்புதன் எழுதுவது

இறங்கிய இடத்தை கணிப்பிட்டு புலிகள் ஷெல்களை ஏவினார்கள்.

அதனால் சேதமடைந்த ஹெலி எழுந்து பறந்து திரும்பிச் சென்றது.

பின்னர் தரை இறங்கும் நோக்கத்தை கைவிட்டு வானில் இருந்து வெடிமருந்து பொட்டலங்களை முகாமுக்குள் போட்டனர்.

ஆனால் கடற்காற்று காரணமாக அப்பொட்டலங்கள் முகாமுக்குள் விழாமல் புலிகள் நின்ற பகுதிகளில் விழுந்தன. அவற்றை புலிகள் எடுத்துக் கொண்டனர்.

இரண்டாம் நாள் இரவு நெருங்கிக் கொண்டிருந்தது.

இரவுக்குள் இரண்டாவது மினி முகாமைக் கைப்பற்ற புலியணிகள் மூர்க்கமாக சண்டையிட ஆரம்பித்தன.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# மண்டேலாவும் மத்தியஸ்தமும்

## தடுக்க முனையும் காய்நகர்த்தல்

சமீபகாலமாக இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தோடு தென்னாபிரிக்காவும், அதன் அதிபர் நெல்சன் மண்டேலாவின் பெயரும் இணைத்துப் பேசப்பட்டு வருகிறது.

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவுடன் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஒப்பிட்டு பேசியவர் ஜனாதிபதி சந்திரிக்கா.

ஆதே ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற அணிசேரா நாடுகள் மாநாட்டில் புலிகளை பயங்கரவாதிகள் என்று கடுமையாக சாடி உரையாற்றினார்.

இவ்வுரையை செவிமடுத்துக் கொண்டிருந்த தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் நினைவுகள் 1961ம் ஆண்டுக்கு பின்நோக்கி சென்றிருக்கக்கூடும்.

1961ம் ஆண்டில் தென்னாபிரிக்கா வெள்ளையின அரசு நெல்சன் மண்டேலாவை பயங்கரவாதி என்று பட்டம் சூட்டியதோடு, அவரை சல்லடை போட்டு தேடிவந்தது.

அக்காலகட்டத்தில்தான் சாத்வீக போராட்ட முறைகளை கைவிட்டு ஆயுதம் ஏந்திய போராட்ட பாதையில் மண்டேலாவும் தென்னாபிரிக்க காங்கிரசும் நடைபோட ஆரம்பித்திருந்தனர்.

அக் காலகட்டத்தில் நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்க கறுப்பின மக்களிடம் பின்வருமாறு கூறியிருந்தார்:

"மிகக் கடினமான பாதையொன்றை இப்போது நான் தெரிவு செய்துள்ளேன்.

உங்களோடு இணைந்து, இந்த அரசாங்கத்திற்கு எதிராக அங்குலம் அங்குலமாக மைல் மைலாக வெற்றி கிடைக்கும்வரை போரிட நான் முடிவு செய்துள்ளேன்.

இப்போது நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? என்னோடு வந்து இணையப்போகிறீர்களா? அல்லது உங்களை நசுக்கி ஒடுக்கி வருத்தும் அரசாங்கத்திற்கு உங்கள் ஆதரவை வழங்கப் போகிறீர்களா?

எம் மக்களுக்கு வாழ்வா சாவா? எனத் தீர்மானிக்கப்படப்போகும் இந்தக் களத்தில் நீங்கள் வாய்மூடி மௌனிகளாக நடுநிலைவாதிகளாக இருந்துவிடப்போகிறீர்களா?

எனது பங்குக்கு நான் முடிவு செய்துவிட்டேன். தியாகம், கடும் துயர், தீவிரப்போர் என்கிற செயற்பாடுகள் மூலமே விடுதலை வெல்லப்படமுடியும். இனிமேல் போராட்டமே எனது வாழ்வு" என்று அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டிருந்தார்.

நெல்சன் மண்டேலாவின் தலைமையும், தென்னாபிரிக்க காங்கிரசின் உறுதியான தளம்பலற்ற நிலைப்பாடுமே இன்று கறுப்பின மக்களை கௌரவமான மக்களாக தலைநிமிர்ந்து வாழ வைத்திருக்கிறது.

தென்னாபிரிக்காவில் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனை தீர்ந்ததாகவும், ஆயுதப் போராட்டம் மூலம் எதனையும் சாதிக்க முடியாது என்றும் தமது இஷ்டப்படி இங்கு சிலர் வரலாற்றை திரிபுபடுத்தி கூறிவருகின்றனர்.

தென்னாபிரிக்க மக்களின் ஆயுதப் போராட்டமும், தமது விடுதலையில் அவர்கள் காட்டிய உறுதியுமே தென்னாபிரிக்க வெள்ளையின அரசை மட்டுமன்றி, அதனை முட்டுக்கொடுத்து பாதுகாத்த அமெரிக்கா போன்ற வல்லரசுகளையும் இறுதியில் பணியவைத்திருந்தது.

போராட்டமும், பலமுமே தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களின் வெற்றிக்கும், நியாயமான தீர்வொன்றுக்கும் வழிவகுத்தது.

கறுப்பின மக்கள் போராடாமல் தலைகுனிந்தும், வெள்ளையின வெறியர்கள் சவாரி செய்வதற்காக தம் முதுகுகளை குனிந்துகொண்டும் இருந்திருந்தால் சர்வதேச சமூகம்கூட அவர்களை நோக்கி திரும்பியிருக்காது. இப்போதும் வெள்ளையின ஆட்சியே அங்கு நடந்திருக்கும்.

ஓயாத போராட்டம் விடாப்பிடியான மன உறுதி, சொந்த நலன்களுக்காக மக்கள் நலன்களை விலை பேசாத தலைமை ஆகியவைதான் தென்னாபிரிக்க வெள்ளையின அரசைப் பணியவைத்து, பேச்சுவார்த்தைக்கும் விட்டுக்கொடுப்புக்கும் நிர்ப்பந்தித்தது.

கறுப்பின மக்களின் போராட்டத்தின் விளைவாகத்தான் தென்னாபிரிக்காவில் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனை தீரும் நிலைவந்ததே தவிர, போராட்டத்தை கைவிட்டதால் அந்நிலை வரவில்லை.

தென்னாபிரிக்க தேசியகாங்கிரஸ் போன்ற பலமான தலைமையும் வலுவான போராட்டமும் இல்லையானால் கறுப்பின மக்களுக்கு சில சலுகைகள், குறிப்பிட்ட சில உரிமைகள் கிடைத்திருக்கும். மறுபுறம் இன ஒடுக்குமுறையும் தொடர்ந்த வண்ணம் இருந்திருக்கும். இப்போதுள்ளதுபோல ஆட்சி அதிகாரம் அவர்கள் கையில் கிடைத்திருக்காது.

எந்தவொரு இனத்திற்கும் தனது உரிமைகளை பெறுவதற்கு பலமான தலைமையும் உரமான இயக்கம் ஒன்றும் அத்தியவசியமாகும். அவ்வாறில்லாமல் அடக்கும் இனத்தினர் நீதியான தீர்வுக்கு தாமாக முன்வந்து இணங்கியதாக உலக சரித்திரத்தில் ஒரு உதாரணம்கூட இதுவரை காணப்படவில்லை.

இலங்கைத் தீவின் வரலாற்றிலும் பேரினவாத சக்திகள் தென்னாபிரிக்க நிறவெறியர்கள் போன்றே செயற்பட்டு வந்திருக்கின்றன.

ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகி தீவிர உருப்பெறும்வரை, "தமிழ் மக்களுக்கு கொடுக்க வேண்டியதெல்லாம் கொடுத்தாகிவிட்டது, இனி கொடுப்பதற்கு எதுவும் இல்லை" என்று தென்னிலங்கை ஆட்சியாளரும் நாக்கூசாமல் கூறிக்கொண்டிருந்தனர்.

அவ்வாறு மமதையாக பேசிய ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை திம்பு பேச்சுக்கும், பின்னர் ஒப்பந்தத்துக்கும் பணியவைத்ததும் ஆயுதப்போராட்டமேயாகும்.

அடுத்த தேர்தலில் தமிழீழம் என்று வாய்வீரம் பேசிக்கொண்டு பாராளுமன்றம் சென்ற கூட்டணியினர், 'போரா சமாதானமா? எது வேண்டும்?' என்று ஜே.ஆர்.கேட்டபோது பதில்கூற முடியாதவர்களாக நின்றது பரிதாபக் கோலம்.

அன்றைய தமிழ்த் தலைமையின் வாய்வீரத்தை நன்கு அறிந்துதான் ஜே.ஆர்.சாவல்விட்டிருந்தார்.

ஆனால், அதே ஜே.ஆருக்கு போர் என்றால் நாமும் தயார் என்று பதிலடி கொடுக்க இயக்கங்களால் முடிந்தது. அதன் காரணமாகவே இறுதியில் இந்திய நிர்ப்பந்தத்துக்கு ஜே.ஆர். பணியவேண்டியதாயிற்று.

இன்றுகூட தமிழ் பேசும் மக்களைப் பார்த்து போர் என்றால் போர் என்று சவால்விடுவதற்கு பலர் உள்ளனர். ஆனால் அதனை பகிரங்கமாக, வெளிப்படையாக கூறுவார்களேயானால், விளைவு தமக்கு சாதகமாக இருக்காது என்பதை உணர்ந்தே உள்ளனர்.

அதனால்தான் புலி எதிர்ப்பு என்ற சொற் பூச்சுக்களால் தம் அடிமன ஆசைகளை மறைத்துக் கொள்கின்றனர்.

புலிகள் அமைப்பு பலமாக இருப்பதாலும், தமது பேரினவாத பேச்சுக்களால் மேலும் அதனை பலம்பெற வைத்தால் தமக்கு பாதகம் ஏற்படும் என்பதாலுமே அடக்கிவாசித்து வருகின்றனர்.

1958ல் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியாளரும், 1977 மற்றும் 1983 இனக்கலவரங்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களும் அவற்றை வேடிக்கை பார்த்தனர். கட்டுப்படுத்தாமல் விட்டுப் பிடித்திருந்தனர்.

அதனையிட்டு அக்காலங்களில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த பிரபல சிங்கள தலைவர்கள் வாயே திறக்காமல் இருந்தனர்.

தமிழ் மக்கள் அடிவாங்குவதும், ஒடி ஒளிவதும், அவலக்குரல் எழுப்புவதும் வேடிக்கையாகவும், பொழுது போக்காகவும், தமது தரப்பின் வீர சாகசமாகவுமே அவர்களுக்கு தோன்றியிருந்தது.

ஆனால் இன்று நிலமை மாறியுள்ளது. சமபலமான இரு தரப்புக்கள் என்று எதிர்க்கட்சியே கூறுமளவுக்கு புலிகளின் பலம் காணப்படுகிறது.

எனினும் கடந்த காலத்தில் புலிகள் முதற்கொண்டு ஏனைய இயக்கங்களின் உறுப்பினர்களும், மக்களும் கொடுத்த விலைகள் ஏராளம்.

ஆனாலும் இனக் கலவரத்தில் நிராயுதபாணியாக சிக்கி நின்ற மக்களை நோக்கி போரா சமாதானமா? என்று கேட்கப்பட்டபோது ஏற்பட்ட அவமானத்தோடு ஒப்பிட்டால் இன கௌவரத்திற்காக கொடுக்கப்பட்ட விலைகள் நியாயமானவையே.

கொழும்பிலே பொலிஸார் சிங்கள மாணவர்களை தாக்கினால், "உங்கள் விளையாட்டை யாழ்ப்பாணத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கு சரிப்படாது!" என்று மாணவர்கள் கூறுமளவுக்கு தமிழர்கள் பயந்த சுபாவம் உடையவர்கள் என்ற எண்ணமும், இளக்காரமான பார்வையுமே ஒரு காலத்தில் தென்னிலங்கையில் நிலவியது.

கக்கத்தில் முருங்கைக்காயுடன் நெற்றியில் விபூதி பூச்சுடன் அசடுவழிந்தபடி கொழும்பில் வந்திறங்கும் ஒருவராகவே வடக்கு-கிழக்கு தமிழர்கள் கற்பனை செய்யப்பட்டனர்.

ஆனால் இன்று தமிழர்கள் முருங்கைகாயுடன் வந்திறங்கினால்கூட ஏ.கே.47 என்றோ, விமான எதிர்ப்பு துப்பாக்கி என்றோ பொலிசாருக்கு தகவல் போய்விடும்.

'இந்தத் தமிழர்கள் லேசுப்பட்டவர்களல்ல' என்ற எண்ணமே பரவலாகியுள்ளது. தமிழர்களைக் கண்டால் 'புலி' என்று கருதுவதில் இனவாத கண்ணோட்டம் மட்டுமல்லாமல், உண்மையாகவே அவ்வாறு கருதும் பயம் கலந்த சூழ்நிலையும் தோன்றியுள்ளது.

இன கௌரவம் என்பது மிக முக்கியமாகும். அவ்வாறு எதுவும் இல்லையானால் தென்னாபிரிக்கா கறுப்பின மக்களும், பாலஸ்தீன மக்களும், மேலும் பல நாடுகளில் தேசிய விடுதலைக்காக போராடிய மக்களும் செய்த தியாகங்கள் அர்த்தமற்றவை என்றே அர்த்தமாகும். மண்டேலாவையோ, யாசீர் அரபாத்தையோ, பிடல்காஸ்ரோவையோ, சேகுவேரா போன்றோரையோ தலைவர்களாக ஏற்றிப் போற்றியிருக்க முடிந்திருக்காது.

இனகௌரவம் தேவையில்லை, உணவு, உடை, உறையுள், சுலபமான போக்குவரத்து என்பவைதான் தேவை என்றால் இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சனை உடன் தீர்க்கப்பட வழி உள்ளது.

சகல தமிழ் மக்களும் சிங்கள மக்களுடன் மொழி, இன, கலாசார ரீதியாக ஒன்று கலந்துவிட்டால் பிரச்சனையே இல்லை.

அவ்வாறில்லாமல் தமிழ் பேசும் மக்கள் தங்கள் தேசிய இன தனித்துவம், பாதுகாப்பு, பாரம்பரிய நிலப்பாதுகாப்பு, அபிவிருத்தி என்பவற்றை தக்கவைத்திருக்க வேண்டுமானால், அதற்கு உத்தரவாதமான தீர்வு வரை பலத்தோடு நின்று போராட வேண்டியவர்களாக உள்ளனர்.

கடந்த காலத்தில் தமிழ் பேசும் மக்கள்



புலிகளால் 1990இல் கைப்பற்றப்பட்ட பவள்.

என்னற்ற துன்ப துயரங்களை எதிர்கொண்டு, தமது மனவுறுதியை வெளிப்படுத்தியே வந்திருக்கின்றனர்.

சில தமிழ்க் கட்சிகள் தமது நலன்களுக்காக மக்களை திசை திருப்ப முயன்றாலும்கூட தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் கௌரவமான அரசியல் தீர்வு முக்கியம் என்றும், இத்தனை பாடுபட்ட பின்னர் குறைந்ததீர்வுகளை ஏற்கக்கூடாது என்றுமே விரும்புகின்றனர்.

இவ்வாறான மன உறுதியும் புலிகளது தொடர்ச்சியான ஆயுதப் போராட்டமுமே இன்று இனப்பிரச்சனை தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் அவசியத்தை உணரவைத்திருக்கிறது.

மத்தியஸ்தராக செயற்படக்கூடிய சக்தி எதுவென்று ஊகங்களும் கிளம்பியுள்ளன.

இந்தியாவுக்கு இலங்கை இனப்பிரச்சனையில் தலையிட உள்ளூர் அரசியல் காரணங்கள் தடையாகவே இருக்கும்.

அதனை உத்தேசித்தே, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மறைமுகமான சமிஞ்ஞை ஒன்றை காட்டியிருந்தார்.

"இலங்கையில் மூன்றாம் தரப்பாக இந்தியா செயற்படாது. வேறு யாரும் மத்தியஸ்தராக செயற்பட்டால் ஆட்சேபிக்காது!" என்று கூறியிருந்தார்.

இக் கூற்றை மேலேழுந்த வாரியாக நோக்கும்போது இந்திய அமைச்சர் சலிப்போடு கூறியதாக தோன்றலாம். ஆனால் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கும் நீண்டகாலமாக ஆதரவு அளித்து வருபவர். அவர் அவ்வாறு கூறியதானது, 'இந்தியா அதிருப்திப்படுமோ என்று வேறு சக்திகள் யோசிக்க வேண்டியதில்லை' என்று பச்சைக்கொடி காட்டுவதற்கேயாகும்.

அதேசமயம் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத, தனக்கு சவாலாக இல்லாத ஒரு சக்தி இங்கு தலையிடுவதையே இந்தியா விரும்பும்.

அவ்வாறான சக்தியாக நெல்சன் மண்டேலாதான் இருக்கிறார். இந்தியா, இலங்கை அரசு, புலிகள் ஆகிய சகல தரப்புகளுக்கும் பொதுவான ஒரே ஒரு மத்தியஸ்தர் இன்றைய நிலையில் நெல்சன் மண்டேலா மட்டும்தான்.

தென்னாபிரிக்க தேசியக் காங்கிரசுடனும், நெல்சன் மண்டேலாவுடனும் அங்கு போராட்டம் நடந்த காலங்களிலேயே புலிகள் தொடர்பு வைத்திருக்கின்றனர்.

இலங்கை அரசு தென்னாபிரிக்க வெள்ளையின அரசை ஆதரித்தது மட்டுமன்றி, அதனிடம் ஆயுதங்களையும் கொள்வனவு செய்திருந்தது.

எனவே தென்னாபிரிக்க வெள்ளையின அரசின் ஆயுதங்களை எதிர்த்தும் தென்னாபிரிக்க காங்கிரஸ் மட்டுமல்ல தமிழ் போராளிகளும் வடக்கு-கிழக்கில் போராட வேண்டியிருந்தது.

தென்னாபிரிக்க பவள் கவச வாகனங்கள் புலிகளாலும் வடக்கில் தகர்க்கப்பட்டன.

இவ்வாறான காரணங்களால் தென்னாபிரிக்க தேசிய காங்கிரசுடன் புலிகளுக்கு உள்ள உறவு நல்ல முறையில் வலுப்பட்டு வந்திருக்கிறது.

தற்போது மண்டேலா மத்தியஸ்தராக வருவாரா? என்று செய்திகளும் வெளியாகத் தொடங்கியுள்ளன.

இதனையடுத்து இலங்கை அரசு கலக்கம் அடைந்திருக்கிறது.

'நான் மத்தியஸ்தம் வகிக்கத் தயார்' என்று மண்டேலா கூறிவிட்டால் அக் கூற்று சர்வதேச சமூகத்தின் மிகுந்த கவனத்தை பெற்றுவிடும் என்றும் அவ்வாறான நிலையில் தாம் அதனை மறுத்துக் கூறுவது சர்வதேச அரங்கில் சந்தேகத்தை தோற்றுவிக்கும் என்றும் அரசு அச்சமடைந்திருப்பதாக தெரிகிறது.

அதனால்தான் தென்னாபிரிக்கா அரசுக்கு அவசர அவசரமாக சில வேண்டுகோள்கள் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சிடமிருந்து பறந்து போயுள்ளன.

'விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றும், அவர்களுக்கு தென்னாபிரிக்காவில் இடம் கொடுத்தலாகாது' என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

புலிகளின் சர்வதேச தலைமையகம் தென்னாபிரிக்காவில் திறக்கப்பட உள்ளதாகவும் கொழும்பின் ஆங்கில தினசரி ஒன்றில் செய்தி வெளியாக வைத்தனர்.

இவ்வாறெல்லாம் செய்தால் 'புலிகளுடன் தமக்கு ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று தென்னாபிரிக்க அரசு கூறியாக வேண்டிய ராஜதந்திர கட்டாயம் தோன்றும். அதன்பின்னர் மத்தியஸ்தராக செயற்பட தயார் என்று மண்டேலா கூறமுடியாமல் போகும்' என்பதுதான் ஆட்சியாளரின் தந்திரமாக அமைந்துள்ளது.

'மத்தியஸ்தராகத் தயார்' என்று மண்டேலா கூறுவதற்கு இடமளிக்காமல், இராஜதந்திரரீதியாக முந்திக்கொள்ள காய் நகர்த்துகின்றனர் ஆட்சியாளர்கள்.

தென்னாபிரிக்காவில் புலிகள் செயற்படுவதற்கான எவ்வித ஆதாரமும் தம்மிடம் இல்லாத நிலையில், அங்கு புலிகளை தடை செய்யுமாறு இலங்கை அரசு விழுந்தடித்து கூறுவதன் மர்மம் அதுதான்.

மொத்தத்தில் இலங்கை இனப்பிரச்சனையை நீதியான முறையில் தீர்ப்பதற்கான மத்தியஸ்தம் வகிக்க பல சக்திகள் தயாராக உள்ளன. அவ்வாறான சக்திகளில் மிகப்பொருத்தமான ஒருவர் நெல்சன் மண்டேலா.

தனது நலனுக்கு ஏற்பவும், பேரினவாத சக்திகளது திருப்திக்கு ஏற்பவும் இனப்பிரச்சனையை தீர்க்க விரும்பும் ஆட்சியாளர்கள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தற்போதைக்கு தாமாக இணங்கப்போவதில்லை. ஆட்சியாளர்களை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு இணங்க வைப்பதற்கும் தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட பலம் சார்ந்த நிர்ப்பந்தமே அவசியமாகும்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

தலைநகர தனியார் வானொலி நடு நிலையாக செய்திகள் கூறுவதுபோல, தகுந்த நேரத்தில் அரசின் நோக்கத்துக்கு ஏற்ற செய்திகளை கூறப்போகிறதா என்று சந்தேகம் வருகிறது.

31.10.98 காலை 6.45 மணிச் செய்தியில் கூறப்பட்ட செய்திதான் சந்தேகத்துக்கு விதை.

பயணிகளுடன் வந்த லங்கா முதித்த கப்பல் புலிகளின் தாக்குதலால் திரும்பிச் சென்றதாகவும், பயணிகள் வீடுதிரும்ப விரும்பாமல் துறைமுகத்திலேயே தங்கியுள்ளதாகவும் கூறப்பட்டது.

'லங்கா முதித்த' பயணிகளுடன் மட்டும் செல்லவில்லை. 525 பயணிகளும், கிட்டத்தட்ட அதேயளவு படையினரும் இருந்துள்ளனர்.

கப்பல் மீண்டும் காங்கேசன்துறைக்கு சென்றதும் பயணிகள் வெளியேற அனுமதி கொடுக்கப்படவிலலை. பயணிகள் வெளியே சென்றால் கப்பலில் படையினரும் சென்ற தகவல் உடன் வெளியாகும் என்று கருதி தடுக்கப்பட்டனரோ தெரியவில்லை.

அரச பிரசார சாதனங்களில் லங்கா முதித்தவில் படையினர் வந்த தகவலை மூடி மறைக்கவே முயற்சிக்கப்பட்டது நோக்கத் தக்கது.

அப்படியிருந்தும் தகவல் வெளியே வந்துவிட்டது. குறிப்பிட்ட தனியார் வானொலி செய்தி அறிக்கை வெளியாக முன்னரே பத்திரிகைகளில் தெளிவான செய்தி இடம்பெற்றுவிட்டது.

செய்திகளில் சில சமயங்களில் தவறுகள் இடம்பெறுவது வழக்கம்தான். அதனை உடனடியாக திருத்திவிட்டால் சந்தேகங்கள் எழாது.

***

### பயணிகளா? பணயர்களா?

லயன் எயார் விமானத்தை சுட்டு வீழ்த்தியதை கண்டிப்பதுபோல அரசுக்கு பிடித்தமாக அறிக்கைவிட தமிழ்க் கட்சிகள் போட்டி போடுகின்றன.

ஆனால் ஐநூறு பயணிகளை கவசமாக வைத்து லங்கா முதித்தவில் சீருடையினர் பயணம் செய்ததை இக் கட்சிகள் கண்டு கொள்ளவில்லையே ஏன்?

லங்கா முதித்த சரக்குக் கப்பலில் கவச வாகனங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. வரும்போது படையினர் ஏற்றி வரப்படுகிறார்கள்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்காக என்று அரசால் விடப்பட்ட கப்பலே லங்கா முதித்த.

அதனை இராணுவ விநியோகக் கப்பலாக பயன்படுத்தும் தேவை இருந்தால், பயணிகளை அதில் ஏற்றியிருக்கக்கூடாது.

'சரக்குக் கப்பலை கடத்தாதே!

பயணிகள் போக்குவரத்தை தடுக்காதே!' என்று யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. ஊர்வலம் நடத்தியுள்ளது.

சரக்குக் கப்பலில் ஆயுத தளபாடம் ஏற்றாதே!

பயணிகளை பணயம்வைத்து போக்குவரத்து நடத்தாதே!

வர்த்தகரின் சரக்கு கப்பலை ஆயுதக்கப்பல் என்று கூறாதே, தாக்கிவிட்டு நஷ்ட ஈட்டை மறுக்காதே! என்றும் கோஷம் போட்டிருந்தால் பக்கசார்பற்ற போராட்டம் என்று பாராட்டியிருக்கலாம்.

படையினரோ புலிகளோ பொதுமக்களின் போக்குவரத்து சாதனங்களை தமது போர் சார்ந்த தேவைகளுக்கு பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது. அதிலும் பொதுமக்களை தமக்கு கவசமாக ஏற்றிக்கொண்டு பயணங்கள் நடத்துவது மிகமிக கண்டிக்கத்தக்கது.

மனிதாபிமானம், மனித உயிர்களில் திடீர் திடீர் பாசம் கொண்ட தமிழ்க் கட்சிகளுக்கு மேற்கண்ட உண்மைகள் ஏன் தென்படுவதில்லை.?



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 34

**கடந்தவாரம்**

**முன்னாள் கலாசார அமைச்சர் எங்கர் கொல்லப்படுகிறார். அமீன்தான் கொல்ல உத்தரவிட்டான். கல்வி அமைச்சர் நாட்டைவிட்டு தப்பியோடினார். ஆத்திரம் கொண்ட அமீன் "அமைச்சர்கள் பதவி விலக விரும்பினால் விலகலாம்!" என்கிறான். அதனை நம்பி, ஓர் அமைச்சர் பதவி விலக விருப்பம் தெரிவிக்கிறார்.**

**இனி....**

# இடி அமீன்

ஏனைய அமைச்சர்களை அனுப்பி வைத்துவிட்டு, பதவி விலக விரும்பிய அமைச்சரை மட்டும் நிற்குமாறு கூறியிருந்தான் அமீன்.

**"பதவி விலக நீர் விருப்பம் தெரிவித்த காரணம் என்ன?"** என்று கேட்டான் அமீன். கேட்டுக் கொண்டே தன் நாற்காலியில் இருந்து எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தான்.

பதவி விலக விருப்பம் தெரிவித்த அமைச்சருக்கு மெல்ல மெல்ல பயம் பிடித்துக் கொண்டது.

சக அமைச்சர்கள் ஏன் மௌனமாக இருந்தனர் என்பது புரியத் தொடங்கியது.

அமீன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று அவர் தடுமாறிக் கொண்டிருந்தார்.

அமீன் அவரை நெருங்கி நின்றான். **"என்ன பதிலையே காணோமே?"** என்றான்.

அமைச்சருக்கு நாக்கு உலர்ந்து போனது. "உடல்.. உடல் நிலை சரியாக இல்லை" என்று கலப்படமில்லாத பொய் ஒன்றை உதிர்த்தார்.

"அப்படியா?" என்று கேட்ட அமீனின் கையில் 'அது' எப்படி வந்தது என்பது அமைச்சருக்குத் திகைப்பாக இருந்தது.

தன் கையில் உள்ள கத்தியைக் கண்டு அமைச்சரின் உடம்பு முழுக்க நடுங்குவதையும், அவர் நெற்றியில் வியர்வை அரும்புவதையும் ரசித்தபடி மேலும் அவரை நெருங்கிய அமீன்; **"உபயோகம் இல்லாத உடம்பை வைத்து என்ன செய்யப்போகிறீர்? அமைச்சராக இருந்து என்ன கிழிக்கிறீர்? பாரம் தூக்குகிறீரா? அல்லது பாறாங்கல் உடைக்கிறீரா?"** என்று கேட்டான்.

"இல்லை. சுலபமான பணிதான்!" என்றார் அமைச்சர்.

அப்படியான பதிலைத்தான் எதிர்பார்த்தான் அமீன். அவன் செய்யப்போகும் காரியத்திற்கு அவ்வாறான பதில்தான் தேவை.

**"சுலபமான பணிக்கே ஒத்துழைக்காத இந்த உடல் ஏன்? இதற்கு ஒரு உயிர் ஏன்? நீர் செத்துப்போகலாம் தப்பே இல்லை!"**

அமைச்சர் மன்றாட முன்னரே அமீனின் கத்தி அவரது அடிவயிற்றில் செருகப்பட்டது. குடல் வரை பாய்ந்தது போலிருந்தது.

மரண அலறலோடு மடங்கி விழுந்து உயிர்விட்டார் அமைச்சர். அப்படியே அவர் அருகே அமர்ந்து அவர் கைவிரல் ஒன்றை வெட்டி எடுத்து புசிக்கத் தொடங்கினான் அமீன்.

அந்த விரலில் இருந்து வழிந்த இரத்தத்தை சப்புக்கொட்டி ருசித்தான். அவன் கடைவாய் ஓரமாக இரத்தம் வழிந்தது.

காணாமல் போனோர் பட்டியலில் அந்த அமைச்சரின் பெயரையும் சேர்த்துவிட்டனர்.

"உகண்டாவில் காணாமல் போவோர் எண்ணிக்கை ஏறிக்கொண்டு போகிறது. மனித உரிமைகள் காற்றில் பறக்கிறது. சர்வாதிகார ஆட்சி நடக்கிறது. உகண்டா மக்கள் அமீனால் சிறை வைக்கப்பட்டுள்ளனர்...." என்று உலகச் செய்திகளில் கூறப்பட்டன.

உடனடியாக அமீன் மறுப்பு வெளியிட்டான். உகண்டா வானொலி அமீனின் மறுப்பை அவனது குரலில் வெளியிட்டது.

**"காணாமல் போனோர் பற்றி விசாரிக்க பிரதம நீதியரசர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படும். கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமல் போனோரைப் பற்றி இப்போதுதான் தகவல்கள் வெளியாகின்றன. அதனைவைத்து என் ஆட்சியில் அநியாயம் நடப்பதாகக் கூறுவது அப்பட்டமான கட்டுக்கதை.**

**மனித நீதியை மதித்து ஆட்சி செய்து வருகிறேன். என் ஆட்சியில் தப்பித் தவறி தவறுகள் நடந்திருந்தால் கண்டு பிடித்து தண்டிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.**

**குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிப்போம். என் ஆட்சியில் யாரும் காணாமல் போயிருந்தால் மக்கள் உடனடியாக தங்கள் சொந்த விவரங்களுடன் எனக்கு அறிவிக்க வேண்டும். நான் தக்க நடவடிக்கை எடுப்பேன்"** என்று தேனொழுகப் பேசினான்.

விசாரணைக்குழுத் தலைவராக யாரை நியமிக்கலாம் என்று தனது புலனாய்வு பிரிவித் தலைவருடன் கலந்தாலோசித்தான் அமீன்.

"நாம் என்ன நினைக்கிறோம் என்று தெரிந்து அதற்கேற்ப அறிக்கை தரக்கூடிய நீதிபதிகளும் இருக்கிறார்கள்!" என்றார் புலனாய்புப் பிரிவு தலைவர்.

**"நியாயமாக விசாரிப்பது போல பாவ்லா காட்டவும் வேண்டும். அரசுமீதும் ஒன்று இரண்டு கண்டனத்தை ஒரு பெயருக்குக் கூறிவிட்டு, அமீனின் கை சுத்தமானது என்று உரத்துச் சொல்லிவிட வேண்டும். அப்படியான ஒருவர்தான் தேவை!"** என்றான் அமீன்.

அவ்வாறான ஒருவரை தெரிவு செய்து, விசாரணைக்குழு அமைத்து விசாரிப்பு நடத்தினார்கள். சாட்சியங்கள் பதிவு செய்யப்படுவதாக செய்திகளில் இடம்பெறச் செய்தனர்.

அமீனோ, அவனது புலனாய்வுத் துறையோ எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்பட்டது.



விசாரணை நடத்திய பிரதம நீதியரசருக்கு சாட்சியங்களைக் கேட்கக் கேட்க மனம் நெகிழ்ந்து போய்விட்டது.

"நடந்திருப்பது மிகப் பெரிய அநியாயம். ஒரு சில அதிகாரிகளையாவது தண்டிக்க வேண்டும். அதற்கு உத்தரவாதம் தந்தால்தான் உங்களுக்குச் சார்பாக அறிக்கை தருவேன்!" என்று கூறிவிட்டார் பிரதம நீதியரசர்.

விஷயம் அமீனுக்கு வந்தது. **"அவருக்கு ஏன் சிரமம்? நாங்கள் எழுதும் அறிக்கையில் மட்டும் அவர் கையொப்பம் போட்டால் போதும். மறுத்தால் கையொப்பம் போட கையை மட்டும் நல்ல நிலையில் விட்டுவைத்துக் கொண்டு ஆளை புரட்டி எடுங்கள்!"** என்றான் அமீன்.

அப்படித்தான் நடந்தது. சித்திரவதை தாங்காமல் காட்டிய இடத்தில் கையொப்பம் போட்டார் பிரதம நீதியரசர்.



காணாமல் போனோருக்காக முதலைக் கண்ணீர்

"காணாமல் போனோருக்கும் அமீன் ஆட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கடந்த கால ஆட்சிகளில்தான் மிக இரகசியமாக பல நூற்றுக்கணக்கானோர் பலியாகி காணாமல் போயுள்ளனர்!" என்றது அறிக்கை.

பிரதம நீதியரசரும் அவரது குடும்பத்தினரும் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர். பாதுகாப்பு என்ற போர்வையில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அவரைச் சுற்றி நிறுத்தப்பட்டனர்.

ஒருமாதம்வரை அவ்வாறு கண்காணிப்பில் வைத்திருந்துவிட்டு, ஒருநாள் அவரை சுட்டுக் கொன்றனர். தலையை மட்டும் வெட்டியெடுத்துச் சென்று அமீனிடம் கொடுத்தனர்.

**"நீதிக்குத் தலை வணங்கு என்று கூறுவார்கள். பிரதம நீதியரசரின் தலையே என் முன்னால் வணங்கிக் கொண்டு இருக்கிறது!"** என்று சிரித்துவிட்டு அந்தத் தலையையும் கொண்டு சென்று குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்தான்.

**"பெறுமதியான தலைகளைச் சேகரிப்பது எனக்கு பொழுதுபோக்கு,"** என்று கூறி அமீன் நகைத்தபோது, பேய் ஒன்று நகைத்தது போல உணர்ந்தனர் அங்கு நின்ற அதிகாரிகள்.

அமீன் மனித மாமிசம் சாப்பிடும் பழக்கம் உள்ளவன் என்பது படிப்படியாக வெளியே தெரியத் தொடங்கியது.

அமீனும் அதனை மறுக்கவில்லை. தன் மீது ஒரு பயம் இருக்க வேண்டுமானால் இப்படியான விஷயங்கள் தெரியத்தான் வேண்டும் என்று நினைத்து மறுக்காமல் விட்டிருந்தான்.

பிரதம நீதியரசரின் தலையில்லாத உடலுக்கு அமீன் நேரில் சென்று அஞ்சலி செய்தான்.

"எங்கள் ஆட்சிமீது களங்கம் கற்பிக்குமாறு எதிரிகள் மிரட்டியும் பணியாத நீதிமானை, எதிரிகள் பலியாக்கிவிட்டனர். இதற்கு காரணமானவர்களை கைது செய்யும்வரை நான் தூங்கப்போவதில்லை!" என்று பொய்யான சோகத்தோடு கூறினான்.

அமீனின் நடிப்பை மக்கள் படிப்படியாக இனம்காணத் தொடங்கினார்கள்.

இதற்கிடையே உகண்டாவில் புதிய புதிய பணக்காரர்கள் பலர் தோன்றினர்.

இராணுவ உயரதிகாரிகளும், அமீனுக்கு வேண்டப்பட்டவர்களுமே திடீர் பணக்காரர்களாகினர்.

உகண்டாவை விட்டு வெளியேறிய ஆசிய நாட்டவர்களின் சொத்துக்களை அபகரித்தே பணக்காரர்களாகினர்.

இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிக்கு 20 மாளிகைகள் சொந்தமாகின. அத்தனையும் ஆசிய நாட்டவரின் சொத்துக்கள். இன்னொரு அதிகாரி இரண்டு டசின் ட்ரெயிலர்கள், பல விலை உயர்ந்த கார்கள், மற்றும் ட்றக்குகளுக்கு சொந்தக்காரனாகி விட்டான்.

பல வர்த்தக நிலையங்களைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர் இராணுவ அதிகாரிகள்.

வர்த்தக நிலையங்களில் உள்ள பொருட்களின் உண்மையான விலை அவர்களுக்குத் தெரியாது.

அதனால் பொருட்கள் வாங்க வருபவர்களிடமே, "முன்னர் இதனை என்ன விலை கொடுத்து வாங்கினீர்கள்?" என்று கேட்பார்கள்.

அவர்கள் கூறும் விலையை விட ஓரளவு குறைத்து விற்பனை செய்தனர்.

இராணுவ அதிகாரிகள் சீருடையில் நின்று மேற்பார்வை செய்ய, அவர்களது படையணியில் உள்ளவர்கள் விற்பனையாளர்களாகச் செயற்பட்டனர்.

இக் காட்சிகள் மக்களிடேயே இடி அமீன் ஆட்சிமீதான பாரிய அதிருப்திகளைத் தோற்றுவித்தன.

கம்பாலாவில் உள்ள பிரபலமான பல் வைத்தியசாலையை பொறுப்பெடுத்த படை அதிகாரி, அங்குள்ள விலை உயர்ந்த உபகரணங்களையெல்லாம் கழற்றி விற்றுவிட்டான்.

மருந்துக் கடைகளில் கிடந்த மருந்துப் பொருட்களையும் வாங்க வருபவர்கள் கூறும் விலைக்கே விற்றுத் தீர்த்தனர்.

வர்த்தக கட்டடங்களில் உள்ள பொருட்களையெல்லாம் ஒன்றுவிடாமல் அபகரித்துவிட்டு, கட்டடங்களைப் பூட்டி சாவிகளை மட்டும் வர்த்தக அமைச்சில் ஒப்படைத்தனர்.

வட இந்தியாவைச் சேர்ந்த மத்வானி குடும்பத்திற்கு உகண்டாவில் பல கோடிக்கணக்கான பவுன் பெறுமதியான சொத்துக்கள் இருந்தன. வர்த்தக சாம்ராஜ்யம் ஒன்றையே அவர்கள் வைத்திருந்தனர்.

**தருவது ரசிகன்**

'கச்சிரா' என்ற இடத்தில் மத்வானி குடும்பத்துக்கு சொந்தமான பெரும் தோட்டங்கள் இருந்தன. அவற்றின் மத்தியில் நவீன மாளிகைகள் இருந்தன. மொத்தம் மூன்று மாளிகைகள் இருந்தன.

'மத்வானி குடும்ப சொத்தில் எவரும் கை வைக்கக்கூடாது! என்று கண்டிப்பான உத்தரவிட்ட அமீன், அத்தனை சொத்துக்களையும் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டான்.

மத்வானியின் மாளிகைக்கு நேரில் விஜயம் செய்த அமீன் திறந்த வாய் மூடாமல் பிரமித்து நின்றுவிட்டான்.

மாளிகையின் சுவரில் ஓவியமாக தொங்கிய பெண்ணின் அழகு அவனை ஆட்டிப் படைத்தது.

**"யார் இவள்?"** என்றான்.

(இடி தொடரும்)

# சிக்கிய வீடியோ படங்கள்

## திடுக்கிடும் தகவல்கள் அம்பலம்

**செ**ன்னையில் நீலப்படங்கள் தயாரித்த கும்பல் ஒன்று பொலிசாரிடம் மாட்டிக் கொண்டதை அடுத்து திடுக்கிடும் பல தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.



பிடிபட்ட கும்பல் இதுதான்

புதிதாக திரைக்கு வரும் படங்களை திருட்டுத்தனமாக வீடியோவாக்கி விற்பனை செய்தது ஒரு கும்பல்.

திரையரங்க ஊழியர்களை கையில் போட்டுக்கொண்டு, இரவோடு இரவாக பிலிம் சுருளை எடுத்து வீடியோவிலும், சி.டி.யிலும் பதிவு செய்வார்கள்.

திரையரங்க உரிமையாளர்களுக்கு இந்த விடயம் தெரியவராது. இரவுக்காட்சி முடிந்து எல்லோரும் தூங்கிய பின்னர்தான் பிலிம் ரோலை கழற்றி கொண்டு செல்வார்கள். பதிந்துவிட்டு விடிய முன்னர் கொண்டுவந்து வைத்துவிடுவார்கள்.

தமிழக முதல்வருக்கு இக் கும்பல் பற்றி தகவல் போனதும், கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பொலிஸ் உடனடியாக களத்தில் இறங்கி அனைவரையும் மடக்கிப்பிடித்தது.

அப்போதுதான் கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக, நீலப்பட தயாரிப்பு விவகாரம் வெளிப்பட்டது.

மார்க்கெட் சரிந்த நடிகைகளை வைத்து நீலப்படம் தயாரிப்பதிலும் இக் கும்பல் ஈடுபட்டுள்ளது.

அவர்கள் தயாரித்த வீடியோப் படங்களைப் போட்டுப் பார்த்த பொலிஸாருக்கு அதிர்சி காத்திருந்தது.

பிரபல நடிகை ஒருவர் மகா தாராளமாக நடித்திருக்கும் காட்சிகளும், சிரிப்பு நடிகர் ஒருவர் சம்பந்தப்பட்ட நிர்வாணக் காட்சிகளும் கண்டு பொலிசாருக்கே தம் கண்களை நம்ப முடியவில்லையாம்.

இதுபற்றி அந்த நடிகைக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறும்போது: "பிரபல நடிகையாக மாறுவதற்கு முன்னர் அந்த நடிகை தெலுங்குப் படங்களில் தாராளமாக நடித்தார். அந்த காட்சிகளை வெட்டி இணைத்துள்ளனர்!" என்று கூறுகிறது. அந்த நடிகை வேறு யாருமல்ல குஷ்புவேதான்.

ஆனால் தமிழக பொலிசார் வேறு விதமாக கூறுகின்றனர்: 'மூன்றெழுத்து குண்டான நடிகை ஒருவருக்கும் இரண்டெழுத்து நடிகை ஒருவருக்கும் இக் கும்பலோடு தொடர்பு இருக்கிறது. இவர்கள் இருவரும் நீலப்படங்களில் நடிக்கவில்லை. ஆனால் திருட்டு வீடியோ விவகாரத்தில் பொலிசார் தலையிடாமல் இருப்பதற்காக உயரதிகாரிகள், அமைச்சர்கள் போன்றோரை சரிக்கட்ட இந்த நடிகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்' என்கிறது பொலிஸ்.

குறிப்பிட்ட நீலப்படங்களில் நேரடியாக நடித்த மாஜி பிரபல நடிகைகள் வெலவெலத்துப்போய், அரசியல் பிரமுகர்களைதேடி அலைகிறார்களாம்.

# வைர ராணி

## எலிசபெத் டெய்லர்

**அ**திக திருமணம் செய்து சாதனை படைத்தவர் ஹொலிவூட் படவுலக முன்னாள் கனவுக்கன்னி எலிசபெத் டெய்லர்.

சமீபத்தில் அவர் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறார். தன்னிடமிருந்து 27 வைரங்கள் பொறிக்கப்பட்ட பொம்மை ஒன்றை ஏலம் விட்டார். சுமார் 20 இலட்சம் ரூபாய் கிடைத்தது.



அப்பணத்தை அப்படியே எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நிவாரணநிதிக்காக கொடுத்துவிட்டார்.

எலிசபெத் டெய்லருக்கு சொந்தமான வைர நகைகள் பற்றி ஒரு மேலோட்டமான ஆனால் பிரமிப்பான புள்ளிவிபரம்.

1993இல் ஒஸ்கார் பரிசளிப்பு விழாவுக்கு எலிசபெத் அணிந்து சென்ற எமரால்ட் கற்கள் பதிக்கப்பட்ட வைர நெக்லசின் விலை நான்கரை கோடிரூபாய்.

இலண்டனில் எய்ட்ஸ் ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொள்ள அவர் அணிந்து சென்ற மரகதக் கற்கள் பொறிக்கப்பட்ட நெக்லஸ் மற்றும் காதணிகளின் பெறுமதி 10 கோடி ரூபாய்.

கைகளில் அணிந்துள்ள விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பிரேஸ்லெட் மற்றும் மோதிரங்களின் எடை 33.19 கரட். விலை 3 கோடி.

1992இல் எய்ட்ஸ் ஒழிப்பு நிதிக்காக, தனது பிரியமான வைர முகமூடியை ஏலம் விட்டார். நான்கரை கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.

இங்கிலாந்து அரசியின் கஜானாவில் பாதுகாக்கப்பட்டு வந்த நானூறு ஆண்டு பழமையான வைரக்கல்லை 17 இலட்சம் கொடுத்து ஏலத்தில் எடுத்தார். மேற்கொண்டு 50 இலட்சம் செலவு செய்து நெக்லசாக போட்டுக்கொண்டார்.

இவையெல்லாம் எலிசபெத் டெய்லரின் சொந்த மதிப்பில் ஒரு துளிதான்.

# இதயம் இல்லாது போனால்.....

**ஒ**ரு பெண்ணின் கருவில் உருவாகும் இரட்டைக் குழந்தைகளில் ஒன்றுக்கு இதயமே இல்லை என்றால் என்ன செய்யலாம்?

கருக்கலைப்பு செய்தால் தாயின் உயிருக்கும், இதயம் உள்ள குழந்தையின் உயிருக்கும் ஆபத்து நேரலாம். அப்படியே விட்டாலோ இரண்டு உயிர்களை காக்கும் வலிமை ஒரு இருதயத்திற்கு இருக்காது.

இந்தப் பிரச்சனைக்கு தற்போது பிரிட்டிஷ் டாக்டர்கள் தீர்வு கண்டுள்ளனர்.

அதன் பிரகாரம் இருதயம் இல்லாத குழந்தையின் உடலுக்கு செல்லும் இரத்த ஓட்டத்தை நிறுத்திவிட்டு, அந்தக் கருவை மேலும் வளரவிடாமல் செய்வதே வழி. இதனால் இதயம் உள்ள குழந்தை மட்டும் நல்ல முறையில் பிறக்கும். மற்றொரு கருவை பின்னர் வெளியேற்றிவிடலாம்.

# கிரிக்கெட் பிரதமர்

**பா**கிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் இனி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலையில் கிரிக்கெட் விளையாடத் தீர்மானித்துள்ளார். அவர் விளையாடுவதற்கு ஏற்ற மைதானத்தைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் பாகிஸ்தான் அரசு அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆனால் பாதுகாப்பான மைதானத்தைத் தேர்ந்தெடுப்பது அவர்களுக்கு மிகவும் கடினமாக உள்ளது.

நவாஸ் செரீப்புக்கு தற்போது அரசியல் நெருக்கடிகள் மிகுந்து காணப்படுகின்றன. அவற்றில் இருந்து தன்னைச் சிறிது விடுவித்துக் கொள்வதற்காகவே அவர் கிரிக்கெட் விளையாடத் தீர்மானித்துள்ளார்.

அத்தோடு மைதானத்தைச் சுற்றி சிறிது நேரம் ஓடவும் முடிவு செய்துள்ளார் அவர். இது அவரது நண்பர்களின் ஆலோசனை என்று சொல்லப்படுகிறது.

# பவள விழாவில் கவர்ச்சி நடனம்

**க**லைஞர் கருணாநிதிக்கு சென்னையில் திரைப்பட உலகத்தினர் நடத்திய பவளவிழாவில் கலைநிகழ்ச்சிகள் நடந்தன.



அந்தக் கலை நிகழ்ச்சிகள் பலரது கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளன. தொப்புள் தெரியும் உடையணிந்து ப்ரீதா விஜயகுமார் உட்பட நடிகைகள் பலர் மேடையில் ஆடினார்கள்.

முன்வரிசையில் இருந்த அரசியல் புள்ளிகள் வைத்த விழிவாங்காமல் பார்த்து இரசித்தனராம்.

ப்ரீதா விஜயகுமாரும், அவர் சகோதரர் அருண்குமாரும் காதலர்கள் போல ஒருவர்மேல் ஒருவர் புரண்டு ஆடியதைக் கண்டு பார்வையாளர்கள் முகம் சுளித்தபோதும், கலைஞர் உட்பட அரசியல் பிரமுகர்கள் முகம் கோணாமல் இரசித்தனராம்.

மேடையில் விதம் விதமான சேலைகளில் நடிகைகள் நடமாடியபோது, அரசியல் பிரமுகர்கள் டென்ஷனாகி விட்டனர். அன்றிரவு எந்தெந்த நடிகைக்கு தூதுகள் பறந்தனவோ? தூக்கம் போனதோ?



படிப்பகம்

www.padippakam.com



## சாதனை முத்தம்

முத்தத்தில் பல ரகம் உண்டு. இந்த ஜோடியின் முத்தம் உலக சாதனை முத்தம்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் இந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற நீண்டநேர முத்தப் போட்டியில் பலநூறு ஜோடிகள் சுவாரசியத்துடன் குதித்தன. ஆனாலும் உதடு வலித்து சகல ஜோடிகளும் வாபஸாகிவிட்டன. இந்த ஜோடி மட்டும் 29 மணிநேரம் சளைக்காமல் முத்தமிட்டு உலக சாதனை படைத்தது. மார்க், ரொபேர்டா என்ற இந்த ஜோடிக்கு ஃபிரான்ஸ் சென்றுவர உணவு தங்குமிட வசதிகளுடன் பயணச்சீட்டும் பரிசாகத் தரப்பட்டது. பார்த்தீர்களா, கரும்பு தின்ன கூலியும் கொடுக்கிறார்கள்.

## கண்ணான கண்

பூதக் கண்ணாடிகள் போன்று காட்சியளிப்பது என்ன தெரியுமா? ஒரு சிலந்தியின் கண்கள். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? உலகில் பல நூற்றுக்கணக்கான சிலந்தி இனங்கள் உள்ளன. ஆனால் 'டினோபிஸ்' என்ற இனச் சிலந்தியின் கண்கள்தான் மிகப் பெரியவை. கண் ஒன்றின் அகலம்- 1.5 சென்டிமீட்டர். பெரிய கண்கள் இருப்பதனால் இவற்றின் பார்வை மிகக் கூர்மையாக இருக்கும் என்பதில்லை. ஆனால் இரவு வேளைகளில் இச்சிலந்திகள் அங்குமிங்கும் சுற்றித்திரிய இக் கண்களே இவற்றுக்கு உதவுகின்றன.





தென் கொரியாவில் ஆண், பெண் 'பாடிபில்டிங்' போட்டிகள் நடந்தன. கட்டுமஸ்தான உடம்புள்ள அழகர், அழகிகள் ஜோடி ஜோடியாகவும் கலந்து கொண்டனர்.


## முறுக்கான ஜோடி

படத்தில் இருப்பது ஆண்-பெண் கலப்பு இரட்டையர் போட்டியில் வெற்றிபெற்ற ஜோடி. கடும் பயிற்சி செய்து உடம்பை முறுக்கேற்றி வைத்திருக்கிறார்கள். இப்போட்டியில் கலந்துகொள்ளும் பெண்களுக்கு மெல்லிடை என்ற உவமை பொருந்தாது. எல்லோரும் வல்லிடையர்கள்.

## பெரிசு பெரிசு

படத்தில் இருப்பது சோபா. ஆனால் யார் வீட்டிலும் இதனை வைக்க இடமிருக்காது. அந்தளவு பிரமாண்டமான உலக சாதனை சோபா இது.

பாங்ஹொக்கில் நடைபெற்ற கண்காட்சியொன்றில் இச் சோபா வைக்கப்பட்டிருந்தது. இதில் நல்ல வாட்டசாட்டமான 30 பேர் ஒரே சமயத்தில் அமர முடியும். எடை 520 கிலோ. நீளம் 25 அடி. உயரம் 12 அடி. இதில் அமரவேண்டுமானால் ஏணிவைத்துத்தான் ஏறவேண்டும். இப்படியான சோபாக்கள் விற்பனைக்கு வந்தால் இலவச இணைப்பாக ஒரு ஏணி கொடுக்க வேண்டியிருக்கும்.



## திகில் பெட்டி

## செயற்'கை'

47 வயதான கேம்பல் விபத்தில் ஒரு கையை இழந்தபோது சற்று மனம் தளர்ந்தது உண்மைதான். இப்போது தளர்ச்சியெல்லாம் போயாச்சு.

இயற்கையான கை போன்ற செயற்கை கை பொருத்தியுள்ளனர். இதனை 'பையோனிக் கை' என்று அழைக்கின்றனர். உலகில் முதல் முறையாக பையோனிக் கை பொருத்தப்பட்டது இவருக்குத்தான். எவ்வித சிரமமும் இல்லாமல் இக் கை இயங்கும்.

எடின்போர்க் நகரில் உள்ள பிரின்சஸ் மார்கரெட்ரோஸ் மருத்துவமனையில் வைத்து இக் கை பொருத்தப்பட்டது.



www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 76

# மிரட்டி மிரட்டி நடிக்க வைத்தனர்

## நடிக்க மறுத்தால் இலட்ச ரூபாய் அபராதம்

சினிமா உலகில் நடிகையாக இடம்பிடிப்பது சாதாரண காரியமல்ல. குடும்ப பின்னணி சிறப்பாக உள்ள பெண்கள்கூட நடிகையான பின்னர் சில விட்டுக்கொடுப்புக்களை செய்யாமல் தாக்குப்பிடிக்க முடியாது. அப்படியிருக்க வீட்டுக்கு தெரியாமல் சினிமா ஆசையில் ஓடிவருபவர்கள், குடும்ப கஷ்டம் காரணமாக நடிக்க வருபவர்கள் நிலை சொல்லி மாளாது.

கதாநாயகியாகும் கனவில் மிதந்து பலருக்கு விருந்தாகி ஏமாந்துபோன சிலர் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு கூறிய சோகக்கதைகள் சிலவற்றை கேளுங்கள்.

மலையாள கவர்ச்சிப் படங்களில் நடித்துவருபவர் ஹர்ஷா. அவர் தனது அனுபவத்தை கூறுகிறார்.

"மலையாளப் படத்தில்தான் எனக்கு முதல் சான்ஸ் கிடைச்சது. கல்லூரி மாணவி வேஷம். முதலில் நல்ல நல்ல காட்சிகள் வைத்தார்கள்.

பின்னர் ஷவரில் குளிப்பது மாதிரியான காட்சி வைத்தார்கள். நானும் முதலில் உடையோடு குளிச்சேன். பின்னர் உடுப்பெல்லாம் கழட்டச் சொன்னபோது எனக்கு பயமாகி விட்டது.

"பயப்படாதே! இந்தப் படம் இந்தியாவில் வெளியாகாது. வெளிநாட்டில்தான் வெளியாகும். பேசிய தொகையோடு அஞ்சாயிரம் அதிகமாகத் தர்ரேன்னு சொன்னாங்க.

உடுப்பே இல்லாமல் தொட்டியில் நீந்தச் சொன்னாங்க... எல்லாத்துக்குமாக சேர்த்து முப்பதாயிரம் ரூபா கொடுத்தார்கள்.

அந்தச் சமயத்தில் அது எனக்குப் பெரிய தொகை. படம் வெளிநாட்டில்தான் வெளியாகும் என்று சொன்னார்கள். கடைசியில் என்னோட ஏரியா தியேட்டரில் வெளியிட்டாங்க. அத்தோடு என் இமேஜ் காலி. இரவில் ரவுடிகள் தொல்லை. அப்பப்ப பொலிஸ்காரர்களும் வருவாங்க. எல்லோரையும் சமாளிக்க வேண்டி இருக்கிறது.

"ஏண்டா சினிமாவுக்கு ஆசைப்பட்டோம் என்று ஆயிப்போச்சு.

இப்ப ஏரியா மாற்றி வீடு பிடித்திருக்கிறோம்."

### பழிவாங்கும் படம்

இன்னொரு நடிகை ஜோதி. அவர் தனது கசப்பான அனுபவங்களை மீட்டுகிறார்:

"என்னை முதலில் ஒப்பந்தம் செய்யும்போது தன்னை ஏமாற்றியவனை பலிவாங்கும் ஒரு பெண்ணின் கதை என்றார்கள். அறிமுகமாகும் முதல் படம்தானே என்று குறைந்த சம்பளத்திற்கு ஒப்புக்கொண்டேன்.

நான் நடித்து இந்தப் படம் நன்றாக ஓடினால் இலட்சக்கணக்கில் சம்பளம் வரும் என்று நினைத்துக்கொண்டேன்.

பக்கத்து வீட்டில் குடிவரும் வாலிபன் என்னைக் காதலிக்கிறான். நானும் அவனது காதல் வலையில் விழுகிறேன். சன்னலில், தியேட்டரில், கடிதங்களில் இருவரும் சந்தித்து காதலை வளர்க்கிறோம்.

ஒரு நாள் எங்கள் வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் இரவு என் பெட்ரூமுக்கு வருகிறான். காதல் மயக்கத்தில் என்னை அவனிடம் கொடுத்து விடுகிறேன்.

அதன்பின்னர் அவன் தலைமறைவாக, நான் தேடிப்பிடித்து பழிவாங்குகிறேன். அதுதான் கதை.

பெட்ரூமில் இரவு உடையுடன் படுத்திருப்பேன். அந்தக் காட்சியில் நடிக்க வெங்காயத்தோலைவிட மெலிதான நைட்டியை கொடுத்துப் போடச் சொன்னார்கள் நான் தயங்கியபோது, "இது இருட்டிலே படமாகும் காட்சி. உன் உடலின் பாகங்கள் எதுவும் தெரியாது" என்றார்கள்.

பின்னர் நானும் அந்த வாலிபனும் படுக்கையில் புரளும் காட்சிகள். என்னை கிட்டத்தட்ட நிர்வாணமாகவே ஆக்கிவிட்டனர்.

நான் மறுத்தபோது "ஒப்பந்தத்தில் நாங்க சொல்றபடி நடிப்பதாக கையெழுத்து போட்டிருக்கே. உனக்கு சம்மதம் இல்லையானால், நாங்கள் கேட்கும் நஷ்ட ஈட்டை கொடுக்க வேண்டியிருக்கும். இலட்ச ரூபா நஷ்டஈடு கொடுக்க சம்மதமானால் தாராளமாக வீட்டுக்குப் போய்க்கோ" என்றார்கள். வேறு வழியில்லாமல் அவர்கள் சொன்னபடி ஆடி நடித்தேன். அதன்பின்னர் பிழைக்க வேறு வழி தெரியாததால் இந்தமாதிரி படங்களில் தொடர்ந்து நடிக்க ஆரம்பித்தேன்."

### அதிபிரபலம்

தமிழ் சினிமா உலகில் தற்போதும் அதிபிரபலமாக உள்ள இயக்குநர் அவர். தனது படங்களில் புதுமுகங்களை அறிமுகம் செய்வதில் வல்லவர். புதுமுகங்களை அவர் அணுகும் விதமே தனியானது.

யாருமில்லாத அறை ஒன்றுக்குள் ஏறக்குறைய நிர்வாணமாக அமர்ந்திருக்குமாறு கூறுவாராம். அவ்வாறு அமர்ந்திருந்தால்தான் "கூச்சம் போகும். இயல்பாக நடிக்க வரும்" என்றும் கூறுவாராம்.

பெரிய இயக்குநராச்சே என்று புதுமுகங்களும் அவர் கூறுகிறபடி கேட்பார்கள்.

அவர்களுக்கே தெரியாமல் அந்த அறைக்குள் வீடியோ கமரா வைக்கப்பட்டு படம் எடுக்கப்படும். பின்னர் அந்த கசட்டை காட்டிக் காட்டியே நடிகையை குறிப்பிட்ட காலத்திற்கு தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பாராம் அந்த இயக்குநர்.

நிறத்தை குறிக்கும் ஒரு படத்தில் அவரால் அறிமுகமான 'ராஜ' நடிகையை அந்த இயக்குநர் படாதபாடு படுத்தியதுடன், தனது சொந்தப் படம் ஒன்றுக்காக சில லகரங்கள் கடனாகவும் வாங்கினாராம். இதுவரை திருப்பிக் கொடுக்கவில்லை. கேட்கவா முடியும்? அந்த நடிகைக்கு நல்ல வாய்ப்புக்கள் இல்லாததால் காசுக் கஷ்டத்தில் இருக்கிறார்.

## அசல் விஜ[...]

'கள்ளழகர்' படத்தின் காட்சியில் மேக்-அப் நடிக்கிறார் விஜயகாந்த்.

படப்பிடிப்புக்கள் [...] நடந்துவருகின்றன. இப்பட[...] பெரிதும் எதிர்பார்க்கி[...] விஜயகாந்த்.

## புதுப்பித்த நட்[...]

பார்த்திபனுடன் கா[...] விட்ட சங்கீதா ராமராஜ[...]டன் நட்பாக இருந்தா[...] அதுவும் திகட்டியதால் ஜோ[...] பிரிந்தது. இப்போது ராமரா[...]னும், சங்கீதாவும் தமது நட்[...] புதுப்பித்துக்கொண்டுவிட்[...]னர்.

ராமராஜனின் சிபாரி[...] பூமனம் படத்தில் அவருட[...] இணைகிறார் சங்கீதா.



ஸ்ரீகாந்த்-சுவாதி
படம்: எங்க மாப்ளே



முரளி
சுவலட்சுமி-ரேகா
படம்:"என் ஆச ராசாவே"

முகப்பில்

## அச்சம்

"ஆடை முழுதும் நனைய நனைய மழையடிக்குதடி! நெஞ்சில் ஆசை வெள்ளம் வழிய வழிய அலையடிக்குதடி!"

சிம்ரான்

புதுமுகங்கள் பலர் மும்பாயில் இருந்து வருவதால் சிறிது அஞ்சுகிறார் சிம்ரான். தன்னை மிஞ்சும் கவர்ச்சிக் கன்னிகள் வந்தால், ஓரம்கட்டிவிடுவார்களோ என்றுதான். அச்சம்.

சிம்ரானும் மும்பாயிலிருந்துதான் வந்தவர். மும்பாய் அழகிகளின் படையெடுப்பால் இந்த மும்பாய்க்காரி அஞ்சுகிறார். குறிப்பாக பூணம் என்றொரு நடிகையின் வரவை எண்ணித்தான் அதிகமாக அஞ்சுகிறாராம்.

## பாடகியின் மயக்கம்

பின்னணி பாடகி அனுராதா ஸ்ரீராம் பற்றிய திடுக்கிடும் தகவல் ஒன்றை தமிழக சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

சமீபகாலமாக அவருக்கு போதைப்பழக்கம் ஏற்பட்டுள்ளதாம். அதற்கு காரணம் பாடகர் ஹரிகரனுக்கும் அவருக்கும் உள்ள உறவுதானாம்.

இருவரும் தனிமையில் சந்திக்கும்போது போதை ஏற்றிக்கொண்டு இனிமை காண்கிறார்களாம்.

இதனால் அனுராதாவுக்கும் அவர் கணவர் ஸ்ரீராமுக்கும் இடையே விரிசல் ஏற்பட்டுவருகிறதாம்.

அந்தக் கால பின்னணிப் பாடகியான ஒருவர் மேடை நிகழ்ச்சிகளிலும் போதையில் ஆடிப்பாடி ரசிகர்களை கிறங்கடிப்பார். தற்போதைய பாடகிகளில் சிலர் அவரையே மிஞ்சி விட்டார்களாம்.

## 'சக்தி' பானு

பானுப்பிரியாவுக்கு கல்யாணம் முடிந்ததும் அமெரிக்காவுக்கு பறந்தார். அதே சூட்டோடு சென்னை திரும்பினார்.

'சக்தி' தொலைக்காட்சி நாடகத்தில் மிகுந்த ஈடுபாட்டோடு நடித்து வருவதால் தான் அமெரிக்காவில் நீண்டநாள் தங்கமுடியவில்லையாம்.

அவர் வருவாரா, மாட்டாரா? என்று தவித்த 'சக்தி' நாடக இயக்குநர் பானுப்பிரியாவின் ஈடுபாட்டால் சந்தோசத்தில் இருக்கிறார். 'சக்தி' நம்நாட்டிலும் பலரை கவர்ந்துள்ளது.

## உள்ளமெல்லாம் உனக்காக

கார்த்திக்குக்கு சூப்பர்ஹிட் கொடுத்த படம் 'உள்ளத்தை அள்ளித்தா'. இப்போது புதிதாக கார்த்திக் நடிக்கும் படத்திற்கு 'உள்ளமெல்லாம் உனக்காக' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

பிரபுதேவா நடித்த 'ராசய்யா' படத்தை இயக்கிய ஆர்.வி.கண்ணன் இப்படத்தை இயக்கப்போகிறார். இசை: தேவா. கதாநாயகி மற்றும் நடிகர் நடிகைகள் தேர்வு நடந்து வருகிறது.

## சிம்ரான் பார்த்த படம்

தமிழ்ப்பட பாடல்காட்சிகளில் நடிகர் நடிகைகளின் அங்க அசைவுகள் நீலப் படங்களை மிஞ்சி விடுகின்றன என்று குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

தற்போதைய கவர்ச்சி நாயகி சிம்ரானிடம் நீலப்படம் பார்த்த அனுபவம் உண்டா? என்ற கேள்விக்கு அவரது அதிரடியான பதில் இது:

"ம்... ஒரே தடவை அந்த தப்பை பண்ணியிருக்கேன். மும்பாயில் படிச்சுக்கிட்டிருந்த போது என்னோட நண்பிகள் சிலர், "வீட்டில் யாரும் இல்லை. சினிமா பார்க்கலாம்." என்று கூப்பிட்டனர். நானும் வீடியோ பார்க்கும் ஆர்வத்தில் போனேன்.

டெக் போட்டு கொஞ்ச நேரம் கழிச்சுத் தான் தெரிந்தது. அது சினிமா இல்லை. 'அந்த மாதிரி' என்று. 'உவ்வே' பண்ணாத குறையாக அலறி அடித்து ஓடி வந்து விட்டேன்."





கார்த்திக்-சுவாதி
படம்: அத்தை மகள்

## ஜாக்கி சானை ரசிப்பீர்[...]
## நாம் செய்தால் சிரிப்பீர்[...]

சமீப காலமாக விஜயகாந்த் ப[...] எதிர்பார்த்தளவு ஓடவில்லை. என்ன[...]ணம்? விஜயகாந்த் சூடாகச் சொன்ன[...]

"டைட்டானிக் படத்தில்கூட எனக்[...]வர்கள் நினைக்குமளவுக்கு பிரமா[...] தெரியவில்லை. எல்லாம் மினியேச்ச[...]கின்ற கம்பியூட்டர் நுணுக்கத்தில் எடுக்[...] படம் என்பதாலோ என்னவோ, [...] அதில் பிரமாண்டம் தெரியவே இல்[...]

போலித்தனங்களுடன் உருவாகி[...] ஆங்கிலப் படங்கள்,ஒரிஜினால்டியுடன் உ[...] வரும் தமிழ்ப்படங்களையே தள்ளாட[...]கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். [...] காரணம் நமக்குள் இருக்கும் குரூர சிற்[...]



படிப்பகம்

www.padippakam.com

...யகாந்த்
...ளைமாக்ஸ்
...ல்லாமல்
...மாக
...தை
...ர்




# நிதி நிறுவனம் மூடப்பட்டது!–பின்னணியில் நடிகை மீனா!

## பல கோடிகளை இழந்த தொழிலதிபர்

தமிழ் நாட்டில் தனியார் ஆரம்பித்த பல நிதி நிறுவனங்கள் மோசடி நிறுவனங்களாக மாறியுள்ளன.

அதிக வட்டி தருவதாகக் கூறி வாடிக்கையாளர்களிடம் பணம் பெற்று நூறு கோடி, இருநூறு கோடி என்று சுருட்டிக்கொண்டு ஏமாற்றிவிட்டன. பணம் போட்டவர்கள் தலையில் அடித்துக்கொண்டு புலம்புகிறார்கள்.

அப்படியான நிதி நிறுவனங்களில் ஒன்று 'அனுபவ்'. தேக்குமரத் திட்டம், வீட்டுத் திட்டம் என்ற பெயர்களில் கிட்டத்தட்ட 200 கோடி ருபாய்களை மக்களிடம் வைப்புப்பணமாக பெற்றது.

இப்போது மூடப்பட்டுவிட்டது. இந்த நிறுவனம் மூடப்பட்ட விவகாரத்தில் ருசிகரமான சமாச்சாரங்கள் அடங்கியுள்ளன.

இந்த நிறுவன உரிமையாளர் பெயர் நடேசன். சினிமா நடிகைகளுடன் கூத்தடிப்பதில் ருசிகண்டவர். இந்த உல்லாச சல்லாபங்களுக்கு ஏராளமாக செலவு செய்தார்.

இதனையறிந்த நடிகை மீனா அனுபவ் நடேசனுக்கு ஒரு பத்திரிகையாளர் மூலம் தூதுவிட்டார்.

மீனாவின் படங்களை பார்த்து ஜொள்ளுவிட்ட நடேசன் மீனா அழைக்கிறார் என்றதும் விழுந்தடித்து ஓடினார்.

நடேசனும், மீனாவும் பெங்களூர் சென்றனர். அங்கு நடேசனுக்கு விருந்தளித்தார் மீனா. மீனாவின் அழகுக்கும், திறமைக்கும் முன்னால் மயங்கிப்போன நடேசன் பணத்தை இறைத்தார்.

தேக்குமர அதிபருடன் மீனாவுக்கு நட்பு இருப்பதாக அப்போதே கிசுகிசு வெளியானது. சினி விசிட்டிலும் செய்தி வந்தது.

இந்த நட்பு பற்றிய செய்திகளை மீனா மறுத்தபோதும், நடேசனை அடிக்கடி சந்தித்து, கொடுக்க வேண்டியதை கொடுத்து கறக்க வேண்டியதை கறந்து முடித்தார்.

ஒரு கட்டத்தில் பல கோடிகளை இழந்த நடேசன், தன் அலுவலக ஊழியர்களுக்கே சம்பளம் கொடுக்க முடியாமல் திண்டாடினார்.

அப்படியான நேரத்திலும் தன் ஆட்களை அனுப்பிய மீனா, தனக்கு வருமதியாக உள்ள இருபது இலட்சம் ரூபாயை உடனே கேட்டாராம். கலைச் சேவையை பெற்ற நடேசன் சில நாட்கள் பணம் கொடுக்காமல் பாக்கி வைத்திருந்தாராம்.

மீனாவின் மிரட்டலில் பயந்துபோன நடேசன் தனது சொகுசு பஸ்ஸை விற்று மீனாவின் கடனை அடைத்ததோடு, நிதி நிறுவனத்தின் கதவையும் அடைத்துவிட்டார்.

பணம் கொடுத்தவர்கள் சிலர் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலையில் உள்ளனர்.



சுவாதி-தாமு-ரம்யா கிருஷ்ணன்
படம்: அத்தை மகன்

## ப டை ய ப் பா படையப்பா

'படையப்பா' படத்தின் படப்பிடிப்பு அனைத்தும் ரஜினியின் சொந்த ஊரான பெங்களூரில் நடைபெறப்போகிறது.

இதுவரை பெங்களூரில் ரஜினி படம் எதுவும் எடுக்கப்படவில்லை. அக்குறையை போக்குகிறார் படையப்பா.

'படையப்பா படையப்பா இந்த படை போதுமாப்பா' என்று தொடங்கும் பாடலும் தயாராகிவிட்டதாம். 'அது தான்டா இதுதான்டா' பாடல் போல படையப்பா படையப்பா பாடலும் ஹிட்டாகுமாம்.

படையப்பா பட பூஜை ஆறுபடி வீடுகளில் ஒன்றான திருத்தணி முருகன் கோவிலில் நடந்தது. இன்னொரு பூஜை ஸ்ரூடியோவில் நடைபெற்றது.

'முத்து' படத்தைவிட 'படையப்பா' பாடல்கள் ஹிட்டாகவேண்டும் என்பதற்காக அயராது உழைக்கிறாராம் ஏ.ஆர்.ரகுமான்.



...யாண்-கீர்த்தி ரெட்டி
...படம்: ஆனந்தமழை

## சி னி வி சி ட்

○ 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தை இயக்கிய விக்ரமன் அடுத்து தொடர்ந்து விஜயகாந்த் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

○ சிவாஜி புரடக்சன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்திப் படத்தை இயக்குபவர் 'சிறைச்சாலை' படத்தை இயக்கிய மலையாள இயக்குநர் பிரியதர்ஷன்.

○ பார்த்திபன் இயக்கி நடிக்கும் 'ஹவுஸ்ஃபுல்' படத்தில் பார்த்திபனுக்கு ஜோடியாக கவலட்சுமி நடிக்கிறார்.

○ 'பொன்மனம்', 'என் உயிர் நீதானே' போன்ற படங்களை இயக்கிய எஸ்.பி.ராஜ்குமார், அடுத்து இயக்கும் படத்தை சொந்தமாகத் தயாரிக்கிறார்.

○ 'மகாஜித்தன்' படத்தில் கஜோல் சக்கரவர்த்தி என்ற மும்பாய் நடிகை நடிப்பதாக இருந்தது. இப்போது அவருக்குப் பதிலாக விவிதா நடிக்கிறார்.

○ கார்த்திக்-மீனா நடித்த 'அரிச்சந்திரா' தெலுங்கிலும் அதே பெயரில் தயாராகிறது. தெலுங்கில் சக்கரவர்த்தி-மந்த்ரா இணைந்து நடிக்கின்றனர்.

○ கே.பாக்யராஜ் அடுத்து தயாரித்து இயக்கும் படத்தில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் பாக்யராஜ் நடிக்க வில்லை.

## மி னி சி னி

○ ஜெய்போலியன் நடித்த 'கவர்மெண்ட்' என்ற கன்னடப்படம் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் மொழிமாற்றப்பட்டு வெளியாகிறது.

○ அப்பாஸ்-ரவலி ஜோடியாக நடித்து வரும் 'மனசுக்குள் வரலாமா' படத்தின் பெயரை தற்போது 'நினைத்தாலே' என்று மாற்றி விட்டார்கள்.

○ 'உயிரே' படத்தில் ஷாருக்கானின் முறைப் பெண்ணாக நடித்த பிரீத்தி ஸிந்தா, தெலுங்குப் படமொன்றில் வெங்கடேஷிற்கு ஜோடியாக நடித்துவருகிறார்.

## விஜய்க்கு ஒஸ்கார் விருது!

'என்றென்றும் காதல்' படத்தின் படப்பிடிப்பு இலண்டனில் நடந்தது தெரிந்த செய்தி.

இப்படத்தின் தயாரிப்பாளருக்கு விஜய் தங்குமிட செலவு வைக்கவில்லை. இலண்டனில் தன் காதலி சங்கீதா வீட்டிலேயே தங்கிக்கொண்டார் விஜய். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

இன்னொரு முக்கிய செய்தி: 'படையப்பா' படத்தில் விஜய் நடிக்க இருக்கிறாராம். கௌரவ நடிகராக சில காட்சிகளில் நடிக்க வைத்தால் என்னவென்று ரஜினி இயக்குநரிடம் கேட்டிருப்பதாக தகவல்.

"நான் ரஜினி ரசிகன். என்னை ரஜினியோடு ஒப்பிட வேண்டாம். அவர் எவ்வளவு பெரிய நடிகர். அவருடன் ஒரு படத்திலாவது இணைந்து நடிக்க வேண்டும்" என்று விஜய் கூறிவருகிறார். அதனால் ரஜினி அழைத்தால் பாய்ந்து போய்விடுவார் விஜய்.

இயக்குநர் பாலசந்தர் "விஜய் ரஜினியின் இடத்திற்கு போய்க் கொண்டு இருக்கிறார்" என்று கூறியிருந்தார். அதுபற்றி விஜய் கூறும்போது "அவர் கூறியதை ஒஸ்கார் விருது போல கருதுகிறேன்" என்று சிலிர்க்கிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

இந்தியாவின் நகர் ஒன்றைக் குறிக்கும் படம் அது. சரச நடிகரும் அடிதடி நடிகையும் ஜோடிகள். திடீரென்று படப்பிடிப்பு தடைப்பட்டுள்ளது. சரச நடிகர் செய்த குறும்புதான் தடைக்கு காரணமாம். பாடல் காட்சியில் நடிகரின் நெஞ்சில் சரியும் நடிகையை கட்டியணைப்பது போன்ற ஒரு காட்சி. சரச நடிகர் முரட்டுத்தனமாக அக்காட்சியில் நடந்து கொண்டதாக நடிகை அதிருப்திப்பட்டாராம். சமரசப் பேச்சுக்கள் நடந்து வருகிறது. ஏற்கனவே 'காந்த' நடிகருடனும், சத்யமான நடிகருடனும் நடிப்பதற்கு சம்மதித்துவிட்டு டாட்டா காட்டியவர் நடிகை.

ரம்ப நடிகைக்கு தமிழில் இரண்டே இரண்டு படங்கள் தான். இந்த சரிவை நிமிர்த்த முக்கியமான சில தயாரிப்பாளர்களுக்கு தானே வலியச் சென்று அழைப்பு விடுத்துள்ளாராம்.

சூப்பரின் படைக்கும் தேவ இசையமைப்பாளர்தான் இசையமைப்பதாக இருந்தது. வைரமான கவிஞர்தான் 'மான்' இசையமைப்பாளரை உரமாக சிபாரிசு செய்தாராம். அதனை சூப்பரும் ஏற்றுக்கொண்டாராம்.

சிம்ம நடிகையை கழற்றி விடும்படி நடனக் காதலனின் சுந்தரமான தந்தை கண்டிப்பாக கூறிவிட்டாராம். நீ காதலை முறிக்காவிட்டால் நான் அவள் காலை முறிப்பேன்! என்று கூறி விட்டாராம்.

...ள்
...ள்
...கள்
...கார
...தில்:
...மற்ற
...டம்
...என்
...பட்ட
...க்கு
...ரும்
...வாகி
...வைக்
...தற்கு
...னை.

'ருமாரோ நெவர் டைஸ்' ஆக இருந்தாலும் சரி, 'ட்ரு லைஸ்' ஆக இருந்தாலும் சரி மக்களை முட்டாள்களாக நினைத்து படமெடுத்திருக்கிறார்கள். ஹொலிவூட் ஹீரோக்கள் யாரும் இப்பவெல்லாம் ரிஸ்க் எடுத்து நடிப்பதே கிடையாது. அத்தனைபேரும் வேஸ்ட். எல்லாம் டூப் போட்டு எடுத்துவிடுகிறார்கள்.

ஜாக்கிசான் மட்டும் நூறுபேரை ஒரே சமயத்தில் அடிப்பார். நாம் மட்டும் பத்துப் பேரை அடிச்சா இங்கே உள்ளவங்களுக்கு பிடிப்பதில்லை. ஏன் ஜாக்கிசானுக்கு மட்டும்தான் உடம்பிருக்கா? நமக்கெல்லாம் இல்லையா?

எந்தக் காலகட்டத்திலும் நான் எதைப் பற்றியும் கவலைப்படாமல் என் பாணியில்தான் நடித்துக் கொண்டிப்பேன்" என்று நீளமாகவும் சூடாகவும் கூறியிருக்கிறார் விஜயகாந்த்.



பிரகாஷ்ராஜ்-இந்து
படம்: குரு பார்வை


படிப்பகம்

www.padippakam.com

# அந்தநாள் ஞாபகம்




↓ பாருங்கள் எத்தனை இளமையான இளையராஜா. அருகே தந்தையின் மடியில் இருப்பது- பொடிசாக இருப்பது விஜய். தாயார் ஷோபாவும் இருக்கிறார். இளையராஜா சினிமா உலகுக்கு வர முன்பாக எடுக்கப்பட்ட படம் இது.

இங்கு சுட்டிப்பையனாக நிற்பதும் விஜய்தான்.







பச்சிளம் குழந்தையாக தாயார் ஷோபா கையில் இருப்பது விஜய் என்றால் நம்ப முடிகிறதா?!

விஜய் பிறக்கும்போது அப்பா சந்திரசேகர் உதவி இயக்குநர். அம்மா ஷோபா பாடகி. கஷ்டமான குடும்பநிலை. தனியார் மருத்துவமனையில் பிரசவம் பார்க்கக்கூட வசதியில்லாமல் அரச மருத்துவமனையில் பிரசவம் நடந்தது.

## தேன் கிண்ணம்

### கலைந்துவிடாத கரைகள்

உன்னை நீ நினைப்பதைவிட
நான்தான்
அதிகம் நினைக்கின்றேன்!
**
அதற்குக் கைமாறு
நீ தந்துவிட்டாய்!
அதனை
ஏற்றுக் கொள்ளும்
தைரியம் எனக்கில்லை:
இருப்பினும்
உனக்காக
ஏங்கிறேன்!
**
வானம்
இருண்டுவிட்டால்
இன்னொரு பொழுது
புலருவது உண்மை.
எனவே
எதுவும் எதற்கும்
முடிவல்ல;
உன் முடிவும்
அப்படித்தான்!
**
அலை எப்படித்தான்
அடித்தாலும்
உதைத்தாலும்
கரை
இடம்மாறுவதில்லை.
கடலுக்கும்
பிடிப்பில்லைதான்
ஆனால்
கரை எங்கு போவது?
**
நீ
அலையாக
இருப்பதால்
நானும் கரைதான்!
**

மாரிமுத்து யோகராஜன்-
மட்/ ஆசிரியர் கலாசாலை.

### மலைமைந்தனின் புலம்பல்கள்

வேவல்வத்தையில்
வெந்த உடைமைகள்
வெண்மைச் சாம்பராய்...!
கிண்டிப் பார்க்க..
'கிலி' கொண்ட
தலைமைகளுக்கு
முதுகெலும்பில்லை!

பி.பி.சியும்
ஐ.பி.சியும்
சர்வதேசப்படுத்தியும்
எம்மவர்களின்னும்
மௌனிகளாய்...!

அவல நிலையை
அவதானித்தவர்களின்
அறிக்கைகளும்
திருமுகங்களும்
பத்திரிகைகளில்
விளம்பரங்களாய்...!

அரசியல்வாதிகளின்
குண்டர்களாலும்
தொண்டர்களாலும்
அடிப்பட்ட அகதிகள்,
இன்னும்
'வானமே கூரை'யாய்...
'வெறுமையே'வாழ்வாய்...
வாழ்வதோ...கழிவிரக்கம்!

தேசத்தின்
தலைப்பகுதி நிமிரும்போது...
தேசத்தின்
வயிற்றுப் பகுதியில் வாழும்...
எம்மினம் உதைப்படுவதேனோ...?

ஐயா..
மலையகப் பிரதிநிதிகளே...!
உங்களுக்காக(த்)
தூக்கும் கைகளை!
எங்களுக்காகவும்
கொஞ்சம்
இறக்கிப் பாருங்களேன்...!

சோ. ஸ்ரீதரன்,
பொகவந்தலாவை.

### அந்த மூன்றைத் தவிர

தயவு செய்து ஏதாவது பேசு...
உன் மௌனம் என்னை
என்னவோ செய்கிறது..!

இன்றைக்கு ஏன் உன் மூச்சுக்காற்று
இவ்வளவு உஷ்ணமாய் இருக்கிறது?
உதட்டின் மேல் விளிம்பில் இருக்கும்
அந்த ஊசி முனை மச்சம்-
இயற்கையா? செயற்கையா?
வேண்டாம்...!

உன்னைச் சுற்றி வட்டமிட்டிருக்கும்
நிசப்தத்தை மெல்லிய சிரிப்பால்
சலனப்படுத்து- போதும்...!

ஏதாவது பேசு- தமிழில்...
எத்தனை வார்த்தைகள்...?
தயவு செய்து-
'உன்னை காதலிக்கவே இல்லை'
என்ற அந்த மூன்றைத் தவிர!

ரி. நகுலன்.

### பால்ய காலத்து நினைவுகள்

என் கண்களுக்குள் ஒளியுமிழும்
ஒரு வண்ணப்பூச்சி அவள்!
என் நினைவுகளை எல்லாம்
அள்ளி வைத்து
ஆனந்தம் கொண்டாடியவள்.

அவள் மடிமீது
அதென்ன மின்சாரம்...?

என் தலைக்குள்ளேயே
அப்படி என்ன இன்பமும்-
பின்னர் அதிர்ச்சியும்?

என் நாடிகளையெல்லாம்
தன் உணர்வுகளால்
ஒத்தடம் கொடுத்த ஓர்
ஆகாயத்து தேன் ஆறு!

கலைந்து போனது தேன்கூடு:
வாழ்க்கையைக் கூட
எட்டிப் பிடிக்க முடியா
தூரத்தில் நினைவுகளோடு
மட்டும் நான...!

மறக்க முடியவில்லை...
இன்னும் எனக்கு
அவள் வேண்டும்!
கண்ணீரைத் துடைப்பதற்கும்-
பொய்யாய் கோபிப்பதற்கும்-
அன்பாய் கொஞ்சுவதற்கும்
பின்னர் என் பூமியில்
[illegible]- இலண்டன்.

### தமிழ் இனம்!

ஓடி ஓடி
காலும் தேய்ந்து...
ஓலம் போட்டே..
வாயும் கிழிந்து...
ஏலம் போகும்
எங்கள் இனம்!
...
விடிவும் இன்றி
விழியும் இன்றி
வானம் பார்த்தே..
வாடிச் சோர்ந்து
சத்தம் கேட்டே
செவிப்புலன்
இழந்து..
...
விமானச் சத்தம்...
குண்டுச் சத்தம்...
சத்தம் எங்கள்
சொந்தம் ஆச்சு!
...
பந்த பாசம்
உறவுகள் இழந்து...
உண்ணா நோன்பு
தினம்..தினம்
இருந்து...
பார்த்த உடனே
இனம் எது என்று
ஆள் அடையாளம்
சுட்டிக் காட்டும்
சுந்தர இனமே...
தமிழ் இனம்!!!

கயல் வண்ணன்- வவுனியா.

## இந்த வாரம் உங்கள் பலன்

(08.11.1998 தொடக்கம் 14.11.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| துலாம் | — | சூரியன், சுக்கிரன். |
| விருச்சிகம் | — | புதன். |
| சிம்மம் | — | செவ்வாய், ராகு. |
| கும்பம் | — | குரு, கேது |
| மேடம் | — | சனி. (வக்ரம்) |

சந்திரன்- இடபம், மீனம், கற்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, துயர் நீங்கும். | காலை | 7 | மணி |
| புதன்- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | காலை | 8 | மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், பணவரவு. | பகல் | 12 | மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, தொழில் சிறப்பு. | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 7 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பிப. | 2 | மணி |
| செவ்வாய்-துயர்நீங்கும், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை | 6 | மணி |
| வியாழன்- பயனற்ற செயல், கௌரவம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| சனி- பயனுள்ள செயல், பொருள் வரவு. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக்கவலை. | காலை | 6 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், காரியத்தடை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- உறவினர் உதவி, தொழில் சிறப்பு. | காலை | 7 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், பணவரவு. | காலை | 8 | மணி |
| சனி- மனக்குறையதிகம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | காலை | 7 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை | 6 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, வீண் மனஸ்தாபம். | பிப. | 2 | மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் வரவு. | காலை | 6 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| சனி- துன்பம் நீங்கும், காரியானுகூலம். | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், கௌரவக்குறைவு. | காலை | 6 | மணி |
| புதன்-அந்நியர் சகவாசம், மனக்கவலை. | பிப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், பணக்கஷ்டம். | காலை | 6 | மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி நன்மை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பிப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை | 6 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், மனக்குழப்பம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| சனி- காரிய சித்தி, மனமகிழ்ச்சி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 7 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை | 6 | மணி |
| புதன்- தனலாபம், கௌரவக் குறைவு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, இனசன நன்மை. | காலை | 7 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, பொருள் சேதம். | பகல் | 12 | மணி |
| சனி- மனப்பயம், தொழில் கேடு. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் நஷ்டம், மனக்கவலை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பொருள் வரவு. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | பிப. | 2 | மணி |
| புதன்- காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, உயர்ந்தநிலை. | காலை | 6 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், கௌரவம். | காலை | 6 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவக்கேடு. | காலை | 8 | மணி |
| வியாழன்- தொழிலில் பிரச்சனை, செலவு மிகுதி. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் குழப்பம். | பி.ப. | 2 | மணி |
| சனி- அந்நியர் உதவி, மனப்பயம். | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | காலை | 6 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக்கவலை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணச்செலவு. | காலை | 9 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை | 6 | மணி |
| புதன்- துயர் நீங்கும், இனசன நன்மை. | பகல் | 2 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை | 7 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, கௌரவம். | பகல் | 11 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, கௌரவம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பொருள்வரவு. | காலை | 7 | மணி |
| புதன்- பெரியோர் பகை, வீண்குறை கேட்டல். | காலை | 6 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் கஷ்டம். | பிப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை | 7 | மணி |
| சனி- புதிய முயற்சி, பணவரவு. | பிப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

www.padippakam.com

## மாத்திரை தேவையா?

சின்னச் சின்ன விஷயத்துக்குக்கூட எக்கச் சக்கமாக வெட்கப்படுகிற பெண்கள் மேலை நாடுகளிலும் இருக்கிறார்கள். அந்தக் கூச்சசுபாவமே அவர்களைப் பல சமயங்களில் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருக்கும்.

இப்படிப்பட்ட 'வெட்க'ப்படுகின்ற பெண்களுக்காகவே புதிய மாத்திரை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள், பிரிட்டன் விஞ்ஞானிகள்.

இந்த மாத்திரை மூளையில் உள்ள செராடோனின் அளவை அதிகரிக்கச் செய்கிறது. அதன் காரணமாக வெட்கம், பயம் எல்லாம் விலகித் தன்னம்பிக்கை அதிகரித்து மிடுக்காகி விடுகிறார்கள்.

## எடையைக் குறைப்போம்



உடலில் கொழுப்புச்சத்து கூடும்போது ஆண்களுக்குத் தொப்பை விழுகிறது. பெண்களுக்கு உடல் பெருக்கிறது.

உடல் எடையைக் குறைப்பதற்காகச் சிலர் பட்டினி கிடக்கிறோம். இது தவறு. நாம் உட்கொள்ளும் உணவில் எதைச் சாப்பிட வேண்டும், எதை நீக்க வேண்டும் என்பதை அறிந்து அதற்கேற்ப சாப்பிட வேண்டும்.

தயிர், வெண்ணெய், இறைச்சி போன்ற கொழுப்பு உணவு வகையும், கிழங்கு வகைகளையும் தவிர்த்து காய்கறிகள், பருப்பு வகைகளை அதிக அளவில் சேர்த்துக் கொள்ளுங்கள். அதற்காக எண்ணெயில் வதக்கி பொரியலாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

உடல் பெருக்காமல் இருக்க சில யோசனைகள்:

* உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
* மன மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்.
* காலை, மாலை இரு வேளையும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நடைப்பயிற்சி செய்வது அவசியம்.
* குறிப்பிட்ட நேரங்களில்தான் உணவு சாப்பிட வேண்டும்.
* உட்கார்ந்து கொண்டே வேலை செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

## சின்ன சின்ன யோசனைகள்

* கண்கள் சோர்வாகிச் சிவந்து போய் விட்டது. மாலையில் கல்யாண வரவேற்புக்குச் செல்ல வேண்டும். என்ன செய்வது...? இரண்டு தேக்கரண்டி சீரகத்தை பத்து தேக்கரண்டி தண்ணீரில் ஒரு மணிநேரம் ஊற வையுங்கள். இப்போது தண்ணீரை வடிகட்டி பருத்தித் துணியில் நனைத்து கண்ணிமைகளின் மேல் வையுங்கள். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால், கண்ணைச் சுற்றியிருக்கும் கறுப்பு வளையங்கள் மறையும். கண்கள் காந்தத்தின் கவர்ச்சிபெறும்.
* நிறைய எலுமிச்சம்பழங்கள் வாங்கி வைக்க விரும்புகிறீர்களா? ஃப்ரிட்ஜில் அப்படியே வைத்தால் அழுகிவிடும். பழத்தின்மீது கொஞ்சம் தேங்காய் எண்ணெய் தடவி, ட்ரேயில் வைத்து ப்ரிட்ஜில் வைத்தால் ஒரு மாதம் வரை கூட அப்படியே இருக்கும்.
* ஒரேஞ்ச் பழம் சாப்பிட்டதும் தோலைத் தூக்கி எறிந்து விடாதீர்கள். காய வைத்துப் பொடி செய்து, கடலை மாவு சேர்த்தால் சிறந்த 'ஃபேஸ் பேக்'காகப் பயன்படும்.
* ஒம்லெட்டுக்கு முட்டை அடிக்கப்போகிறீர்களா? நில்லுங்கள்! ஒரேயொரு தேக்கரண்டி தண்ணீர் விட்டு அடித்தால், ஒம்லெட் பெரிதாகவும், புஸ்ஸென்றும் இருக்கும்.
* மீன் பொரிக்கப் போகிறீர்களா? எண்ணெயில் சிறிதளவு மஞ்சள் பொடியைத் தூவுங்கள். இப்போது பொரித்தால், எண்ணெய் வெளியிலும் கைகளிலும் தெறிக்காது.
* துணிகளில் படிந்திருக்கும் கறைகளை நீக்க, துவைக்கும் தண்ணீரில் இரண்டு அஸ்பிரின் மாத்திரைகளைப் போடுங்கள். பிறகு கறை, தேடினாலும் கிடைக்காது.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-
பி.எஃப். றயீஸா
இல.103, கிதுளம்பிட்டிய,
உலுவிடிகே, காலி.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** ER
பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................
**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-11-1998**
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் 60

**புவனா**



சாள்ஸ்சின் காதலியான கமீலாவைப் பற்றிய தகவல்களைத் திரட்டி வெளியிட்டிருந்தது பிரிட்டிஷ் பிரபல பத்திரிகை ஒன்று.

கமீலாவின் குணாதிசயங்களும் அதில் விவரிக்கப்பட்டிருந்தன.

சாள்ஸுக்கும், கமீலாவுக்கும் இடையிலான தொடர்புக்கு பண்டைய பின்னணி ஒன்றும் இருக்கிறது.

சாள்ஸ்சின் பூட்டனாரான எட்டாவது ஜோர்ஜ் மன்னரின் அந்தப்புர ஆசை நாயகியாக இருந்தவர்களில் ஒருவர் அலீஸ் கெப். அவர் கமீலாவின் நெருங்கிய உறவினர்.

சாள்ஸும், கமீலாவும் முதன் முதலில்– தனிமையில் சந்தித்தபோது, பண்டைய உறவை நினைவுபடுத்தி கண்சிமிட்டினாராம் கமீலா. அத்தோடு நிறுத்தாமல், "நாமும் அதே நெருக்கத்தை தொடரலாம்தானே!" என்று கேட்டு விட்டுத்தான் சாள்ஸ்ஸை இறுகத் தழுவி முத்தமிட்டாராம் கமீலா.

கமீலா மிகவும் ஆழமானவர். தனக்கும் சாள்ஸுக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கத்தை தன் சிநேகிதிகளிடம்கூட நீண்டநாட்களாகக் கூறவில்லை.

இருவருக்கும் இடையே மலர்ந்த காதலும் நெருக்கமும் அவர்களையும் மீறி வெளியே தெரிந்துவிட்டது.

இருந்தனர்.

ரொம் தனது பெற்றோரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டான். தனது பெயரை ரொம் பாக்கா என்று சுருக்கிக் கொண்டான்.

தனது தாயாரின் ஆபாச உரையாடல் அவனை மிகவும் பாதித்தது. தொடர்ந்து கமீலா பற்றிய கடும் விமர்சனங்களாலும் அவன புழுங்கினான்.

இளவரசர் சாள்ஸுடன் தனது தாயார் நெருக்கமாக இருப்பதை ரொம் அப்போது விரும்பவில்லை.

கமீலாவுக்கு 35 வயது (1992இல்) என்றாலும், அவரது உடல்வாகு 18 வயதுப் பெண்போல இருக்கிறது. ஆனாலும் பிரமாதமான அழகி என்று கூறமுடியாது. டயானாவுடன் ஒப்பிட்டால் கமீலா தேறமாட்டார்.

ஓர் அழகான இளம் மனைவியைவிட, அழகற்ற, அதிக வயதுடைய பெண்மீது இளவரசர் ஏன் இத்தனை மோகம் கொள்கிறார்?

இளவரசருக்கு தன்னம்பிக்கை கொடுக்கக்கூடிய வித்தைகளில் கமீலா வல்லவராக இருக்கிறார். இளவரசர் சாள்ஸ்ஸை எப்படித் தட்டிக்கொடுத்து உற்சாகமளிப்பது என்பது கமீலாவுக்கு கைவந்த கலை.

இளவயதில் இருந்தே தன்னம்பிக்கையுள்ள- மகிழ்ச்சியான வாழ்க்கையையே கடைப்பிடித்தார் கமீலா. எப்போதும் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் அவர் காணப்பட்டபோதும் அவர் சிரிப்பதைக் காண்பது அபூர்வம்.

## சவாரி செய்யும் கமீலா





கமீலா–கணவர் பார்க்கர், மகன் ரொம், மகள் லோரா ஆகியோருடன்



புகைப்படங்களுக்கு 'போஸ்' கொடுப்பதையோ, பேட்டி கொடுப்பதையோ கமீலா தவிர்த்துவந்தார்.

சாள்ஸுக்கும் அவருக்கும் இடையே காதல் மலர்ந்தது என்று தகவல்கள் பரவியதும் பத்திரிகையாளர்கள் அவரைத் துரத்த ஆரம்பித்தனர். துருவித் துருவி கேள்விகள் தொடுத்தனர்.

என்னதான் முயன்றும் கமீலாவின் வாயைக் கிளற முடியவில்லை. கமீலாவுக்கே தெரியாமல் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மட்டுமே பத்திரிகைகளில் வெளியாகின.

"இவர்தான் இளவரசர் சாள்ஸ்ஸின் இதயத்தைக் கொள்ளையடித்த மாது. அடிக்கடி இவரை சாள்ஸும், சாள்ஸை இவரும் மொத்தமாகக் கொள்ளையடித்துக் கொள்கிறார்கள். அது மிக இன்பமான, ருசிகரமான கொள்ளை...." என்று அப்போதே பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தன.

எனினும் சாள்ஸுடன் தொலைபேசி வழியாக காமம் வழிய வழிய நடத்திய உரையாடல்கள் பகிரங்கமாக வெளியான பின்னர் கமீலாவுக்கும் சாள்ஸுக்கும் தர்மசங்கடமான நிலை தோன்றியது.

சாள்ஸ் வெகு விரைவாக எதையும் எதிர்கொள்ளத் தயாராகிவிட்டார். அவரது தூண்டுதலால் கமீலாவும் துணிச்சலடைந்து வெளியே தலைகாட்ட ஆரம்பித்தார்.

### எதிர்ப்பு

கமீலாவுக்கு வெளியே நடமாடித்திரிவதில் ஒரு பிரச்சனை தோன்றியது.

பத்திரிகைகளில் கமீலாவின் புகைப்படங்கள் வெளியாகி இருந்தமையால், அவரை நேரில் கண்டதும் அடையாளம் கண்டு கொண்ட மக்கள்; "குடும்பத்தைக் கெடுப்பவள்" என்று வெளிப்படையாகவே திட்டித்தீர்த்தனர்.

டயானாவுக்கு இருக்கும் செல்வாக்கைக் கண்டு கமீலாவே பயந்துபோனார்.

அந்தளவுக்கு அவர்மீது பிரிட்டிஷ் மக்கள் வெறுப்புற்றனர். டயானாவின் வாழ்க்கையை நாசமாக்கியவர் என்ற எண்ணமே வெறுப்புக்குக் காரணம்.

ஒருநாள் தனது செயின்ஸ்பரி தோட்டத்தில் இருந்து வெளியே வந்த கமீலா, வெளியே நின்ற பெண்களால் மறியல் செய்யப்பட்டார்.

கமீலாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன இதெல்லாம், பொலிசுக்கு போன் பண்ணட்டுமா?" என்று கூச்சலிட்டார்.

அடுத்த நொடியே அவர்மீது பாண் துண்டுகள் வீசப்பட்டன. பெண்களின் தாக்குதலைக் கண்ட கமீலா தோட்டத்திற்குள் ஓடி ஒளிந்து கொண்டார்.

கமீலாவின் கணவர் அன்ட்று பார்க்கர், தனது மனைவி இளவரசருடன் அந்தரங்க உறவு பூண்டிருக்கிறார் என்ற தகவல் அறிந்தும்கூட அலட்டிக் கொள்ளவில்லை.

பார்க்கரும் தன்னுடைய அந்தரங்க லீலைகளில் ஈடுபட்டிருந்தார். அரச குடும்பப் பெண்களோடு மட்டுமன்றி வெளியேயும் அவருக்குக் காதலிகள் இருந்தனர்.

ஆனாலும் சாள்ஸ்-கமீலா தொலைபேசி உரையாடல் பகிரங்கமாகியதால் பார்க்கர் நிலையும் தர்மசங்கடத்திற்கு உள்ளானது.

### கடும் விமர்சனம்

கமீலா-பார்க்கர் தம்பதிக்கு ரொம் (18) என்னும் மகனும், லோரா (14) என்னும் மகளும்



குதிரைகள் மற்றும் நாய்கள் வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டவர். குதிரைச் சவாரியின் போது அடைமழை பெய்தாலும் கவலைப்படாமல் சவாரி செய்வார். கட்டடக் கலை, சுற்றுச்சுழல் ஆகிய கலைகளைக் கற்றுத் தேர்ந்த கமீலா இசை, ஓவியம் போன்றவற்றிலும் நாட்டமுள்ளவர்.

இளவரசர் சபல புத்தி கொண்டவர் என்பதால் அவருக்கு விட்டுக் கொடுத்து பல்வேறு உதவிகளையும், ஆலோசனைகளையும், கூறுவதுடன், அந்தரங்கமான சந்தோசத்தையும் அள்ளிக்கொடுக்கிறார்.

கமீலாவை திருமணம் செய்யப்போவதில்லை. அவ்வாறு செய்தால் அரியணை ஏறும் வாய்ப்பு பறிபோகலாம். ஆனாலும் கமீலாவுடன் உள்ள நெருக்கத்தை சாள்ஸ் கைவிடப் போவதில்லை.

"டயானாவை கைவிடத் தயாராக உள்ள இளவரசர் சாள்ஸ் ஒருபோதும் கமீலாவை கைவிட மாட்டார்."

இப்பத்திரிகை செய்தி கமீலாவுக்கு ஓரளவு சந்தோசத்தைத் தந்தது. டயானாவுக்கு எரிச்சலைக் கிளப்பியது.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## அக்கரபத்தனை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | **ஷாமிளா விஜயராஜ்,** எல்பியன் குரூப், அக்கரபத்தனை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலைப் பரிசுப்போட்டி

★ கடந்த 25 வாரங்களாக நீங்கள் சேகரித்த பரிசுக் கூப்பனை தபால் உறையில் போட்டு அனுப்பி வையுங்கள்.
★ இத்துடனுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து அத்தோடு அனுப்பி வையுங்கள்.
★ பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
★ அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி: 21.11.1998

பெயர்:- .........................
முகவரி:- .........................
.........................
.........................
தொலைபேசி இல.(இருப்பின்):..........
ஒப்பம்:-.........................

அனுப்பவேண்டிய முகவரி:
தங்கமாலை பரிசுப்போட்டி
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.




படிப்பகம்





> இனியெப்போதும் உரைத்திடேன்,
> இதைநீ
> மறவாதிருப்பாய் மடமை நெஞ்சே!
> கவலை படுதலே கருநரகு, அம்மா!
> கவலையற்றிருத்தலே முக்தி!
>
> –சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சீமாட்டியும் பணிப்பெண்களும்

ஓர் ஊரில் ஒரு பணக்காரச் சீமாட்டி இருந்தாள். அவளிடம் மூன்று பணிப்பெண்கள் வேலை செய்து வந்தார்கள். அந்த மூன்று பணிப்பெண்களும் மகா சோம்பேறிகள்.

அந்த வீட்டில் ஒரு சேவல் இருந்தது. அது தினமும் அதிகாலையில் கூவும். அது கூவியதும் அந்த சீமாட்டி தூக்கத்தில் இருந்து எழுந்திருப்பாள்.

தான் எழுந்ததும், மூன்று பணிப்பெண்களையும் எழுப்பி வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்வாள்.

இவ்வாறு அதிகாலையில் தம்மை எழுப்பி வேலை வாங்குவது அந்த மூன்று பணிப்பெண்களுக்கும் பிடிக்கவில்லை.

அவர்கள் மூவரும் அன்றிரவே ஒன்றாகக் கூடினார்கள். இதைத் தடுக்க என்ன வழி என்று யோசனை செய்தார்கள். அவர்களில் ஒருத்தி, மற்ற இருவர்களிடமும்,

"இந்தச் சீமாட்டி, தினமும் சேவல் கூவுவதால்தான் அதிகாலையில் விழித்துக் கொள்கிறாள். எனவே இந்தச் சேவலைக் கூவாமல் இருக்கும் படி செய்தால் காலை வரை சீமாட்டி நன்றாகத் தூங்குவாள். நாங்களும் நன்றாகத் தூங்கலாம்," என்றாள்.

உடனே மற்றொருத்தி,

"சேவலை எப்படிக் கூவவிடாமல் செய்வது?" என்று கேட்டாள்.

அதற்கு மூன்றாமவள், "சேவலைக் கொன்று விட்டால் என்ன?" என்று கேட்க, மற்றவர்களும் இதற்கு உடன்பட்டார்கள்.

இதன்படி அன்றிரவே மூவருமாகச் சேர்ந்து சேவலைக் கொன்று வீட்டின் பின்புறத்தில் புதைத்து விட்டார்கள்.

மறுநாள் சேவல் கூவாததால் சீமாட்டி தாமதமாகத் தூக்கத்திலிருந்து எழுந்தாள்.

இதனால் மூன்று பணிப்பெண்களும் காலை வரை நன்றாகத் தூங்கினார்கள்.

சீமாட்டிக்கு சேவல் காணாமல் போனது அன்றுதான் தெரிந்தது. சேவலை யாரோ திருடிக்கொண்டு போய் விட்டார்கள் என்று நினைத்துப் பேசாமல் இருந்துவிட்டாள்.

அன்றிரவு தூங்கச் சென்ற சீமாட்டி, சேவல் இல்லாததால் எப்போது விடியும் என்று தெரியாமல் நடு இரவிலேயே தூக்கத்திலிருந்து எழுந்துவிட்டாள்.

நடு இரவிலேயே மூன்று பணிப்பெண்களையும் எழுப்பி வேலை வாங்கினாள்.



சிறிது நேரம் அதிகமாகத் தூங்க ஆசைப்பட்ட அந்த மூன்று பணிப்பெண்களுக்கும் தாம் செய்த காரியத்தால் இரவுத் தூக்கம்கூட இல்லாமல் போய் விட்டது.

## அதிசயம் – ஆனால் உண்மை!



ஐஸ்லாந்து நாட்டின் தலைநகரான ரெய்ஜாவிக்கில் ↑ வசிக்கும் மக்களில் 99 சதவீதம் பேர் வீட்டில் வெந்நீர் ஊற்று மூலம் வெதுவெதுப்பான நீரைப் பெறுகிறார்கள்.



↑ ஆசியாக் கண்டத்தில் காணப்படும் அனபாஸ் ஸ்காண்டென்ஸ் என்ற மீன் இனத்தைச் சேர்ந்த சிலவகை மீன்கள் தண்ணீரில் இருந்து இரையைத் தேடி நிலத்திற்கு ஊர்ந்துவரும்.



← முற்காலத்தில் சீனாவில் உள்ள தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைக்கு 3வயது ஆகும் போது கால்களைத் துணிகளால் இறுக்கமாகக் கட்டி நடக்க விட்டார்கள். இதனால் பாதம் அழகாகவரும் என்று கருதினார்கள்.



↑ அவுஸ்திரேலியாவில் உள்ள வான்கோழிகள்,சிறு குன்றுகளில் மணல், இலை, தழைகளைப் பரப்பி அதன்மேல் முட்டையிடுகின்றன. இந்த தட்ப வெப்ப நிலையில்தான் அதன் முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளிவருகின்றன.

## வாரம் ஒரு நாடு

### பூட்டான்



தலைநகர்– திம்பு
பரப்பு – 46,500 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை– 16.6 இலட்சம் பேர்
மொழி– ஷோங்கா, நேபாளி, குரூங், அசாமி
எழுத்தறிவு – 15%
சமயம் – பௌத்தம், இந்து
நாணயம் – நகுல்ட்ரம், இந்திய ரூபாயும் சட்டபூர்வமாகப் பயன்படுத்தப்படுகிறது.
தனி நபர் வருமானம் – 190 டொலர்.

**அமைவிடம்:**

நாற்புறமும் நிலப்பகுதிகளால் சூழப்பட்டது. மத்திய ஆசியாவில் கிழக்கு இமயப் பகுதியில் அமைந்துள்ளது. தெற்கில் இந்தியாவும்; வடக்கில் திபெத்தும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**

பிரிட்டனுடன் 1774லும் 1865லும் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. உள்நாட்டு விவகாரங்களில் பிரிட்டன் தலையிடுவதில்லை என்பதே ஒப்பந்தத்தின் சாரம். 1949ல் இந்தியா-பூட்டான் ஒப்பந்தம் ஏற்பட்டது. பூட்டான் தனது வெளியுறவுக் கொள்கைகளுக்கு இந்தியாவின் ஆலோசனையைப் பெறும். ஆனால் பூட்டானின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடக் கூடாது எனவும் ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. அரச பதவி பரம்பரை வழியானது. 1907 முதல் வாங்சுக் வம்சம் ஆண்டு வருகிறது. 1983ல் சார்க் அமைப்பில் உறுப்பினரானது. எழுதப்படாத அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொண்டது.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். நெல் முக்கிய விளைபொருள். சுற்றுலாவே நாட்டின் முக்கிய வருமான மூலம். சுண்ணாம்பு, கிராஃபைட், செம்பு, ஜிப்சம் போன்ற கனிப் பொருட்கள் கிடைக்கின்றன. மது, ஏலக்காய் போன்றவை ஏற்றுமதியாகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.11.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 270**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 268

**பரிசுக்குரியவர்:**
**செல்வி யோகானந்தி விஜயராசா,**
**விக்னேஸ்வரா த.ம.வித்தியாலயம், திருகோணமலை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நோ. ரியூவ்கிறேம்பேட், விபுலானந்த மகா வித்., பண்டாரிகுளம், வவுனியா. | விஜிதா பேரின்பநாயகம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| த. சேந்தன், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-03. | எல். அகமட் றஸ்மி, ஸ்ரீ கோணஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| நா.கிருஷாந்தி, பாக்கிய மகா வித்தியாலயம், மாத்தளை. | ரா. நிரோசன், மகஜன கல்லூரி, மட்டக்களப்பு. |
| செல்வன் என். முஹமட் ஸியாத், அப்துல் மஜீத் வித்., சின்னக் கிண்ணியா. | செல்வி சி. சுஜீவினி, சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார். |
| உம்மு குல்தும், சாஹிரா கல்லூரி, கம்பளை. | எம். சன்னியகுமார், சென். மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவை. |

## விடுகதைகளும் விடைகளும்


1. அது எங்களை விழுங்கினால் செத்துவிடுவோம்;
   அதை நாங்கள் விழுங்கினால் சாக மாட்டோம்.
   அது என்ன?
2. பெரிய பெரிய உருவமெல்லாம் உள்ளே நுழையுது;
   சின்ன உருவம் நுழைய முடியாமல் வெளியே நிக்குது.
   அது என்ன?
3. மலைக்கு மேல் பூக்குதந்த வெள்ளைப் பூ-நாம்
   படுக்கும்போது பூக்குதந்த வெள்ளைப்பூ.
   அது என்ன?
4. காய்ந்த சட்டையை கழற்றி எறியும்;
   ஈரச்சட்டையை மாட்டிப்பார்க்கும்.
   அது என்ன?
5. வளைஞ்சு நெளிஞ்சு ஆடும்
   தண்ணீர் குடித்தால் சாகும்.
   அது என்ன?
6. செடிக்குக் கீழே பாரு
   ஒரு பழம் பழுத்திருக்கு- அந்தப்
   பழத்துமேல பாரு
   ஒரு மரம் முளைச்சிருக்கு.
   அது என்ன?

**விடைகள்**

[illegible]

தொகுப்பு: எஸ். ஆர்த்தி.

## ஏன் தெரியுமா?



தூங்கும்போது கண் இமைகள் சாதாரணமாக மூடியே இருக்கும். சிலருக்கு மட்டும் பாதி திறந்த நிலையில் இருக்கும்.

ஏன் இப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? காரணம் இதுதான்.

உடல் முழுவதும் ஓய்வு நிலையில் இருக்கும்போது தசைகள் தளர்ந்து இருக்கின்றன. அதனால் கண் இமைகள் மூடிக் கொள்ளும்.

நரம்பியல் தசைக்கோளாறுகள் காரணமாக சிலரின் கண் இமைகள் முழுவதுமாக மூடிக்கொள்ளாமல், பாதி திறந்த நிலையில் இருக்கும்.

## அணுகுண்டு

*** முதன் முதலில் அணுகுண்டு சோதனை எங்கே நடத்தப்பட்டது?**

அமெரிக்காவைச் சேர்ந்த நியூ மெக்ஸிகோவில் உள்ள அலமோ கோர்டோ என்னும் இடத்திற்கு அருகில் உள்ள பாலைவனத்தில் நடைபெற்றது.

*** இந்தச் சோதனை எந்த ஆண்டில் நடத்தப்பட்டது?**

இது 1945ம் ஆண்டு ஜூலைமாதம் 16ம் திகதி நடத்தப்பட்டது.

*** முதல் அணுகுண்டு எங்கே போடப்பட்டது?**



முதல் அணுகுண்டு 1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா என்ற நகரில் இரண்டாம் உலகப்போரின்போது போடப்பட்டது. இதன் பெயர் 'லிட்டில் போய்.' இதற்கடுத்த 3 நாட்களில் ஜப்பானின் இன்னொரு நகரான நாகசாகியில் போடப்பட்டது. இதன் பெயர் 'பேட் மேன்.' 'லிட்டில் போய்' அணுகுண்டு ஒரே நேரத்தில் ஒரு இலட்சம் மக்களைக் கொன்றது. 'பேட் மேன்' அணுகுண்டால் இறந்தவர்கள் 60 ஆயிரம்பேர். ஆனால் இக்குண்டுகளால் ஏற்பட்ட கதிர் வீச்சின் விளைவுகள் பல வருடங்களுக்கு இந்நாட்டைத் தாக்கின.

*** இந்த அணுகுண்டுகளின் சக்தி என்ன?**

இதன் சக்தி 20 கிலோ தொன். அதாவது இதன் அழிவு சக்தி 20 ஆயிரம் கிலோ. (1தொன்=1000 கிலோ.)

*** இப்போதைய அணுகுண்டுகளின் சக்தி என்ன?**

இப்போதைய அணுகுண்டுகளின் சக்தி மெகா தொன்களில் அளக்கப்படுகின்றன. அந்தளவிற்கு இப்போதைய அணுகுண்டுகள் மிகவும் சக்தி வாய்ந்தவை.

## அண்டார்டிகா



உலகின் 7 கண்டங்களில் ஒன்றான அண்டார்டிகா கண்டம் தென் துருவம் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு பனிக்கட்டிப் படலம் பெரும் அளவில் உள்ளது. இந்த பனிக்கட்டிப் பாறைகள் உடைந்து சிதறி கடலில் கடலின் நீர் மட்டத்தை உயர்த்துவது மட்டுமன்றி, சில இடங்களில் சுழல் நீரோட்டத்தையும் ஏற்படுத்துகின்றன.




அண்டார்டிகா கண்டத்தில் உள்ள பெரும்பனிக்கட்டி பாறைகளால் பல நாடுகளின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க முடியுமாம். இங்குள்ள ஒரு பனிக்கட்டிப் பாறையைப் பெயர்த்து வந்தால், இலட்சக்கணக்கான மக்கள், பல வருடங்களுக்கு குடிநீராகப் பயன்படுத்தலாம். ஆனால் இப்பனிக்கட்டிப் பாறையைப் பெயர்த்து எடுப்பது மிகவும் கடினமான காரியமொன்று.

உலகின் வேறெந்தப் பகுதிகளிலும் பார்க்க அண்டார்டிகாவில்தான் நிலக்கரி அதிகமாக உள்ளது. இங்கு நிலக்கரி தவிர, இரும்பு, செம்பு, நிக்கல், மங்கனிஷ், குரோமியம் போன்ற கனிப்பொருட்களும் அதிகமாக உள்ளன. ஆனால் இவற்றை அகழ்ந்தெடுப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

ஏனென்றால் அண்டார்டிகாவின் நிலப்பரப்பின் மேல் 2 முதல் 4 கிலோமீட்டர் உயரத்திற்கு பனிக்கட்டி உள்ளது. இதை அகற்றிய பின்தான் நிலத்தின் கீழ் உள்ள கனிப்பொருட்களை அகழ்ந்தெடுக்க முடியும்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## அட்டகாச ஆரம்பம்

# டிசம்பர் பௌர்ணமி

## 02

நித்தியன் உதட்டில் ஒரு புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு ருத்ரமூர்த்தியை ஏறிட்டான்.

"அப்பா! என்னோட ஒரு வருஷ பம்பாய் வாழ்க்கையில் ஒரு நொடிகூட கஷ்டமா நினைச்சது இல்லை. ஏதோ ஒரு விடுதியில் தங்கிட்டு வந்த மாதிரியான உணர்வுதான் எனக்கு. அந்த வாழ்க்கையை நான் கில்ட்டியாகவே ஃபீல் பண்ணலை."

"உனக்கு அப்படி இருந்திருக்கலாம். ஆனா, நீ ஜெயில்ல இருந்த ஒவ்வொரு நிமிஷமும் நான் கூனி குறுகிப் போய் கிடந்தேன். நீ வெளிநாட்டுக்குப் போயிருக்கிறதாக பொய் சொல்லி நண்பர்கள் வட்டாரத்தையும், சொந்தக்காரங்க வட்டாரத்தையும் நம்ப வைக்கிறதுக்குள்ள நான் பட்ட பாடு இருக்கே... அது அந்த கடவுளுக்குத்தான் தெரியும். எந்த நிமிஷத்துல யாருக்கும் உண்மை தெரிஞ்சுடுமோன்னு வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருந்தேன்."

"நீங்க உண்மையையே சொல்லியிருக்கலாம்ப்பா... நான் எதுக்காக ஜெயிலுக்குப் போனேன்னு உங்களுக்கே தெரியும்."

"எப்படியிருந்தாலும் அது ஜெயில் ஜெயில்தானே? நீ என்ன காரணத்துக்காக ஜெயிலுக்குப் போனேங்கறது முக்கியமில்லை. ஜெயிலுக்குப் போய் ஒரு வருஷம் இருந்துட்டு வந்திருக்கே. அதுதான் முக்கியம். நீ வெளிநாட்டுக்குப் போயிருக்கிறதா பொய் சொல்லாம இருந்திருந்தா ஏர் போர்ட்டுக்கு விஜயராகவன் குடும்பம் வந்திருக்காது. அந்தப் பொண்ணு விசாலி உன் கழுத்துல மாலையைப் போட்டிருக்கவும் மாட்டா."

"அப்பா! நான் ஜெயிலுக்குப் போய்ட்டு வந்து இருக்கிற விஷயம் என்னைக்காவது ஒரு நாள் விஜயராகவன் ஃபேமிலிக்குத் தெரியும்போது, அது ஒரு பெரிய பிரச்சனையா மாற வாய்ப்பு இருக்கு."

ருத்ரமூர்த்தி சிந்தித்தார்.

"தெரிஞ்சாதானே?"

"அது ரிஸ்க். நாளைக்கு எனக்கும் விசாலிக்கும் கல்யாணமான பின்னாடி நான் ஜெயிலுக்குப் போயிருக்கிற விஷயம் தெரியவந்து, அந்த ஃபேமிலியோட கோபத்தை நம்மால தாங்கிக்க முடியாது. விஜயராகவன் ஒரு ப்ரஸ்டீஜியஸ் பேர்வழி. நம்ம மேல மான நஷ்ட வழக்கு போட்டு கோர்ட்டுக்கு போகவும் தயங்க மாட்டார்."

"டேய் நித்தியன் இது தேவையில்லாத பயம். உனக்கும் விசாலிக்கும் கல்யாணம் நடந்து முடிஞ்சதுக்கு அப்புறம் விஜயராகவனுக்கு நீ ஜெயிலுக்குப் போன விஷயம் தெரிஞ்சாலும் அதனால எந்தப் பிரச்சனையும் வராது. அப்படி விஜயராகவன் பிரச்சனை பண்ணினா பாதிக்கப்படப் போறது அவரோட பொண்ணு விசாலியோட வாழ்க்கைதான்."

"இருந்தாலும்...."

"டோண்ட் ஆர்க்யூ வித் மீ....! நீ கொலைகாரனோ, கொள்ளைக்காரனோ.... சமூக விரோதியோ கிடையாது. ஏதோ சந்தர்ப்பவசத்தால, ஜெயிலுக்குப் போயிட்டு வந்திருக்கே. அதை ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துட்டு, ஒரு புதிய வாழ்க்கைக்கு நீ தயாராகணும். அந்தப் புதிய வாழ்க்கையும் தயாரா உனக்காக கைகட்டி காத்திருக்கு. எனக்கு நீ சந்தோஷத்தை தர விரும்பினா விசாலியை கல்யாணம் பண்ணிக்கணும். மாட்டேன்னு சொல்லி என்னை தலைகுனிய வெச்சுடாதே!"

"அப்பா! உடனடியா எனக்கு கல்யாணம் வேண்டாம்."

"ஏன்?"

"இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்."

"கொஞ்ச நாள்ன்னா, எவ்வளவு நாள்?"

"ரெண்டு வருஷம்"

"நீ ரெண்டு மாசம்னு சொல்லியிருந்தாக்கூட ஒத்துக்க மாட்டேன். உனக்கு இந்த மார்கழி முடிஞ்சதும் தை மாசத்துல கல்யாணம்... நான் எதைப் பண்ணினாலும் அது உன்னோட நன்மைக்காகத்தான்- வீடு வந்தாச்சு. முகத்தை சந்தோஷமாக வெச்சுக்க... ஃப்ரெண்ட்ஸ், ரிலேட்டிவ்ஸ்னு ஒரு பெரிய பட்டாளமே உனக்காக வெயிட் பண்ணிட்டிருக்கு. எல்லார்கிட்டேயும் ரெண்டொரு வார்த்தை கலகலப்பா பேசு. எதையோ பறி கொடுத்த மாதிரி ஃபேஸ் எக்ஸ்பிரஷன்ஸ் இருக்கக்கூடாது."

நித்தியன் இயந்திரமாய் தலையாட்டிக் கொண்டிருக்கும் போதே, பங்களா இருந்த தெருவுக்குள் கார் நுழைந்தது.

பேண்ட் வாத்தியக் கோஷ்டி உச்ச ஸ்தாயியில் ஒலிக்க, நாதஸ்வர இசையும் கூடவே இழைந்தது.

விரியத் திறந்து கிடந்த காம்பௌண்ட் கேட்டுக்குள் கார் நுழைந்து போர்ட்டிகோவின் மார்பிள் பரப்பில் போய் சகல இயக்கத்தையும் நிறுத்திக் கொண்டு கார் மௌனமாயிற்று.

நித்தியன் இறங்கினான்.

செக்கச் செவேலென்று ஆரத்தி கரைத்துக் கொண்டு காத்திருந்த இரண்டு சொந்தக்காரப் பெண்கள் நித்தியனை நெருங்கி திருஷ்டி கழித்து பொட்டு வைத்தார்கள்.

போர்ட்டிகோ படிகளில் உயர்ந்தான் நித்தியன். ஹாலுக்குள் நிறைய பேர் காத்திருந்தார்கள். ஏறக்குறைய எல்லாருடைய கைகளிலும் பொக்கேக்கள்.

நித்தியன் ஒரு வலுக்கட்டாயப் புன்னகையை முகத்துக்கு கொடுத்தபடி எல்லாரையும் பார்த்து கும்பிட்டான். ஒவ்வொருவராய் வந்து அவனுடைய கைகளைப் பற்றி குலுக்கி-

### இதுவரை

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தி.
அவரது மகன் நித்தியன்.
அவனுக்கு விசாலியை
மணம்முடிக்க திட்டமிடுகிறார்.
நித்தியன் வெளிநாட்டிலிருந்து
வருகிறான் என்று தடபுடல் வரவேற்பு
நடத்துகிறார் ருத்ரமூர்த்தி.
ஆனால், நித்தியன் வந்தது
வெளிநாட்டில் இருந்தல்ல
சிறையில் இருந்து....

இனி.....

பொக்கேயைத் திணித்து வாழ்த்துக்களை சொல்ல ஆரம்பித்தார்கள்.

"விஷ்... யூ... ஆல்...த... பெஸ்ட்."



### கிரைம் சக்கரவர்த்தி
## ராஜேஷ்குமார்

"இன்னும் இது மாதிரியான நிறைய வெளிநாட்டுப் பயணங்கள் அமையணும்."

"கங்க்ராட்ஸ்...."

"அடுத்த வெளிநாட்டுப் பயணம் எப்போது மிஸ்டர் நித்தியன்?"

பொக்கேக்களைக் கொடுத்த அனைவருக்கும் புன்னகைகளைக் காட்டிக் களைத்துப் போனான் நித்தியன்.

"**சா**ந்தா!"

அறைக்கு வெளியே சத்தம் கேட்டு கண்ணாடிக்கு முன்பாய் நின்று ஸ்டிக்கர் பொட்டை சரி பார்த்துக் கொண்டிருந்த அந்த அழகான இருபத்தி மூன்று வயது சாந்தா திரும்பிப் பார்த்து மலர்ந்தாள்.

"வாடி ரேணு!"

அறைக்கு வெளியே நின்றிருந்த அந்த இரட்டை நாடி சரீர ரேணுகா உள்ளே வந்தாள்.

"நீ வெளியே கிளம்பியிருப்பியோன்னு நினைச்சுட்டே வந்தேன்."

"என்ன விஷயம்?"

"இன்னைக்கு மத்தியானம் நீ ஃப்ரியா?"

"எதுக்குக் கேக்குறே?"

"அலங்கார்ல நூன் ஷோ போலாமா? படத்துக்குப் போய் ரொம்ப நாளாச்சு"

"நான் அம்பேல் ரேணு."

"ஏண்டி?"

"ரெண்டு காரணம். காரணம் நெம்பர் ஒன். கையில காசு கிடையாது. காரணம் நம்பர் ட்டு. இன்னிக்கு ட்யூட்டி பார்க்கவே நேரம் சரியா இருக்கு.... கிட்டத்தட்ட நூத்தி ஐம்பது டெலிஃபோன்களை க்ளீன் பண்ணணும்."

"எப்பப் பார்த்தாலும் காசு இல்லேங்கிற பஞ்சப் பாட்டுத்தானா?"

"என்னடியம்மா பண்றது? நான் என்ன உன்னை மாதிரி செக்ரட்ரியேட்லயா வேலை பார்க்கறேன்? ஐயாம் ஏ டெலிஃபோன் கிளீனிங் கேர்ள். வீடு வீடா ஆபீஸ் ஆபீஸா ஏறி ஒவ்வொரு டெலிஃபோனுக்கும் ஜெர்மிசைட் லிக்விடையும் பர்ஃப்யூமையும் பூசி துடைச்சு சுத்தம் பண்ற வேலை. கிடைக்கிற சம்பளம் ஹாஸ்டல் ஃபீஸ் கட்டறதுக்கும் மெஸ்ல சாப்பிடறதுக்குமே சரியா இருக்கு. இதுல சினிமாவெல்லாம் நினைச்சுப்பார்க்க முடியுமா என்ன?"

"சரி... சரி... புலம்பாதே... சினிமாவுக்கு டிக்கெட் எடுக்கற செலவு என்னோடது வர்றியா?" "வரலை! வேற யாரையாவது கூட்டிட்டு போ."

"ஏண்டி?"

"ட்யூட்டி ஃபர்ஸ்ட்...! வேணும்ன்னா வர்ற ஞாயித்துக்கிழமை மார்னிங் ஷோ போகலாம்."

"அன்னிக்கு எனக்கு வேற ப்ரோக்ராம் இருக்கே!"

சாந்தா மேஜை மேல் இருந்த தோல் பையை எடுத்து, ஜிப்பை இழுத்து உள்ளே டெலிஃபோன் க்ளீனிங் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருட்களும் இருக்கிறதா என்று ஒரு முறை சரிபார்த்துக் கொண்டாள். கதவைப் பூட்டுவதற்காக சுவர் ஆணியில் மாட்டியிருந்த சாவியையும் எடுத்துக் கொண்டாள்.

ரேணுகா தன் பெரிய இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு முறைத்தாள்.

### மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

"என்னடி! பதில் சொல்லாம கிளம்பிட்டே?"

"ரேணு! அந்த வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்ல இருநூத்தி ஐம்பத்தொன்பது பேர் தங்கியிருக்காங்க. அவங்கல்ல யாராவது ஒருத்தியை இன்னிக்கு நீ சினிமாவுக்கு கூட்டிட்டுப் போ... இன்னொரு நாளைக்கு நாம ரெண்டு பேரும் போகலாம்."

"பெரிய கலெக்டர் உத்தியோகமா பார்க்கிறே? மத்தியானம் லீவு போட்டுக்கிட்டு வந்தா என்ன?"

சாந்தா லேசாய் முகம் சிவந்தாள். "இதோ பார் ரேணு! நான் பார்க்கிற உத்தியோகம் உனக்கு கேவலமாயிருக்கலாம். ஆனா என்னைப் பொறுத்தவரைக்கும் அதுதான் கலெக்டர் உத்தியோகம். ஏன்னா இந்த வேலைதான் எனக்கு மூணுவேளையும் சோறு போடுது. கட்டிக்க துணிமணி கொடுக்குது- இப்படி பாதுகாப்பா இருக்க ஒரு இடமும் கொடுத்திருக்கு. அம்மா அப்பா அண்ணன் தங்கச்சின்னு எந்த சொந்தமும் இல்லாத எனக்கு இந்த டெலிஃபோன் க்ளீனிங் வேலைதான் நிறைய உறவுகளைக் கொடுத்திருக்கு! நான் ரூமைப் பூட்டணும். நீ வெளியே கிளம்பறியா?"

"ஸாரிடி... சாந்தா"

"உன்னோட வெளியே சாயந்தரமா வந்து சாவகாசமா வாங்கிக்கறேன். இப்ப நீ கிளம்பு. எனக்கு ட்யூட்டிக்கு நேரமாச்சு."

ரேணுகா தயக்கமாய் அறையை விட்டு வெளியேற சாந்தா தோல் பையை தோளில் மாட்டிக் கொண்டபடி அறையைப் பூட்டிவிட்டு வராந்தாவில் நடை போட்டாள். மணிக்கட்டில் நேரம் பார்க்க மணி 9.25.

'வேகமாய் நடை போட்டால் ஒன்பதரை மணி பஸ்ஸைப் பிடித்து விடலாம்.'

'அந்த பஸ்ஸை விட்டால் எலக்ட்ரிக் ட்ரெயின்தான்!"

யோசித்துக் கொண்டே வேகமாய் நடைபோட்டவளை ஹாஸ்டலை நிர்வகிக்கும் ஜெகதாம்பாள் மறித்த மாதிரி வந்து நின்றாள்.

"என்ன சாந்தா ட்யூட்டிக்கு கிளம்பிட்டியா?"

"ஆமா மேடம்."

"இந்த மாசமாவது ஹாஸ்டல் ஃபீஸை சிக்கிரம் குடுத்துடுவியா?"

"குடுத்துடுவேன் மேடம்."

"போன மாசம்மாதிரி லேட் பண்ணிடாதே... இந்த ஹாஸ்டலிலேயே நீதான் லேட் பேமண்ட். சீக்கிரமா ஒரு நல்ல வேலையா பார்த்துத் தேடிக்க."

"சரி மேடம்."

சாந்தா தலையாட்டிவிட்டு வேகமாய் நடந்தாள். வராந்தாவை வேக நடையில் விழுங்கி முன்னால் இருந்த வரவேற்பறையைக் கடக்கும்போது, ஹாஸ்டல் ஆயா குரல் கொடுத்தாள்.

"சாந்தாம்மா....! உங்களுக்கு ஃபோன்."

"எனக்கா?"

"ஆமாம்மா."

'ஃபோனில் யார்?' சாந்தா யோசித்துக் கொண்டே போய் டேபிளின் மேல் மல்லாந்து விழுந்திருந்த ரிஸீவரை எடுத்து காதுக்கு ஒட்ட வைத்தாள்.

"ஹலோ...." மெல்ல குரல் கொடுத்தாள்.

"என் அருமைக் காதலியே சாந்தா நான் உன்னோட நித்தியன்!"

(பௌர்ணமி தொடரும்)

### அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

## 14

**கை**திகள் அனுபவிக்கும் துயரம் எப்போதாவது சதாமின் மனசுக்குள் இடிக்கும். அப்போதெல்லாம், 'இவர்கள் ஆட்சியில் இப்படித்தானே என் கட்சித் தோழர்கள், என் கட்சித் தலைவர்கள், சித்ரவதைப் பட்டார்கள்?' என்ற எண்ணம் தோன்றும். உடனே உறுத்தல் விலகும். மனம் உறுதியாகும். முழு மூச்சுடன் தன் வேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்து விடுவான்...

ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருந்தபடி, சதாமுக்கும், மாமா மகள் சாஜிதாவுக்கும் 1963–ல் பாக்தாத்தில் திருமணம் நடந்தது. எளிமையான திருமணவிழா, பெற்றோர்களும் உற்றார்களும், மறுமலர்ச்சிக் கட்சியின் முக்கியத் தலைவர்களும் வாழ்த்தொலி எழுப்ப, இனிதே நடந்தேறியது.

சதாமின் குடும்ப வாழ்க்கை தொடங்கியது...

சதாமும், சாஜிதாவும் ஏற்கனவே அறிமுகமானவர்கள் என்பதாலும், நெருங்கிய உறவினர்கள் என்பதாலும் அவர்களின் குடும்ப வாழ்க்கை பிணக்கின்றி அமைதியாய் நடந்தது.

திருமணத்திற்குப் பிறகும் சாஜிதா ஆசிரியப் பணியைத் தொடர்ந்தாள். எப்போதும் போல சதாம் தன் விசாரணை அதிகாரி வேலையை கவனித்து வந்தான்...

ஆனால், எதுவும் எப்போதும் சுமுகமாகவே இருந்து விடுவதில்லை!

அடுத்த சில மாதங்களில் அடுக்கடுக்காய் நடந்த சம்பவங்கள், சதாமை சிறைக்குள் தள்ளிப்பூட்டின...

இன்னும் இரும்பாகிப் போனான் அவன்!

கல்லறைக்குள் படுத்திருப்பது போலிருந்தது சதாமுக்கு...

மெலிதாய் இருள் பரவிய தனியறையில் முகட்டைப் பார்த்து தரையில் மல்லாக்கப் படுத்திருந்தார்...

மூன்று பக்கமும் கை நீட்டினால் இடிக்கும் தூரத்தில் நெருக்கமாய் சுவர்கள். படுத்தபடியே சற்று உந்தி கீழே இறங்கினால் கால் தட்டும் தொலைவில் ஸ்ட்ராங்கான இரும்பு கம்பிக்கதவு நாலாவது பக்கத்தில்!

இந்த முகட்டையும், கம்பிக் கதவையும், கனத்த சுவர்களையும் மட்டுமே கடந்த ஒரு வருடமாய் பார்த்துக் கொண்டிருக்கிறார் சதாம். மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளையும் பயங்கரவாதிகளையும் அடைத்து வைப்பதற்கென்று விசேஷமாய் கட்டப்பட்ட அந்த கொட்டடி சிறையறையில் துடிப்புமிக்க சதாம் ஊனமுற்றவர்போல் முடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்.

சதாம் பெருமூச்செறிந்தார்.

இரும்புக் கதவின் பூட்டு திறக்கப்படும் சத்தம் கேட்டது. தலையை உயர்த்திப் பார்த்தார். கதவைத் திறந்து வார்டன் உள்ளே வந்தான். "தூங்குறீயா? ம்... வெளியே பம்பரமா அரசியல் பண்ணிக்கிட்டிருக்க வேண்டிய ஆளு இப்படி உள்ளே மடங்கிக் கிடக்கிற...! எல்லாம் விதி!" என்று முணுமுணுத்துக் கொண்டே வார்டன் சாப்பாட்டுத் தட்டை உள்ளே வைத்துவிட்டு மீண்டும் கதவைப் பூட்டிச் சென்றான்.



ராஜையா

சதாமுக்கு சாப்பிட மனமில்லை.

அவர் சிறைக்குள் தள்ளப்படுவதற்கு முன் நடந்த அதிர்ச்சியூட்டும் அரசியல் சம்பவங்கள் நெஞ்சில் நிழலாடின.

நாசர் மாறியிருந்தார். சதாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு நாசர் மாறியிருந்தார்...

ஈராக்கில் கூட்டாக ஆட்சியைக் கைப்பற்றிய ஆரீ∴பும், மறுமலர்ச்சிக் கட்சியினரும், ஈராக்கை எகிப்துடன் இணைத்து புதிய அரபுதேசம் ஒன்றை உருவாக்க நாசருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் 1961–ல் எகிப்தும், சிரியாவும் பிரிந்ததிலிருந்து மனமொடிந்திருந்த நாசர், இத்தகைய இணைப்பு முயற்சிகளை ஆதரிக்காததோடு, கேலி பேசவும் தொடங்கியிருந்தார். சதாமின் மனசில் விழுந்த முதல் அடி இது.

இந்தச் சமயத்தில் சதாம் கண்போல் நினைத்திருந்த மறுமலர்ச்சிக் கட்சி இரண்டாக உடைந்தது. இது சதாமுக்கு விழுந்த இரண்டாவது அடி.

கட்சி உடைந்ததால் ஏற்பட்ட குழப்ப நிலையை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்ட ஆரீ∴ப், 1963 நவம்பர் 18ந் திகதி திடீரென மறுமலர்ச்சிக் கட்சியின் முக்கியத் தலைவர்களை இராணுவத்தின் துணையுடன் கைது செய்து சிறையிலடைத்தார். இவ்விதம் தன்கட்சி ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டது சதாமுக்கு விழுந்த மூன்றாவது அடி.

உடைந்துபோன கட்சியில், அ∴பிலாக் என்பவர் தலைமையிலான கோஷ்டியை சதாம் ஆதரித்தார். அவர் மட்டுமல்ல; மாமா கயருல்லாவும், அவரது உறவினர்களும்கூட அ∴பிலாக்கையே ஆதரித்தார்கள்.

இதுவரை இல்லாத தீவிரத்துடன் சதாம் அரசியல் பணிகளில் இறங்கினார். அரசாங்கத்தின் கண்ணில் படாமல் தலைமறைவாக இருந்துகொண்டு அ∴பிலாக் தலைமையிலான மறுமலர்ச்சிக் கட்சியை ஆட்சியில் அமர்த்திப் பார்க்க வேண்டும் என்ற வெறியுடன் முழுமூச்சாக அரசியல் வேலைகளைச் செய்து வந்தார்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## சுபா



சுரேஷ்–பாலா இருவரும் இணைந்து சுபா என்றபெயரில் தூள் கிளப்பி வருகின்றனர். 'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் வசனமும் இவர்கள் கைவண்ணமே.

## அமோக வாரம் 03

### இதுவரை

அரவிந்த் ஒரு பைலட். அவனது அழகான மனைவி ஜ்யோதி. அரவிந்துக்கும், ஜ்யோதிக்கும் நண்பன் விக்ரம். அவன் ஜ்யோதியை ஒருதலையாய் காதலித்து ஏமாந்தவன். அரவிந்த் இல்லாத நேரத்தில் தன்னை பலாத்காரப்படுத்த முயலும் விக்ரம் மீது பூ ஜாடியால் தாக்கி காயப்படுத்துகிறாள் ஜ்யோதி. "எப்படியாவது உன்னை அடைவேன்!" என்று சவால்விட்டு போகிறான் விக்ரம்.

இனி....

# உதட்டில் ஒரு மச்சம்



"**சீ**னு...."

அம்மாவின் குரல் அன்பாகக் கூப்பிட்டது. செருப்பில் கால் நுழைத்த சீனு திரும்பிப் பார்த்தான். வாசல் கதவில் ஒரு கையூன்றி, "என்னம்மா?" என்றான்.

"இன்னும் பத்து நிமிஷத்துல ரசத்தை எறக்கிடுவேன். உனக்குப் பிடிச்ச மிளகு ரசம்." சீனு செருப்பைக் கழற்றினான். அம்மாவை நெருங்கி வந்தான். அவன் நெற்றியில் பொடித்திருந்த வியர்வைத் துளிகளை அவள் முந்தானையால் ஏற்றி எடுத்தாள்.

"இல்லம்மா... சாப்பிட்டுட்டுப் போக நேரமில்லை. அங்க எல்லாரும் காத்திருப்பாங்க... வந்து சாப்பிடறேன்."

அம்மா, அவன் கையைப் பற்றிக் கன்னத்தில் வைத்துக்கொண்டாள்.

"பொலிஸ் பட்டாளமே வந்து எறங்கியிருக்கு... எனக்கு பயமாயிருக்கு சீனு!"

"பயப்படாதேம்மா... எனக்கு ஒண்ணும் ஆகாது."

அவள் கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தான் வெளியேறினான்.

☆☆☆

**சீ**னு சுற்றிலும் பார்வையை எறிந்தான். ஒரு புறம் பசுமை போர்த்திய மலைகள். ஒருபுறம் சலசலத்து ஓடும் நீரோடை.

இந்த இடத்திற்கு பிரகாஷ் குப்தாவைக் கூட்டி வந்திருக்கவேகூடாது!

பக்கத்து டவுனிற்கு கண்காட்சியையோ, கக்கூஸையோ திறந்து வைக்க வந்திருந்த அமைச் சரை ஒடக்கரைக்குக் கூட்டி வந்தது சீனுதான்.

"எங்கள் கிராமத்துக்கு நீங்கள் ஒரு முறையாவது வந்து போக வேண்டும் சார்."

"அப்படி என்னப்பா உங்கள் ஊரில் விசேஷம்?"

"இருக்கிறது சார். எங்கள் ஒடக்கரை கிராமத்தில் வீட்டிற்கு ஒருவராவது இந்தியராணுவத்தில் இருந்தவர் சார்"

"ஈஸிட்? ஹேம்நாத், நான் அந்த ஊரைப் பார்த்தே ஆக வேண்டுமே!"

"அந்த கிராமத்தில் ஹெலிபேட் இல்லை சார்."

"காரில் போவோம்."

"சரியான சாலை கிடையாது சார். செக்யூரிட்டி ஏற்பாடுகள் ஏதும் செய்யவில்லை. திடீரென்று நீங்கள் புரொகிராமை மாற்றினால்..."

"யாரும் சுட்டு விடமாட்டான்யா... போகிறோம் என்றால் போகிறோம்."

திடுதிப்பென்று புழுதி பறக்க இருபத்து நான்கு கார்கள் ஒடக்கரைக்குப் படையெடுத்தன.

ஸ்கூல் மைதானம் அவசரமாகச் சுத்தம் செய்யப்பட்டது. சீனு வீட்டு மோரை அமைச்சர் இரசித்துக் குடித்தார்.

செருப்பைக் கழற்றி விட்டு, ஓடையில் கால்களை நனைத்து சிலிர்த்தார். தைல வாசம் கலந்த காற்றை நெஞ்சு நிறைய இழுத்து அனுபவித்தார்.

மைதானத்தில் கூடிய இளைஞர்களை சீனு அறிமுகம் செய்து வைத்தான்.

"இது தேவேந்திரன். இவன்தான் ஒடக்கரை இளைஞர் மன்றத்தின் தலைவன். இந்திய ராணுவத்தில் இருந்தவன். போரில் தன் வலதுகாலை இழந்தவன்."

தேவேந்திரனின் செயற்கைக் காலைப் பார்த்துவிட்டு பிரகாஷ் குப்தா 'ச்ச்' என்றார்.



"இது ஷிவா. என் ஒரே தம்பி. பைலட்டாக வேண்டும் என்று இவனுக்கு ஆசை. விமானம் கற்றுக் கொண்டதும் இந்திய விமானப் படையில் சேரத் துடிப்பாக இருக்கிறான்."

"வெரிகுட்"

அமைச்சர் ஒவ்வொரு இளைஞரிடமும் தனித்தனியே கைகுலுக்கிக் கொண்டிருந்தாலும், அவர் கவனம் அந்தக் கிராமத்தையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

காரில் ஏறிக் கிளம்பு முன் சீனுவின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"ஒடக்கரை எனக்கு ரொம்பப் பிடித்து விட்டது. இனி இது உங்களுடைய ஊர் இல்லை. என்னுடைய ஊர். இந்த ஊரை எப்படி மாற்றிக் காட்டுகிறேன் பாருங்கள்."

கை தட்டல்கள்.... விசில்கள்....

அமைச்சர் கைகளைத் தூக்கிக் கும்பிட்டு விட்டு, காரில் ஏறிப் புழுதி பறக்கச் சென்றபின், சீனுவை எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

"உன்னால, நம்ம ஊருக்கே நல்ல காலம் பொறந்துடுச்சடா!" என்று கொண்டாடினார்கள்.

ஒரு வாரத்தில் சில இன்ஜினியர்கள் வந்து இறங்கினார்கள். அங்கங்கே நின்று குழாய் லென்ஸ்களால் பார்த்துக் குறிப்பெடுத்தார்கள்.

ஒரு வீடியோ கேமிரா ஊரைச் சுற்றிச் சுற்றி வந்தது. வந்தவர்களுக்கெல்லாம் இளைஞர் அணியின் சார்பில் தேவேந்திரன் வீட்டில் கோழி அடித்து விருந்து கொடுக்கப் பட்டது. அவர்களுடைய கருவிகளைச் சுமக்க இளைஞர்கள் போட்டி போட்டார்கள்.

இரண்டு வாரங்களில் அமைச்சர் மறுபடி வந்தார்.

மேடையேறி முழங்கினார்.

"மஞ்சள் கலந்த மலைகளின் பின்னணியில் ஒடக்கரை என்னை மிகக் கவர்ந்து விட்டது. ராணுவத்திற்காக இந்தக் கிராமத்தில் ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆண் மகனையாவது அனுப்பியிருப்பது தெரிந்ததும் சிலிர்த்துப் போனேன். இந்த ஊர் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று துடித்தேன். எங்கள் கம்பனி ஜப்பான் நிறுவனத்துடன் இணைந்து சிறு கார்களைத் தயாரிக்க ஒரு புதிய தொழிற்சாலையை இங்கே நிறுவப் போகிறது. ஒடக்கரையில் இருக்கும் இளைஞர்கள் அத்தனை பேருக்கும் எங்கள் தொழிற்சாலையில் வேலை கொடுக்கப்படும்."

இளைஞர்கள் செய்தியைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கை தட்டினார்கள்.

அடுத்த வாரத்தில் இடி இறக்கப்பட்டது.

'கிராமத்தில் இருக்கும் அத்தனை வீடுகளும் உடனடியாக காலி செய்யப்பட வேண்டும். மலையை அடுத்து இருக்கும் பள்ளத்தில் அவர்களுக்கு இடம் ஒதுக்கித் தரப்படும். புதிய வீடுகள் கம்பெனி செலவில் கட்டித்தரப் படும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஈட்டுத்தொகையாக இருபதாயிரம் வழங்கப்படும்.'

அறிவிக்க வந்த கலெக்டரின் ஜீப்பைக் கல்லால் அடித்துத் துரத்தினார்கள். பார்லிமெண்டில் எதிர்க்கட்சி இரண்டு தடவை குரல் கொடுத்துவிட்டு, விலைக்கு வாங்கப்பட்டு, அடங்கிப் போனது.

சொந்த மண்ணை விட்டுப்புறப்பட மறுத்து உண்ணாவிரதம் இருந்தவர்கள் சிறைக்குத் தூக்கிப் போகப்பட்டார்கள். ஆர்ப்பாட்டம் செய்தவர்களை கேடயம், மூங்கில் கழிகளோடு பொலிஸ் சந்தித்தது.

'ஒடக்கரையில் தீவிரவாதிகள் ஒளிந்திருப்பதாக அரசுக்கு நம்பகமான தகவல் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டு, வீடுகளில் இருந்த பொருட்கள் வெளியே இறைக்கப் பட்டன. குடும்பங்கள் கூண்டோடு தூக்கப் பட்டன.

மலையின் மறுபுறம் தற்காலிக ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளுக்குக் கீழ் குடும்பங்கள் சேகரமாயின. படுதாக்களும், தென்னை ஓலைகளும் மறைப்புச் சுவர்களாயின. கம்பெனி செலவில் மலிவு வீடுகள் தயாராகும்வரை இந்தக் கூடாரங்களில் குடியிருக்க வேண்டுமென மக்கள் 'உத்தரவாக'க் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

கொதிப்பதும், குமுறுவதும், கோபம் கொள்வதும் தவிர வேறெதுவும் செய்ய முடியாமல் தவித்த இளைஞர்கள் தேவேந்திரனின் சொல்லுக்குக் கட்டுப் படத் தயாரானார்கள்.

✿❀✿

"**உ**னக்காகத்தான் காத்திருக்கிறோம் சீனு!" என்றான் தேவேந்திரன். அவனைச் சுற்றி ஒடக்கரையின் துடிப்பான இளைஞர்கள்.

"சொல் தேவா, நாம் என்ன செய்யப் போகிறோம்?"

"தன் புதிய கார்த் தொழிற்சாலைக்கு இங்கே இன்று அடிக்கல் நாட்ட வருகிறார், அமைச்சர் பிரகாஷ் குப்தா. அவர் வரும்போது, நாம் எதிர்ப்பைக் காட்டக் கூடாது என்பதற்காக தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தடையை மீறப்போகிறோம். அவரை அடிக்கல் நாட்ட விடாமல் துரத்தி அடிக்கப் போகிறோம்!"

அத்தனை இளைஞர்களும் ஆவேசத்துடன் "ஆமாம்" என்றார்கள்.

"நம் எதிர்ப்பைத் தெரிவிக்க முதலில் நம் எதிரியை எரிக்கப் போகிறோம்."

தேவேந்திரன் சுட்டிக்காட்டிய இடத்தில் அமைச்சர் பிரகாஷ் குப்தாவின் கொடும்பாவி.

மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு நெருப்பு வைக்கப்பட்டு ஒடக்கரையின் மைதானத்தில் குபுகுபுவென்று கொடும்பாவி எரிந்து வானத்தில் அடர்த்தியான புகை எழுந்தபோது, அமைச்சரின் ஹெலிகாப்டர் வானில் தென்பட்டது.

✿✱✤

"**எ**ன்ன நடக்கிறது அங்கே?" பிரகாஷ் குப்தாவின் குரல் ஆவேசத்துடன் ஒலித்தது. ஹெலிகாப்டரை செலுத்திக் கொண்டிருந்த அரவிந்த், அந்த வெண் புகையைக் கவலையுடன் பார்த்தான்.

ஹேம்நாத் வெளியே பார்த்தார்.

"ஒடக்கரை இளைஞர்கள் ஆவேசமாக இருக்கிறார்கள். சார், நாம் திரும்பி விடலாமா?"

"நோ" பிரகாஷ்குப்தாவின் கண்கள் சிவந்தன. "இந்த நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சருக்கே பாதுகாப்புத் தர முடியாத அளவிற்கா நிலைமை கைமீறிப் போய்விட்டது? கேவலம்... எக்காரணம் கொண்டும் அடிக்கல் நாட்டாமல் நான் திரும்பமாட்டேன். பொலிஸ் என்ன புல்லா புடுங்கிக் கொண்டிருக்கிறது?"

ஹோம்நாத் உடனடியாக ஒயர்லெஸ்ஸில் பாதுகாப்புப் பணியிலிருந்த பொலிஸ் எஸ்.பி.யை விரட்டினார்.

ஒடக்கரை இளைஞர்களின் ஆவேசம் பொலிஸை அலட்சியப்படுத்துவதை அரவிந்த் கவனித்தான்.

ஹெலிகாப்டரை அதற்கு ஒதுக்கப் பட்ட இடத்தில் இறக்கினான்.

ஆவேசமான கூச்சல்கள்... பறந்து வரும் கற்கள்... மைக்கில் எச்சரிக்கும் பொலிஸ் குரல்கள்.

➻♣❧

**இ**ளைஞர் கூட்டத்தில் யாரோ அவசரப்பட்டு பொலிஸ் ஜீப்பின்மீது பெட்ரோலை ஊற்றினார்கள். நெருப்புக் குச்சியை உரசி எறிந்தார்கள்.

தடை உத்தரவை மீறி அவர்கள் கூட்டமாக முன்னேறியதும் பொலிஸும் ஆவேசமானது. கடைசி எச்சரிக்கைக்குப் பின் துப்பாக்கிகளை பிரயோகித்தது. முழங்கால்களைப் பார்த்துச் சுட்டது.

இளைஞர் கூட்டத்தில் முன் வரிசையில் இருந்த சீனு, துப்பாக்கி வெடித்ததும், தோட்டாவில் இருந்து தப்பிப்பதாக நினைத்து, தாவிப் படுக்க முனைய, தோட்டாவின் பாதையில் அவன் மண்டை குறுக்கிட்டது. அதிவேகத் தோட்டா அவன் கபாலத்தைக் குடைந்து அவன் மூளைக்குள் நுழைந்தது.

(○–வரும்–○)

---

# கவியரசுவின் சுயசரிதை

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

**அ**தை அந்த நீதிபதி வேறுவிதமாகக் கேட்டார்.

"என்ன பாஷையில் கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

சிரித்துக்கொண்டே "கையெழுத்துப் பாஷையில்" என்றான் அவன்.

ஏனென்றால், பெரும்பாலும் மெத்தப் படித்தவர்களுடைய கையெழுத்தெல்லாம் படித்துப் புரிந்துகொள்ள முடியாத வண்ணமே அமையும்.

அவன் பத்திரிகை ஏற்பாட்டில் வெகு மும்முரமாக முனைந்தான்.

மாடர்ன் தியேட்டர்ஸில் கணக்குத் தீர்த்து வாங்கிய ரூபாய் இரண்டாயிரம் அவன் கையில் இருந்தது.

அன்றைக்கு அது அதிகம்தான்.

பத்திரிகையின் முதல் இதழுக்கு எழுத உட்கார்ந்தான்.

ஒன்றா, இரண்டா ..? ஆறு விஷயங்களை எழுதினான்.

எழுத்திலே இருந்த வெறி அவ்வளவு!

அதுவரை மற்ற பத்திரிகைகளெல்லாம் எட்டுப் பக்கங்களைப் போட்டு 'இரண்டணா விலை போட்டிருந்தார்கள்'.

அவன் பன்னிரண்டு பக்கங்கள் இரண்டணா என்று விளம்பரப்படுத்தினான்.

அப்படிப் போட்டால் லாபம் வருமா, நட்டம் வருமா என்று அவன் கணக்குப் பார்க்கவில்லை.

எப்போது, எதில் அவன் கணக்குப் பார்த்தான்...?


முதல் இதழிலேயே அவனும் குறும்பு செய்யத் தொடங்கினான்.

அவனது 'கலை நண்பரைப்' பற்றி அந்நாளில் ஓர் அபிப்பிராயம் பரவலாகப் பரவி இருந்தது.

அவரது எழுத்துக்கள் எதுவும் சொந்தமானவை அல்ல என்பது அது!

பழைய சக்திப் பத்திரிகையை அவன் புரட்டிக் கொண்டிருந்தபோது அதில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது.

அந்தக் கட்டுரையில் 'ஷேக்ஸ்பியர்'கூட தனக்கு முன்னால் இருந்த நாடக ஆசிரியன் ஒருவனின் நாடகங்களைத் தழுவித்தான் தனது நாடகங்களை இயற்றினார் என்று கண்டிருந்தது.



அவன் அதையே தனது முதல் இதழுக்கு முதல் பக்க விஷயமாகக் கொண்டுவிட்டான்.

'திருடித்தான் புகழ் பெற்றான் ஷேக்ஸ்பியர்' என்று தலைப்பிட்டு அவன் எழுதினான்.

'கலை நண்பர்' அதைப் படித்தால் அது அவரது மனத்தைக் குத்த வேண்டும் என்பதற்காகவே அவன் அதை எழுதினான்.

அதற்காக அவரை 'ஷேக்ஸ்பியரோடு' ஒப்பிட்டுப் பெரும் பாவம் புரிந்தான்.

அந்தக் கட்டுரையைப் படித்த அண்ணாத்துரைகூட "ஆங்கிலத்தில் 'புளூ டார்ச்' எழுதியுள்ள கருத்தை வைத்துக்கொண்டு எழுதியிருக்கிறாயா?" என்று கேட்டார்.

அவன் 'புளூ டார்ச்' சைக் கண்டானா? 'கிரீன் டார்ச்'சைக் கண்டானா!

'சக்தியில்' தமிழில் வந்ததைப் பார்த்தான்... அவ்வளவுதான்...!

தலையங்கம் எழுதும்போது தென்றல் உங்களைத் தீண்டவருகிறது. ஆம். "தென்றல்தான் மனிதனைத் தீண்டுகிறது..!" என்று அவன் எழுதினான்.

அதற்குக் காரணம் அவனுடைய கலை நண்பர் தான் எழுதிய ஒரு படத்தில் "நான் தென்றலைத் தீண்டியதில்லை. தீயைத் தாண்டியிருக்கிறேன்" என்று வசனம் எழுதியிருந்தார்.

தென்றலை மனிதன் தீண்டுவதில்லை. மனிதனைத்தான் தென்றல் தீண்டுகிறது என்று அவன் குத்தியிருந்தான்.

முதல் இதழ் வெளிவந்தது...!

அவனை உலகம் அறிந்துகொள்வதற்காக முதல் தூது ஒன்று புறப்பட்டது.

எப்போதும் பத்திரிகை நடத்துவது என்றால் பத்திரிகையின் அமைப்பும் நன்றாக இருக்க வேண்டும் என்பதில் அவன் சிரத்தையாக இருப்பான்.

அதை ஒரு கலையாகவே பயின்று வந்தான்.

முதல் இதழின் அமைப்பே பலபேரை ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று.

அவனது 'தென்றல் சரித்திரம்' தொடங்கிற்று.

அவனை ஏமாளி என்றும், கோமாளி என்றும் கணக்கிட்டவர்களின் இறுமாப்பைத் தகர்க்க அது சம்மட்டி தூக்கிச் சென்றது. அறப்போரை 'தென்றல்' ஆரம்பித்து வைத்தது.

22

22-06-54 அன்று வெளியான முதல் தென்றல் இதழில் 'கூட்டுக்குரல்' என்று ஒரு கற்பனையை வரைந்தான். இறந்து போன காதலர்கள் ஒன்று சேர்ந்து பேசுவது போன்ற கற்பனை அது!

அந்த நேரத்தில் தமிழுக்கு அந்தப் பாணி புதியதாக இருந்தது. அதைப் படித்தவர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் பல வந்தன. அந்தக் கட்டுரை இது...!

சாக்காட்டின் அடிவாரத்திலே எண்ணங்களற்ற இன்ப உலகத்திலே, போட்டி, பொறாமைகளற்ற பொதுவுடைமைப் பூமியிலே- நீங்காத் துயில் மடுத்திருக்கும் எங்களை, மானிட ஜாதியே! நீ மறந்து விடாமல் இருப்பாயாக!

உயிரோடு உயிராகக் கலந்து உறவாடிக் கொண்டிருந்த எங்களை, இதயத்தில் மாறி மாறி இடம் பெற்றுக் கொண்டிருந்த எங்களை, சதி மனம் படைத்த தன்னலக்காரர்களால் சாய்த்துக் கிடத்தப் பட்ட எங்களை ஏ மனித சமுதாயமே! யுக யுகாந்திரங்களுக்கு மறந்துவிடாமல் இருப்பாயாக!

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தீர்ப்பு

"தெரியாமதான் கேக்கறேன் அப்படி என்னடா பெரிய கொறை உங்கிட்ட! அழகில்லியா, அறிவில்லியா? இல்ல சம்பாதிக்கலியா? அப்புறம் ஏன் கலியாணம் வேண்டாங்கிற..." ஆதங்கப்பட்டாள் அம்மா.

"அம்மா! எங்க ஸ்கூல்ல எங்கூட வேலை செய்ற குமாருக்கு நீ கேட்ட எல்லாம் இருக்கு... ஆனா ஒரு கால் மட்டும் சூம்பி கொஞ்சம் விந்தி விந்தி நடப்பான். அவனுக்கு தங்கச்சிய கல்யாணம் செஞ்சு வைக்க உனக்கு சம்மதமா?" ரவி திருப்பிக் கேட்டான்.



**சின்னத்துரை**

"சீ வாய மூடுடா! என்ன பேச்சு பேசற? மகாலட்சுமி மாதிரி ஓடியாடுற புள்ளய போயி... போடா இன்னொருதரம் பேசாதே" என்ற அம்மாவின் பதில் சிரிப்பு, கோபம், யதார்த்தம் எல்லாவற்றையும் உணர்த்தியது ரவிக்கு!

"என்னால தம்பி கல்யாணமோ, தங்கச்சி கல்யாணமோ தடைபட வேண்டாம். அது நடக்கட்டும்! ஒரு பேச்சுக்கு தங்கச்சியை குமாருக்கு கொடுக்க சொன்னதுக்கே உங்களுக்கு அவ்வளவு கோபம்வருதே. எனக்கு பெண் கொடுக்கறவங்களும் இதை நினைப்பாங்கன்னு ஏம்மா மறந்துட்டே?

கல்யாணங்கறது தியாகம், பணம், அனுதாபம் இந்த அடிப்படையில அமைஞ்சா நிச்சயமா பின்னாடி சந்தோசமானதா இருக்காது. எனக்குன்னு ஒருத்தி எதார்த்தத்தை உணர்ந்த என் மனசை புரிஞ்சுகிட்ட ஒருத்தி கெடைக்கிற வரைக்கும்... எனக்கு கல்யாணம் வேணாம்...!" என்றான் பார்வையற்ற ரவி.

# தப்பு எங்கே?

கதிரவனுக்காகக் காத்திராத கந்தசாமி அவசரமாகக் கிணற்றடிக்கு ஓடினார். குளித்து, உடம்பைத் துடைத்துக்கொண்டு எட்டுமுழ வேட்டியைச் சுற்றியபடி வந்தார். மனைவி திலகவதி கொடுத்த தேநீரில் நாக்கை நனைத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் படலையைத் தாண்டினார்.

"அம்மா! அப்பா எங்கே இவ்வளவு அவசரமாப் போறார்?" உள்ளிருந்து வனிதாவின் குரல் ஆச்சரியமாகத் தலை நீட்டியது.

"வேறையெதுக்கு? உன்ரை அலுவலாத் தரகர் வரச்சொன்னவராம். அதுதான் ஓடுறார்." சந்தோஷமாகத் திலகவதி கூறியபோது வனிதாவின் இதயம் சிதறிப்போன கண்ணாடித் துண்டுகளானது.

"அம்மா! எனக்குக் கல்யாணம் வேண்டாம்." மெதுவாகக் கூறினாள் வனிதா.

"கலியாணம் கட்டிறதுக்கு முதல்நாள் வரைக்கும் எல்லாப் பெண்களும் பாடுற பல்லவிதான். சரி, கதையை விட்டிட்டுப் பாயைச் சுத்தி வை."

"அம்மா எனக்குக் கலியாணம் வேண்டாம்!" மீண்டும் சிணுங்கினாள்.

"ஏண்டி... ஏன் வேண்டாம்?" அதட்டலாகக் கேட்டாள் தாய்.

"நான்...நான்..." தடுமாறினாள் வனிதா.

"என்னடி நீ..நீ... சொல்லித் தொலையண்டி... நெஞ்சு பக்கு பக்கெண்டுதடி!" திலகவதியின் குரலில் உஷ்ணத்துடன் பதற்றம் கலவை போட்டது.

"நான்... ஏற்கனவே ஒருத்தரைக்... கா...த...லி...க்...கிறன்."

"ஐயோடி, காதலா... எங்கள் வம்சத்திலே இல்லாதது... என்ன துணிவடி உனக்கு? நினைச்சன், கொப்பா செல்லம் தந்தபோதே நினைச்சன். உனக்கு நாங்கள் என்ன குறை வைச்சம் எண்டு லவ் பண்ண வெளிக்கிட்டனி...தூ..ஐயோ ஊரார் காறித் துப்பப் போகினமே. மனுசன் குழந்தைப் பிள்ளை மாதிரியல்லோ உன்னைப் பார்த்தவர். போற வாற இடமெல்லாம் வெறுங்கையோடை வராமல் அதை இதையெண்டு வேண்டித் தாறவருக்கு நல்ல பரிசு கொடுத்திட்டாய். கொப்பா என்னண்டெடி இந்த இடியைத் தாங்குவார்?" திலகவதி ஒப்பாரி பாடிக் களைத்து மூலைக்குள் ஒடுங்கிக் கிடந்தாள்.

"திலகவதி...திலகவதி... இஞ்சை வா!" சந்தோஷமாகக் குரல் கேட்டது.

"என்ன...?" உடைந்த குரலில் முணுமுணுத்தாள் திலகவதி.

"போன காரியம் வெற்றி. கந்தசாமியா கொக்கா... சீதனத்திலதான் கொஞ்சம் இழு



**அல்வை பிரசன்னா கனடா**

பறி. பத்து இலட்சமும் தரலாம் எண்டிட்டன். ஒரே பிள்ளை கடனை உடனைப்பட்டாவது செய்ய வேண்டியதுதான்."

"நீங்கள் திட்டம் போட்டென்ன? இவள் தான்..." வார்த்தையை முடிக்காமல் இழுத்தாள்.

"என்னடி நெஞ்சிலை கல்லைப் போடுறாய்?" படபடத்தார்.

"அவள் யாரோ ஒரு பொடியனைக் காதலிக்கிறாளாம்..." நாக்குத் தடக்க மென்று விழுங்கினாள் பார்வதி.

"காதல்!" இந்த வார்த்தையே அவருக்கு அருவருப்பானது. "இதென்ன வெட்கக்கேடு. நாங்களில்லையா அவளுக்கு நல்லதைச் செய்ய" குடுகுடு என்று குசினிக்குள் போய் மண்ணெண்ணெய் கானை எடுத்து தலையில் குப்புறக் கவிட்டார்.

"என்னங்க அதைக் கீழை போடுங்க...!" என்று திலகவதி வீறிட, "விடடி, என்னை... இப்பிடி மானங்கெட்டு உயிர்வாழுறதிலை அர்த்தமில்லை."

"அப்பா... நீங்கள் சொல்லுறவரையே கட்டிறன்... உங்கடை விருப்பப்படி நடக்கிறன்." என்று காலைப் பிடித்து மகள் கதறியபோதுதான் அவர் மனம் சமாதானமடைந்தது.

கல்யாணம் ஜாம்ஜாம் என்று நடைபெற்று இரண்டு வருடங்களாகிவிட்டன. தனிமையில் இருந்த கணவனிடம் வனிதா கேட்டாள்.

"என்னங்க! நாளை வெள்ளிக்கிழமை கோவிலுக்குப் போவமா? கோயிலுக்குப் போனால் சந்தோஷமாயிருக்கும்."

"ஓஹோ இப்ப சந்தோஷமில்லையா? ஏண்டி நாடகமாடிக் காட்டிறாய்? உன்ரை பழைய லவ்வும் உன்ரை நெஞ்சுக்குள்ளை இருக்கிறவனையும் நான் கேள்விப்படேல்லை எண்டா நினைச்சாய்? அவன் நல்லாயிருக்கோணும் எண்டு கும்பிடப் போறியா? உன்ரை கடவுள் நான்தானே? பிறகேன் கோயில்? விட்டால் என்னமாய் நடிக்கிறாய். ஏதோ ஏகபத்தினி தோற்ற மாதிரி.... கொப்பா தந்த பத்துஇலட்சம் உன்ரை பழைய லவ்வை விடப் பெரிசா இருந்தபடியால் கலியாணத்துக்கு ஒத்துக்கொண்டன். ஆனால் நானும் மனுசன்தானே? ஆரையோ மனதிலை வைச்சிருக்கிறவளோடை எப்பிடியடி சந்தோஷமாயிருக்கிறது? இன்னும் ஒரு பத்து இலட்சம் வேண்டித் தந்தால் கொஞ்சம் காலத்துக்கு சந்தோஷமாயிருக்க முயற்சி பண்ணலாம். என்னமாய் இந்தக் கண்ணீர் அருவிமாதிரிக் கொட்டுது..." இதயத்தில் இரக்கமில்லாமல் ஆணி அடித்துக் கொண்டிருந்த அவள் கணவனின் குரலையும் மீறி வெளியே தொப்பென்று ஒரு சத்தம் பலமாகக் கேட்டது.

வனிதா பதற்றமாக ஓடினாள்.

கந்தசாமிதான் எதேச்சையாகக் கேட்ட பேச்சுவார்த்தையில், அடியற்ற மரமாக விழுந்து கிடந்தார்.

# பயம்

ஆபீஸ் விட்டு கிளம்பும் போதே ரகு கவலைக்குள்ளானான். இன்று வீட்டில் என்ன பூகம்பம் வெடிக்கப் போகிறதோ! எந்த பொருள் உடையப் போகிறதோ?

அருணுக்கு டிரஸ், வாங்கிட்டு வரச் சொல்லி மாலினியும் விடாமல் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறாள். ஆனால் ரகுதான் அவள் வார்த்தையை நிறைவேற்றவில்லை.

இவன் உள்ளே நுழைந்ததுமே மாலினி ஒருவித எதிர்பார்ப்போடு நின்றிருந்தாள்.



**தேவராஜ்**

ரகுவுக்கு அவளை ஏறிட்டு பார்க்கவே பயமாய் இருந்தது.

"ஏங்க டிரஸ் வாங்கிட்டு வந்தீங்களா...?

"அது... வந்து மாலினி... இன்னிக்கு ஆபீஸ்ல நிறைய வேலை கடைக்கே போக முடியல நாளைக்கு கண்டிப்பா....."

ரகு முடிக்கக்கூட இல்லை.

மேசை மீதிருந்த பூக்குவளை கீழே உருண்டு சிதறியது.

அடுத்து... அவள் கையில் கிடைக்கும் பொருள்... நிச்சயம் தன் தலையை குறி வைத்துதான் வரும் என்பதை உணர்ந்த ரகு வெளியில் ஓடி வந்து அவசரமாய் கதவை தாழிட்டுக் கொண்டான்.

சன்னல் வழியே பார்த்தான். மாலினி ஆக்ரோசமாய் கத்திக் கொண்டிருந்தாள்.

செல்லமாய் வளர்த்த ஒரே அன்பு மகன் அருண் இறந்து போனதில் இருந்து மாலினி பைத்தியமாகி அருண் உயிரோடு இருப்பதாய் நினைத்து... தினமும் இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணுவது வாடிக்கையாகி விட்டது.

ரகு கவலையோடு நின்றுக்கொண்டிருந்தான்.

# குஷ்பு மாதிரி

"இந்தப் பொண்ணாவது உனக்கு பிடிச்சிருக்குதாடா?" வழக்கமாக கேட்கும் அதே கவலையோடு கேட்டாள் அம்மா.

பதிலுக்கு சிரித்தான் கணேஷ்.

"சிரிச்சா என்னடா அர்த்தம்? பொண்ணு பிடிச்சிருக்கா?"

"எனக்குப் பிடிக்கலே..."

"பார்க்க ரதி மாதிரி இலட்சணமா இருந்தாளேடா...?"

"இருந்தா என்ன? குஷ்பு மாதிரி இல்லையே? குண்டு மூஞ்சி, குண்டு குண்டாய் கன்னங்கள்... ம்ஹூம் குஷ்பு மாதிரி ஒண்ணு கூட அவகிட்ட இல்லையே!"

"பாழாப் போச்சு. இந்த ஜென்மத்துல உனக்கு கல்யாணம் ஆகாதுடா... ஏற்கனவே முப்பது வயசு நடக்குது."

"நாப்பது வயசே ஆனாலும் குஷ்பு மாதிரி ஒரு பொண்ணு கெடைச்சாத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்!"

"எக்கேடோ கெட்டுப் போ. போ.. போய் அந்த குஷ்புவோ கிஷ்புவோ அவளையே கட்டிக்க போ!" அம்மாவின் கோபத்தைப் பார்த்து சிரித்தான் கணேஷ்.

"அண்ணா ரெடியா? போலாமா?" காலேஜுக்கு கிளம்பி மாடியில் இருந்து இறங்கி வந்தாள் கோமதி.

"என்னண்ணா அம்மாகூட சண்டை?"

"எல்லாம் குஷ்புதான்!"

"கவலையை விடுண்ணா. குஷ்பு ரசிகனான உனக்கு அழகா ஒரு பொண்ணு பார்த்திருக்கேன். என்கூடதான் படிக்கறா. பார்க்க குஷ்பு மாதிரியே இருப்பா. பேர்கூட குஷ்புதான்!"

"வாவ்!" மகிழ்ச்சியில் துள்ளினான் கணேஷ்.

"கோமதி அந்த பொண்ணு வீடு எங்கே இருக்குன்னு கேட்டுட்டு வாம்மா... பொண்ணு பாத்துரலாம்!" அம்மாவுக்கும் சந்தோஷமாக இருந்தது.

பெண்ணை பார்த்த மாத்திரத்திலேயே பிடித்துப்போய் விட்டது கணேசுக்கு. அச்சாக குஷ்பு சாயலிலேயே இருந்தாள். அதே குண்டு முகம். குண்டு குண்டாய் கன்னங்கள். அதே சிகப்பு....

"அம்மா எனக்கு பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு. வரதட்சணை ஒரு பைசாகூட வேண்டாம். கல்யாணத்துக்கு நாள் குறிச்சிடுங்க!"



மறுநாள் காலேஜ் போய் வந்த கோமதியிடம் ஆவலை அடக்க மாட்டாமல் கணேஷ், "குஷ்பு என்ன சொன்னா? என்னை பிடிச் சிருக்காமா?"

"ஸாரிண்ணா, உன்னை

**ஈஸ்வர்**

மாதிரிதான் அவளும் ஒரு கமல் ரசிகை. அவ கட்டிக்கப் போறவன் கமல் மாதிரியே நல்ல உயரமா சிகப்பா... கவர்ச்சியான மூஞ்சி வேணுமாம்... கமல் மாதிரி நீ இல்லாததால உன்னை ரிஜக்ட் பண்ணிட்டா!"

எலக்ட்ரிக் ஷாக் கொடுத்தது மாதிரி இருந்தது கணேசுக்கு.

# நீயின்றி நானில்லை



**புகழேந்தி**

மண்டபம் களை கட்டியிருந்தது.

அது மஞ்சுவின் கல்யாணம்.

மணவறையில் மாப்பிள்ளை பிரகாஷ், உட்கார்ந்திருக்க, அவனிடம் ஐயர் ஏதேதோ செய்யச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த மஞ்சுவிற்கு முகத்தில் சந்தோஷமிருப்பதாய் தெரிந்தாலும் உண்மையில் சந்தோஷமில்லை! அவளின் நினைவு முழுவதும் ரமேஷ் மீது தானிருந்தது.

ரமேஷும் அவளும் அன்று கடைசியாய் அந்த ஹொட்டலின் மெல்லிய வெளிச்சத்தில் பேசிக்கொண்டது மீண்டும் மீண்டும் நினைவில் வந்து போனது.

"ரமேஷ் கடைசி வரைக்கும் என்னால எதுவும் செய்ய முடியல. எல்லாருக்கும் பத்திரிகைகூட குடுத்துட்டாங்க. நீங்க இல்லாத வாழ்க்கையை என்னால நெனச்சுக்கூட பாக்க முடியல."

"மஞ்சு உனக்கு இருக்கற அதே நிலமதான் எனக்கும், ஆனா ஒண்ணுமட்டும் நிச்சயம். நீ எனக்கு இல்லங்கறது முடிவாயிடுச்சுன்னா நிச்சயமா நான் உயிரோட இருக்க மாட்டேன்."

மஞ்சுவிற்கு நினைவு கலைய மணவறையில் உச்ச கட்டமாய் தாலிகட்டும் நிகழ்ச்சி நெருங்கிக் கொண்டிருந்தது.

அன்று ஹொட்டலில் சந்தித்த பிறகு ஒரு நாள் மஞ்சுவும், ரமேஷும் ஓடிப்போக திட்டமிட்டது தெரிந்து மஞ்சுவின் அப்பா தனக்கு நெருங்கிய இன்ஸ்பெக்டரிடம் இரகசியமாய் சொல்லி வேறு ஒரு குற்றத்தைக் காட்டி ரமேஷை உள்ளே தள்ளிவிட, கடைசியில் இப்போது மஞ்சு ஒரு திட்டத்தோடு மணவறையில் உட்கார்ந்திருந்தாள்.

'திருமணம் முடிந்து இரவு தனியறைக்குள் நுழையும் போது எப்படியும் அந்த விஷத்தைச் சாப்பிட்டு விடுவது என்ற முடிவோடு-' அதை பத்திரமாய் வைத்திருந்தாள்.

ஐயர் சத்தமாய் 'கெட்டிமேளம்.. கெட்டிமேளம்... என்று சொல்லிவிட்டு மாங்கல்யம் தந்துனானே...' என்றவாறு தாலியை எடுத்து மாப்பிள்ளையிடம் கொடுக்க, அதை வாங்காமலேயே அப்படியே சாய்ந்து போனான் மாப்பிள்ளை பிரகாஷ்.

அனைவரும் அதிர்ச்சியடைந்து உடனடியாக டாக்டர் வந்து பார்த்துவிட்டு உதடு பிதுக்க, எல்லோரும் அழத் துவங்கியிருந்தார்கள்.

அப்போதுதான் மஞ்சுவின் பார்வையில் அந்தக் கடிதம் பட்டது. எடுத்துப் பிரித்தாள்.

"அப்பாவிற்கும், அம்மாவிற்கும்,

எனக்கு விருப்பமான பெண்ணை தட்டிக் கழித்துவிட்டு விருப்பமில்லாதப் பெண்ணை கட்டாயப்படுத்தி கட்டி வைக்க முயற்சி செய்தீர்கள். உங்கள் வார்த்தையை மீறத் தெரியாத நான் வேறு வழியின்றி இந்தப்பந்தலில் உட்கார்ந்திருக்கிறேன். என் காதலைக் கொன்ற உங்களுக்குத் தண்டனை தர முடியாததால் என்னை நானே கொன்று தண்டனைப் பெற்றுக் கொள்கிறேன்! இனியேனும் உண்மையான காதலை வாழ வையுங்கள்!"

தங்களின் மகன்
பிரகாஷ்.

மஞ்சுவின் கண்களில் பிரகாஷைப் பார்க்க பார்க்க ரமேஷின் நினைவு அதிகமாகி அருவியாய் நீர் பெருகியது.

கடிதத்தைப் படித்த மஞ்சுவின் அப்பா ரமேஷை அழைத்துவர வேகமாய்ப் புறப்பட்டார் பொலிஸ் ஸ்டேசனை நோக்கி.

# மாலா

நிறைமாத கர்ப்பிணியாய் வந்து நின்ற பஸ்ஸில் ஏறி தன்னை திணித்துக் கொண்டாள் மாலா. கையிலிருந்த இரண்டு வருட ரம்யாவுக்காக ஒரு வாலிபன் எழுந்துகொள்ள, மாலா உட்கார்ந்து கொண்டாள். 'ச்சே... என்ன ஒரு கூட்டம்..! இந்த ஜனத்தொகை எப்பத்தான் குறையுமோ...' அலுத்தபடியே பெருமூச்சு விட்டாள்.

"அம்மா... இன்னொரு பஸ்..."

எதிர்பக்கம் போன பஸ்ஸை பார்த்து குதூகலித்தது குழந்தை.

மாலா ரோட்டை வெறித்தாள்.

டிரைவர், ஒரு திருப்பத்தில் 'ஹார்ன்' அடிக்கவும், குழந்தையும்..."பீப்பீ..." என்று அதேபோல், கத்த, சுற்றி நின்றவர்கள் கொலலென்று சிரித்தனர்.



மாலதி எந்தவித ரியாக்ஷனும் இல்லாமல் பேசாமல் இருந்தாள்.

"மம்மி... இப்ப நம்ப யார் வீட்டுக்குப் போறோம்...?"

குழந்தை கேட்டது.

மாலா பதில் சொல்லாமல் ரம்யாவை இறுக்கி மடியில் வைத்துக்கொண்டாள்.

"சொல்லு மம்மி... நாம தாத்தா வீட்டுக்கா போறோம்..?" குழந்தை ஆர்வமாய் கேட்டது.

ஆனால் மாலா பதிலே சொல்லவில்லை. பக்கத்தில் இருந்த பெண்மணி, "ஏம்மா குழந்தை ரொம்ப ஆர்வமாய் கேக்குது இல்ல... பதில் சொல்லேம்மா." என்றாள்.

**எஸ். பாலமுருகன்**

மாலா அவளை திரும்பி ஒரு பார்வை பார்த்தாள். அதில் ஆயிரம் பொருள் இருந்தது.

கேட்ட பெண்மணியோ, நமக்கு எதுக்கு வம்பு என்று அதற்குமேல் எதுவும் பேசவில்லை.

பாவம்.... மாலா ஊமை என்றோ... அவளால் பேசமுடியாது என்றோ அந்தப் பெண்மணிக்கும் தெரியாது. குழந்தைக்கும் போதிய ஞானம் இல்லை.

www.padippakam.com




தருவது

## ரசிகன்

"வானம் என் வசம்
வையகம் என் வசம்
காலம் என் வசம்
யாவும் என் வசம்"

ரோம் மன்னன்
நீரோ கர்வத்தில்
கர்ஜித்தான்!

மது அவன் கண்களை
சிவப்பேற்றியிருந்தது!
மாது அவன் கைகளில்
சிறைப்பட்டிருந்தாள்!

மதுவில் குளிப்பது
மங்கையில் மிதப்பது
நீரோவுக்கு பிடித்தது!

பிடில் இசைப்பதும்
பிடிக்கும்!
பிடிலாய் பெண்ணை
ரசிப்பதும் பிடிக்கும்!

பிடிலின் தந்திகளை
வருடத் தெரிந்தவனுக்கு
பெண்ணின் நரம்புகளை
வருடவும் பிரியம்!

பாவித்து முடித்த
மதுப்புட்டிகளை எறிவான்
பாவனை முடிந்ததும்
மங்கையரை எரிப்பான்!

"நீரோ தொட்ட
மேனியை-வேறு
யாரும் தொடக்கூடாது!"

கொளுத்தும் கொடூரத்துக்கு
நீரோ சொன்ன
காரணம் அது!

எழிலரசிகள் பலர்
நீரோவால் முகரப்பட்டு
தீயில் எரிந்துபோயினர்!

பூக்களை கொய்து
தீயில் எறிவது
வக்கிரத்தின் உச்சம்!

இப்போதும் ஒருத்தி
அவன் கையில்
எப்போது சாவது
என்று தெரியாமல்!

தேன் எடுத்து
அவள் இதழில்
பூசினான்!

பின் தன் உதடுகளால்
அவள் இதழை ருசித்தான்!

"தேனும் தேனும்
கலந்தால் தித்திக்கும்
நீயும் நானும் கலந்தால்
இன்பம் சித்திக்கும்!"
என்று உளறினான்.

அவள் ஒப்புக்காக
சிரித்தாள்!
உள்ளே சோகத்தில்
வெடித்தாள்!

தன் நாவினால்
அவள் இதழ்களை தீண்டி
தேன் முழுதையும் துடைத்தான்!

"நாடுகள் என் பிடியில்
நங்கைகள் என் மடியில்
திசையெங்கும் என் கொடி
இசைக்கட்டும் என் பிடில்!"

பிடிலை எடுத்து
தந்தி மீட்டினான்!

"நீரோ மன்னன்
பெயர் கேட்டால்
யார்தான் நடுங்கார்
பூமியில்?

எங்கு நோக்கினும்
ரோம் கொடி!
எங்கு பார்க்கினும்
ரோம் படை!

எங்கு காண்கினும்
ரோம் வீரம்!

சிந்து பாடடி குயிலே
பந்து தனங்கள் குலுங்க
வந்து ஆடடி மயிலே!

மதுவில் குளியடி
தேனில் ஊறடி
தேவை தீர்ந்ததும்
தீயில் குளியடி!"

நீரோ பாடியதின்
கடைசிவரிகள்
அவள் இதயத்தில்
கத்தியாய் பாய்ந்தன!

பிடிலை வைத்துவிட்டு
அவளைப் பிடித்தான்!
இடையை அளவெடுத்தான்
தடைகளை அகற்றினான்!

மிருகம் ஒன்று
பசியாறியது!
பறவை ஒன்று
விருந்தானது!

தித்தித்த பின்னர்
திட்டமிட்டபடியே
தீயில் எறிந்தான்!

தொடர் கொடூரம்
இது!
நிறுத்துவார்
யார் உளர்?

இருந்தாள் ஒருத்தி
அவள் பெயர் நதீனா!
குளிர்ந்த பெயர்!

கண்டதும் காந்தமாக
நீரோவை இழுத்தாள்!

"ஆயிரம் மேனியரை
அணைத்திருக்கிறேன்!
ஆனந்த சுகம் என
நினைத்திருக்கிறேன்!

பால் நிலா முகம்
பல கண்டிருக்கிறேன்!
வாள் முனை விழி
பல பார்த்திருக்கிறேன்!

அதே நான்தான்
அடித்துக் கூறுகிறேன்
நீதான் அழகி
நிலாவை ஜெயிக்கும்
கோலப் பேரழகி!"

நீரோவுக்கு
காதலியானாள் நதீனா

காதலி கிடைத்தபின்னும்
களியாட்டத்தை நிறுத்தவில்லை!
இரவுகள் தோறும்
ஒருத்தி எரிந்தாள்!

"பந்தாடுவேன்-உங்கள்
பந்தில் ஆடுவேன்
பந்தமாக்குவேன்-உங்களை
பஸ்பமாக்குவேன்!"
என்று நகைத்தான்.

அளவுக்கு மீறினால்
அமுதமும் நஞ்சு!

### இலக்கிய நயம்

வரைமுறை மீறிய
ஆணவமும் நஞ்சு!

நஞ்சை அவன்
உண்டான்!
நஞ்சு அவனை
உண்டது!

திடீரென்று ஒருநாள்
நீரோ மன்னனுக்கு
முழுப் பைத்தியம்!

"மூட்டுக தீயை
எரியட்டும் ரோம்!"
என்று உளறினான்!

மன்னனின் உளறலும்
உத்தரவன்றோ!

படைகள் தீ
மூட்டினர்.
ரோம் எரிந்து
நீறாகிக்கொண்டிருந்தது!

"தீ..தீ..தீ
திக்கெட்டும் தீ!

தீயே அழகு
தீயே அமுது!"

நீரோ மகிழ்ந்து
பிடில் வாசித்தான்!

பொறுமைக்கும்
எல்லையுண்டு
கட்டுண்டு கிடந்தவர்
முட்டிட எழுந்தனர்!

"நீரோ ஒழிக!
நீரோவே ஒழிப்போம்!"

மக்கள் படை
மன்னனை தேடி
மடைதிறந்த வெள்ளமாய்
கொந்தளித்து வந்தது!

வெளியே கூச்சல்
மன்னனோ மேய்ச்சலில்!

பிடிலை ஒரு கரத்தாலும்
நதீனாவை மறுகரத்தாலும்
மீட்டிக் கொண்டிருந்தான்!

நதீனா நிதானமாக
எழுந்தாள்!

அவன் கழுத்தை
வளைத்து
உதட்டை கவ்வி
விலகினாள்!

"இதுதான் இறுதி
முத்தம்!
இனிச் சிந்தப்போவது
இரத்தம்!" என்றாள்

"என்ன கூறுகிறாய்
என் நிலாவே?"
என்றான் மன்னன்.

"நீ நல்ல கலைஞன்
என்று நினைத்தேன்!

நீ ஒரு கொலைஞன்
என்று அறிந்தேன்!

குடி மக்களை இழந்தாய்
தேடிய பொருள் இழந்தாய்
நாடிய சுகம் இழந்தாய்
கொடுங்கோல் ஏந்தினாய்
நெடும் புகழ் இழந்தாய்!

என் கரம் தழுவிய
மேனியை
பல கரம் தீண்டி
கொல்வது சகியேன்!

என் கரம் கொண்டு
தண்டனை தருவேன்!

கடாரியை எடுத்து
நீரோவின் மார்புக்கு
நேராக எறிந்தாள்!

கொடூர மன்னன்
குருதியில் நீந்தினான்!

எங்கே கொலைஞன்?
மக்கள்படை
உள்ளே புகுந்தது!
நதீனாவின் இதழ்களில்
சோகப் புன்னகை!

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் —கோல்கோடிச்
சூழாது செய்யும் அரச

அதிகாரம்: 56. குறள்:554.

ஸ்போர்ட்ஸ்

## 300வது போட்டி
## அஸார் அசத்தல்



டாக்காவில் நடந்த மினி உலகக் கோப்பையில் அவுஸ்திரேலிய அணியுடன் விளையாடிய போட்டி அஸாருதீனின் 300வது ஒருநாள் போட்டியாகும். ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் உலகில் 300 போட்டிகளில் விளையாடிய முதல் வீரரும் இவர் தான். இது ஓர் உலகசாதனை.

1975ம் ஆண்டில் இருந்து மினி உலகக் கோப்பையின் முதல் போட்டிவரை இந்தியா இதுவரை 379 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளது. இதில் அஸாருதீன் 300 போட்டிகளில் விளையாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமன்றி ஒருநாள் போட்டிகளில் அஸாருதீன் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். நியூஸிலாந்து அணிக்கெதிராக இவர் 62 பந்துகளில் சதம் அடித்துச் சாதனை புரிந்தார். இந்தச் சாதனை பின்னர் இலங்கை வீரர் சனத் ஜெயசூரியாவினால் 48பந்துகளில் சதம் அடித்ததன்மூலம் முறியடிக்கப்பட்டது. இதன் பின் பாகிஸ்தானின் ஷஹீட் அஃப்றிடி மூலம் 37 பந்துகளில் சதம் அடிக்கப்பட்டு ஜெயசூரியாவின் சாதனையும் முறியடிக்கப்பட்டது.

300 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள அஸார் இதுவரை 8554 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இன்னும் 95 ஓட்டங்களைச் சேர்த்தால் மேற்கிந்தியத்தீவு வீரர் டெஸ்மண்ட் ஹெயின்ஸின் உலக சாதனை எண்ணிக்கையான 8648 ஓட்டங்களைத் தாண்டி உலக சாதனை படைத்துவிடுவார்.

இதேபோல் ஒருநாள் போட்டிகளில் அஸாருதீன் இதுவரை 29 முறை ரன்-அவுட் ஆகியிருக்கிறார். 145 கேட்ச் பிடித்துள்ளார். 50 முறை ஆட்டமிழக்காமல் இருந்துள்ளார். இவையெல்லாம் உலக சாதனைகளே.

ஸிம்பாப்வே அணிக்கெதிராக நடைபெற்ற போட்டியில் அஜய் ஜடேஜாவுடன் ஜோடி சேர்ந்து 275 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் இணைப்பாட்டமாகப் பெற்று உலக சாதனை படைத்துள்ளார் அஸார்.

ஒருநாள் போட்டிகளில் பெரிய இலக்கைத் தாண்டி வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளதும் இந்திய அணிதான். இந்த உலக சாதனை அஸார் தலைமையில் டாக்காவில் நடைபெற்ற பங்களாதேஷ் சுதந்திரக் கிண்ணப்போட்டியின்போது நிகழ்த்தப்பட்டது. 314 ஓட்டங்களைக் குவித்த பாகிஸ்தான் அணிக்குப் பதில் கொடுத்து 316 ஓட்டங்களை அடித்து சாதனை படைத்தது இந்தியா.

35 வயதான அஸாருதீன் 1983-84ல் தனது முதல் ஒருநாள் போட்டியை இங்கிலாந்துக்கெதிராக பெங்களூரில் ஆரம்பித்தவர். தென் இந்திய மாநிலமான ஆந்திராவின் தலைநகர் ஹைதராபாத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அஸார்.

## இந்திய—பாக் மோதல்

இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே கடந்த சில வருடங்களாக டெஸ்ட் போட்டிகள் நடக்கவில்லை. இவ்விரு அணிகளுக்கிடையே டெஸ்ட் போட்டிகளை நடத்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் முடிவு செய்துள்ளன.

இதன்படி பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த வருடம் ஜனவரி மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது.

12 வருடங்களுக்குப் பின் இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் அணியும் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே முஸ்லிம்களை எதிர்க்கும் சிவசேனா அமைப்பின் தலைவர் பால் தாக்கரே, "பாகிஸ்தான் அணியை இந்தியாவிற்குள் வர விடக்கூடாது. அவர்களை இந்தியாவிற்குள் நுழைய விடமாட்டோம்." என்று கூறியுள்ளார்.

ஆனால் இதைப் பற்றிக் கவலைப்படாமல் இந்தியாவுடன் டெஸ்ட்போட்டிகளில் பங்கேற்க பாகிஸ்தான் அணியினர் தயாராக உள்ளனர். இதுபற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் காலிட் அகமட் கூறும்போது:

"இரு நாட்டுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் கிரிக்கெட் ஆட்டங்கள் உள்ளன. கிரிக்கெட்டுடன் அரசியலைக் கலக்கக்கூடாது!" என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுபற்றி அவர் கூறும்போது,

"இந்தியாவுக்குச் செல்லும் பாகிஸ்தான் வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க இந்திய கிரிக்கெட் சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!" என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சிந்தியா பதில்கள்

★ செம்மணியைத் தோண்ட விரைவான நடவடிக்கை என்று ஜனாதிபதி கூறியதாக செய்தி வருகிறது. தோண்ட இது தக்க சமயமல்ல என்று சட்டமா அதிபர் கூறியதாகச் செய்தி வருகிறது, நாம் யாரை நம்புவது?

இ. பாலகுகன், கொழும்பு-10.

யாரையும் நம்பவேண்டாம்; வரலாற்று அனுபவத்தை நம்புங்கள்! உரிய நீதி கிடைக்கப்போவதில்லை!



'புதுமைப்பித்தன்' படத்தில் பார்த்திபன்—ப்ரியா ராமன்

★ பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கு யாழில் இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

ஜெ. அபிராமி, வவுனியா.

நடவடிக்கை என்பது பத்தில் ஒன்றுக்கு மட்டும்! அதுவும் தீர்ப்புக் கிட்டும்வரை போகுமா என்பது சந்தேகமே! பரபரப்பு காண்பித்துவிட்டு மெல்ல அமுக்கப்பட்டவை அதிகம்!

★ தென்னாபிரிக்காவில் புலிகளைத் தடை செய்யுமாறு இலங்கை அரசு ஒற்றைக்காலில் நிற்கிறதே, ஏன்?

பி. வாஹிட், முந்தல்.

இராஜதந்திரியாரின் அரசியல் அலசலை படியுங்கள்- புரியும்!

★ அவசியப்படும்போது பொய்யும் பேசலாம் என்கிறாரே திருவள்ளுவர் இது சரியா?

செல்வி இ.எஸ். ஜெயந்தி, கல்லாறு.

அமெரிக்காவில் ஓர் அப்பாவிமீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது. பொலிஸ் மிரட்டலுக்குப் பயந்து எந்தச் சட்டத்தரணியும் அவனுக்காக வாதாட முன்வரவில்லை.

ஜோசப் சொயட் என்னும் வக்கீல் அவனைச் சந்தித்து, "நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை; இனிமேல் நீ எக்காரணம் கொண்டும் உண்மை பேசக்கூடாது. யார் என்ன கேட்டாலும் பொய்தான் பேசவேண்டும், சம்மதமா?" என்று கேட்டார்.

அப்பாவியும் சம்மதித்தான். வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தது. என்ன கேள்வி கேட்டாலும் அப்பாவி முன்னுக்குப் பின் முரணாக கண்டபடி பொய் சொல்லத் தொடங்கினான்.

பின்னர் ஜோசப் சொயட் வாதாடும் போது: "இவன் ஒரு வார்த்தைகூட உண்மை பேசவில்லை. சொன்னதெல்லாம் பொய் தான். அப்படியிருக்க அவன் எழுதிக் கொடுத்த வாக்குமூலம் மட்டும் எப்படி உண்மையாக இருக்கமுடியும்?" என்று கேட்டார். நீதிபதியும் அவனை நிரபராதி என்று விடுதலை செய்தார்.

★ சிந்தியா! தலைமுடியைப் பிய்த்துக் கொள்வது மாதிரி ஒரு கதை தாருங்கள்.

எம். டேவிட், இலண்டன்.

இந்தியாவில் பிரபலமான ஜோக் கதை.

இரண்டு பஞ்சாபியர்கள் கண்ணாடி டம்ளர் வாங்கக் கடைக்குப் போனார்கள். கடையில் கண்ணாடி டம்ளர்களை தலைகீழாகக் கவிழ்த்து வைத்திருந்தார்கள். அதைப் பார்த்ததும் ஒரு பஞ்சாபியர் குழப்பத்தோடு கேட்டார்:

"என்ன இது? டம்ளரின் மேல்பகுதி மூடப்பட்டிருக்கிறதே. இதில் எப்படித் தண்ணீரை ஊற்றுவது?"

அதற்கு இன்னொரு பஞ்சாபியர்:

"மேல் பகுதியில் நாம் ஓட்டை போட்டுக் கொள்ள வேண்டியதுதான்!" என்றார்.

உடனே முதலாவது பஞ்சாபியர்: "அட முட்டாளே! டம்ளரின் கீழ்ப்பகுதி திறந்திருக்கிறதே. மேலே ஓட்டை போட்டு ஊற்றினால் தண்ணீர் எப்படி டம்ளரில் தங்கும்? வேறு ஏதாவது யோசனை சொல்!" என்று கூற, கடைக்காரர் தலைமுடியை பிய்த்துக் கொண்டாராம்.

★ 'வள்ளி' பட கதாநாயகி ப்ரியா ராமன் கவர்ச்சி நடிகையாகி விட்டாரே?

எஸ். பிரேம், நுவரெலியா.

ஃப்ரீயாக நடிக்க விரும்புகிறார் ப்ரியா ராமன்.

★ சிந்தியா! நல்லதைச் சொன்னால் சிலருக்குக் கசப்பாக இருக்கிறதே?

எ.ஃப். ஜுனைதீன், மாத்தளை.

அரேபியப் பழமொழி ஒன்று என்ன கூறுகிறது தெரியுமா ஜுனைதீன்?

"உண்மை என்ற பாணத்தை விடுமுன் அதன் முனையை தேனிலே தோய்த்துக்கொள்!"

★ மினி உலகக் கிண்ணத்தை இலங்கை தவற விட்டதற்குக் காரணம் காலநிலை என்பது சரியா?

வி. ரம்ஸியா, மருதானை.

அதே காலநிலையில்தான் தென் ஆபிரிக்காவும் விளையாடியது! தோல்வியோ வெற்றியோ மழுப்பல் இல்லாமல் ஏற்பதே மரியாதை! தென் ஆபிரிக்க அணி சிக்சர்களாகத் தூக்கிப்போட்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியன்றோ!

★ சிந்தியா! உங்களைக் கவர்ந்த எழுத்தாளர் யார்?

ஆர். ரவீந்திரன், மட்டக்களப்பு.

மார்க்சிம் கோர்க்கி.

★ மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியில் முன்னேற்றம் தெரிகிறதல்லவா?

அ. சுரேஸ்குமார், கொழும்பு-09.

நிச்சயமாக!

லாரா தளபதியானபின்னர் தளர்வு போயேபோச்சு! லாரா தலைமை தாங்கி 7 போட்டிகளில் ஆறில் வெற்றி என்றால் சும்மாவா!

★ மட்டக்களப்பில் புலிகள் மின்சாரத்தைத் தடுப்பது சரிதானா சிந்தியா?

எஸ். கலா, மட்டக்களப்பு.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மட்டும் வழங்கப்படும் வசதிகளை, தமது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி மக்களுக்கு வீசும் ஆசை வலையாக அரசு பயன்படுத்தும் போது, அதற்கெதிராகப் புலிகளும் நடவடிக்கை எடுக்கிறார்கள். புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வழங்குவதாகக் கூறப்பட்ட மின்சாரத்தை வழங்காமல் இழுத்தடித்ததும் புலிகளது சந்தேகத்தை அதிகப்படுத்தியதாகத் தகவல்.

உணவு, மின்சாரம் மற்றும் போக்குவரத்து என்பவை ஒரு தரப்பால் ஆயுதங்களாக மாற்றப்படும்போது மறுதரப்பும் பதிலடியில் இறங்குவது போரில் தவிர்க்க முடியாததுதானே? இருதரப்பும் இவ்விடயங்களில் ஒரு நல்ல உடன்பாட்டுக்கு வருவதற்கு ஐ.சி.ஆர்.சி., யூ.என்.எச்.சி.ஆர். போன்றவை உதவவேண்டும்!

★ பிஞ்சிலேயே பழுப்பது என்றால் என்ன?

வெ. சிகாமணி, திருமலை.

தனது மகனுடைய 18வது பிறந்தநாள் அன்று மகனுக்கு ஆலோசனை கூறினார் அப்பா.

"மகனே! நீ சிகரெட் பிடித்தாலும் சரி, குடித்தாலும் சரி, சொல்லிவிட்டு செய். மற்றவர்கள் வந்து 'உன் மகன் சிகரெட் பிடிப்பதைப் பார்த்தேன், குடிப்பதைப் பார்த்தேன்.' என்று கூறினால் எனக்குத்தான் கேவலம்" என்று கூறினார்.

உடனே மகன் அதற்கு, "அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்! நான் அந்தப் பழக்கத்தையெல்லாம் விட்டு மூன்று வருடமாகிறது." என்று அலட்சியமாகக் கூறினான்.



'படையப்பா'வில் ரஜினி

★ ரஜினியின் 'படையப்பா' எப்போது சூட்டிங்கப்பா?

சி. குமார், நீர்கொழும்பு.

துவங்கியாச்சப்பா! வருதப்பா! வருதப்பா படையப்பா வருதப்பா! சிவாஜியும் நடிக்கக் கிளம்பியாச்சப்பா!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 34

ஆண்டவருடைய அருட்கடாட்சம் பெற்றவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள்.

வயது குறைந்தவரும் உருவத்தில் சிறியவருமாக இருந்த தாவீதின் மன உறுதி மன்னன் சவுலையே வியப்படைய வைத்ததில் ஆச்சரியமில்லை. தீயசக்தியால் தான் ஆட் கொள்ளப்படும் போதெல்லாம் யாழெடுத்து மீட்டித் தன்னை ஆறுதலடையச் செய்த இந்த இளைஞன் தெய்வீக சக்தி படைத்தவனாகத்தான் இருக்க வேண்டும் என்று சவுல் கருதினார்.

இளமைப் பருவத்திலிருந்தே போர்ப் பயிற்சி பெற்றவன் கோலியாத்து. பெலிஸ்தியப் படையில் சேர்ந்து பல போர்க்களங்களையும் கண்டவன். தவிர அவன் இராக்கதன் போன்ற

## மக்களின் மகிழ்ச்சி.... மன்னரின் மருட்சி...



தோற்றத்தைக் கொண்டவன். போர்வீரனுக்குரிய அணிகளைப் பூண்டதுடன் மிகக் கூர்மையான- நெடிய வாள் ஒன்றும் அவன் கையில் இருந்தது. அவனுடைய பிரமாண்டமான தோற்றத்தையும் இடியேறு போன்ற கர்ஜனையையும் கண்டும் கேட்டும் இஸ்ரயேல் படைவீரர்கள் நாலாதிக்கும் சிதறியோடினர். ஆனால் தாவீதோ, "அந்தப் பெலிஸ்திய வீரனை வீழ்த்துவேன்!" என்று திடமாகக் கூறுகிறார்.

பெலிஸ்திய வீரனான கோலியாத்தை வீழ்த்துகின்றவனுக்கு வெகுமதிகள் பல தருவதாக மன்னன் சவுல் அறிவித்திருந்தார். தனது மகளை மணம் முடித்துக்கொடுப்பதுடன், அவர் தம் குடும்பத்தாருக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பதாகவும் வாக்களித்திருந்தார் மன்னன்.

இளவீரனாகத் தன்முன் நின்றிருந்த தாவீதுக்கு போர் வீரனுக்குரிய அணிகளை அணிவிக்கும்படி ஏவலாளர்களை மன்னன் சவுல் பணித்தார். அந்த அணிகளை அணிந்தார் தாவீது. வாள் ஒன்றையும் கொடுத்தார்கள். இவையெல்லாம் இளைஞனான தாவீதுக்குப் பழக்கமில்லாதவை. அதுமட்டுமல்லாமல் உலோகத்தாலான அவ்வணிகளை அணிந்து கொண்டு தாவீதால் நடக்கவே முடியவில்லை. மிகவும் கனத்தது.

அணிகளைக் களைந்தெறிந்துவிட்டு வாளையும் ஒருபுறம் வீசிவிட்டார் தாவீது.

"இவ்வளவு கனமுள்ள அணிகளோடு காலடி எடுத்து வைக்கவே முடியாதிருக்கும் போது, என்னால் போர்க்களத்தில் எதுவுமே செய்ய முடியாது. ஆகவே இத்தகைய அணிகலன்களை நான் ஏற்க முடியாது. ஆண்டவர் என் பக்கமிருக்கிறார். ஆண்டவரின் மக்களை அழிவிலிருந்தும் இழிவிலிருந்தும் காக்க அவரே எனக்கு வழி காட்டுவார்!" என்று மன்னரை வணங்கிவிட்டுப் போர்க்களம் புகுந்தார்.

### கோலும்–கவணும்–கல்லும்

இஸ்ரயேல் படையினர் அணிவகுத்துப் பின்வர, தாவீது முன்னே தலைமை தாங்கிச் சென்றார். அவருடைய தோளில் இடையருக்குரிய ஆட்டுத்தோல் பை ஒன்று தொங்கியது. ஒரு கையில் கவணும் மறுகையில் ஒரு நெடிய கோலும் இருந்தன. நீரோடையின் படுகையில் கூழாங்கற்கள் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து தனது பையினுள் போட்டுக் கொண்டார்.

பெலிஸ்தியப் படை அணிகளின் முன் நெடிதுயர்ந்து நின்ற கோலியாத்து, தன்னை நெருங்கி ஒரு சின்னஞ்சிறு உருவம் வருவதைக் கண்டு திகைப்புற்றான். கலகலவென்று சிரித்தான். அவ்வொலி அப்பிரதேசத்தில் சூழ்ந்திருந்த மலைகளிலெல்லாம் பட்டு எதிரொலித்தது.

"என்ன...சிறுவனே...! நீயா என்னுடன் சண்டைபோட வந்தாய்? கையில் கோலுடன் வருகிறாய்! என்னை நாய் என்று கருதிவிட்டாயோ? வா... உன்னைத் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு, வன விலங்குகளுக்கும் வட்டமிடும் பறவைகளுக்கும் இரையாக்குகிறேன்!"

இவ்வாறு கர்ஜித்தான் கோலியாத்து.

தாவீது தனது குரலை உயர்த்தி, "பெலிஸ்திய வீரனே! வெறுங்கோலோடு போரிட நான் வந்திருப்பதாக ஏளனமாகக் கருதி விடாதே! நான் கர்த்தரின் மக்களைக் காப்பாற்ற வந்தவன். ஈட்டியும், வாளும் வேலும் ஏந்திப் போரிட வேண்டிய அவசியம் எனக்கில்லை. ஆண்டவரின் ஆணையுடன் உன் அட்டகாசத்தை அடக்க வந்திருக்கிறேன்!" என்று குமுறினார்.

தனது தோற் பையினுள் கைவிட்டு ஒரு கல்லை எடுத்து கவணில் வைத்துச் சுழற்றி, கோலியாத்தின் நெற்றிப்பொட்டைக் குறி வைத்து வீசினார். அக்கல் சரியாக கோலியாத்தின் நடு நெற்றியில் பலமாகத் தாக்கியது. இரத்தம் கடலாகப் பெருக்கெடுத்தோட, மலை சாய்ந்தது போல் தரையில் வீழ்ந்தான். தாவீது ஓடிச்சென்று கோலியாத்தின் வாளை உருவி எடுத்து, அவனுடைய உடலிலிருந்து தலையை வேறாகச் சீவி எடுத்தான்.

கோலியாத்து இத்தகைய பரிதாபகரமான முடிவை எய்துவான் என்று இருதரப்புப் படையினரும் கருதவில்லை. கோலியாத்து தரையில் வீழ்ந்ததும், தாவீது அவன் தலையைக் கொய்ததும் ஒரு கண நேரத்தில் நடந்து முடிந்தது. அதுவரை வெற்றிக்களிப்போடு கோஷமிட்டுக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான பெலிஸ்திய வீரர்களும் நிலைகுலைந்து சிதறி ஓடினர்.

தாவீதின் பின்னால் ஐயப்பாட்டுடனும் அச்சத்துடனும் அணிவகுத்து வந்த யூத வீரர்களும் இஸ்ரயேலிய வீரர்களும்- ஐயம் விலக்கி, அச்சம் துறந்து- தமது வாள்களை உருவிக் கொண்டு பெலிஸ்தியர்களைத் துரத்திக் கொண்டோடினர். அகப்பட்டவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தினர். ஏறத்தாழ பெலிஸ்திய வீரர்கள் பதினாயிரம்பேர்வரை அன்றைய தினம் கொல்லப்பட்டனர். தாவீது கோலியாத்தின் தலையுடன் எருசலேம் நகர் நோக்கிப் புறப்பட்டார்.

### ஆயிரமும் பதினாயிரமும்

தாவீதின் வெற்றியை மக்கள் கொண்டாடினர். போர்க்களத்திலிருந்து கோலியாத்தின் தலையோடு வந்து கொண்டிருந்த தாவீதுக்கு மக்கள் மாபெரும் வரவேற்பளித்தனர். எருசலேம் நகரின் நுழைவாயிலில் தாவீதை சவுலின் படைத்தலைவனான அப்னேர் சந்தித்து சவுல் மன்னனிடம்அழைத்துச் சென்றான். மன்னரும் வரவேற்றுப் பாராட்டினார்.

தாவீது எருசலேம் நகர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது பெண்கள் பலர் ஆடிப் பாடி வரவேற்றனர். அவர்கள் பாடிய பாட்டின் வரிகள், "மன்னன் சவுல் ஆயிரம் பேரைக் கொன்றார். வீரன் தாவீது பதினாயிரம் பேரை வீழ்த்தினார்!" என்றவாறு அமைந்திருந்தது.

சவுல் மன்னரின் காதுகளுக்கும் இத்தகவல் எட்டியது. மன்னனான தன்னை இழிவுபடுத்துவதாக அப்பாடல் அமைந்திருந்தமையினால் சவுல் பொறாமை கொண்டான். மக்களும்படைவீரர்களும்அதிகாரிகளும் தாவீதைப் புகழ்ந்து, தன் முன்னிலையிலேயே பாராட்டுவதைக் கண்டு அவனால் பொறுக்க முடியவில்லை.

இஸ்ரயேல் படைகளுக்குச் சிம்மசொப்பனமாக இருந்த பெலிஸ்தியப் படைவீரனான கோலியாத்தை மிக எளிய முறையில்- ஒரு கல்லை வீசி எறிந்து- கொன்று வீழ்த்திய ஓர் இளைஞன், மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றார். தாவீதை அரண்மனையிலேயே வைத்திருக்க வேண்டிய தவிர்க்க முடியாத காரணமும் மன்னன் சவுலுக்கு இருந்தது. சவுல் தீய ஆவியால் பீடிக்கப்படும் போதெல்லாம் அவன் நிலை குலைந்து, நிதானமிழந்து தடுமாறுவான். அப்போதெல்லாம் தாவீது யாழ் மீட்டுவார். சவுலின் நிலை அப்போது சுமுகமடையும். இதற்காகவே தாவீதைத் தன் அரண்மனையில் வைத்திருக்க வேண்டியிருந்தது.

### அச்சமும் பொறாமையும்

இதற்கிடையில் பெலிஸ்தியர்களின் ஆக்கிரமிப்புகளும் ஆங்காங்கே தலைகாட்டும். உடனடியாகவே தாவீதை படைகளுடன் செல்லுமாறு சவுல் ஆணையிடுவார். தாவீது போர்முனை சென்று வெற்றியுடன் திரும்புவார். அவரின் புகழ் மென்மேலும் ஓங்கும்.



இவ்வாறு தாவீதின் பெருமையும் புகழும் செல்வாக்கும் வளர்ந்து கொண்டு போனால் தன்னுடைய அரியணைக்கே ஆபத்து வந்துவிடுமோ என்ற பயமும் சவுலுக்கு ஏற்படத் தொடங்கியது. ஒரு கட்டத்தில்-தாவீதைத் தொலைத்துக்கட்டிவிட்டால் தொல்லையில்லை என்றும் சவுல் கருதலானார்.

இது இவ்வாறிருக்க, சவுலின் மகனான யோனத்தான் தாவீதின் இணைபிரியா நண்பனாகிவிட்டான். இருவரும் உயிர்வாழும் காலம் வரை நண்பர்களாகவே இருக்கப்போவதாக உடன்படிக்கையும் செய்துகொண்டனர். இதனை அறிந்ததும் சவுலின் அச்சம் பன்மடங்கானது. தனக்குப் பின் தன் மகனான யோனத்தானே ஆட்சி பீடமேற வேண்டும் என்று திட்டமிட்ட சவுல், தமது பதவிக்கே ஒரு சவாலாக வளர்ந்து வரும் தாவீதுடன் தன் மகன் நெருங்கி உறவாடுவதை எவ்வாறு தாங்கிக்கொள்ள முடியும்?

எப்படியாவது தாவீதைக் கொன்றுவிட வேண்டுமென்று கருதிய சவுல் மீது தீய ஆவி புகுந்து கொண்டது. தனது ஈட்டியை எடுத்து தாவீது மீது குறிவைத்து எறிந்தார். ஆனால் தேவகிருபை தாவீதின் மீது இருந்தமையினால் ஈட்டி தாவீதைத் தாக்கவில்லை. ஒரு முறையல்ல- இவ்வாறு பல தடவைகள் சவுலின் கொலை வெறியிலிருந்து தாவீது உயிர் தப்பியுள்ளார்.

மன்னன் சவுலுக்கு தான் எதுவித தீங்கும் நினைக்காதிருந்தபோதும், தன்னைக் கொல்வதற்கு மன்னர் முயற்சிப்பது ஏனென்று தெரியாமல் தாவீது தடுமாறினார்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

**திருமறை 32 விடை: யோனத்தான்**

**பரிசு பெறுவோர்:**


1. சுலோச்சனா வடிவேல், சௌதாம் தொழிற்சாலைப் பிரிவு, தெமோதரை.
2. ஆர். தினேஸ், 11/3, மாவுஸா பஜார், மடுல்கெல.
3. வி. விஜயகுமார், தேசிகர் வீதி, காரைதீவு-10 (கி.மா).
4. ஆர். லலித் குமார், ஸ்டேம் பொடில், டிக்கோயா.
5. செ. செபதீபன், 'சீயோன் பவனம்', 34/1, வெலிங்டன் அடை வீதி, திருகோணமலை.

**திருமறை 34 வினா:-** தாவீது எத்தனை பெலிஸ்தியர்களைக் கொன்றார்?

நவ. 14க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 34—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# மலை சாய்ந்து போனால்



அறிக்கைகள் கட்டுக் கட்டாக சரிந்து போனதில் தமிழ்க் கட்சி ஒன்று அதற்குள் சிக்கியுள்ளது.

தகவலறிந்து மீட்புப் படையினர் விரைந்தனர். ஆயினும் அறிக்கைமலை வெகு வெகு உயரமாக இருப்பதால், அதன் அடியில் சிக்கியுள்ள கட்சியை மீட்பது பலத்த சிரமமாக உள்ளதாக மீட்புப்படை உத்தியோகத்தர் ஒருவர் கூறுகிறார்.

ஸ்தலத்திற்கு விரைந்த நமது நிருபர் விதம் விதமான அறிக்கைகள் காணப்படுவதாகவும், அம்மாவுக்கு மகஜர், ஐயாவுக்கு மகஜர், கோரிக்கை மனு, வாக்குறுதி பட்டியல் என்று பற்பல ரகங்களில் அறிக்கைகள் குவிந்து கிடப்பதாகக் கூறுகிறார்.

இதற்கிடையே கின்னஸ் புத்தக நிறுவனத்தினருக்கும் தகவல் போயுள்ளது. உலகில் மிக அதிகமான அறிக்கைள் விட்ட கட்சி என்று உலக சாதனை புத்தகத்தில் குறிப்பிட்ட கட்சியின் பெயர் பொறிக்கப்பட உள்ளதாம்.

# பொறிப்பதை பொறுக்கோம்

அறிக்கைக் கட்டுக்கள் சரிந்து அவலமான நிலையில் உள்ள சக தமிழ்க் கட்சிக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை உரிதாக்குகிறோம்.

அதேசமயம் அக் கட்சிக்கு உலக சாதனை கிடைப்பது நியாயமற்றது.

எமது கட்சி விடுத்த அறிக்கைகள் இமயமலையை தொடக்கூடிய உயரத்தில் இருக்கின்றன.

ஆயுத கலாசாரத்தை கண்டபடி வெறுக்கும் நாம், பிரார்த்தனை நேரம் போக மீதி நேரங்களில் அறிக்கைகளை தொடராக விடும் தொழில் செய்து வருகிறோம்.

அடிக்கடி நாங்கள் ஓடி ஒளிய வேண்டிய புரட்சிகர கடமை இருந்ததால் முழு அறிக்கைகளையும் மொத்தமாக சேர்த்து வைக்க முடியவில்லை.

எங்கள் ஆட்களையே நடுத்தெருவில் போட்டுவிட்டு ஓடியவர்கள் நாங்கள் என்பது யாவரும் அறிந்த புரட்சிகர தகவல். ஓடும் அவசரத்தில் எப்படி அறிக்கைகளை கொண்டு செல்ல முடியும்?

அன்று விடுத்த அறிக்கைகளை படித்தால் வீரம் கொப்பளிக்கும். சவால்கள் எதிரொலிக்கும். எண்ணிக்கை இமயம் தொடும். ஆகவே கின்னஸ் புகழை எங்களுக்கு தரா விட்டாலும் காரியமில்லை, சக கட்சிக்கு கொடுத்து எம் வயிற்றெரிச்சலை கிளறி ஐக்கிய முயற்சியை கெடுக்க வேண்டாம்.

# காகித கலாசாரம் ஒழிக

காகிதம் மூலமே தாம் நினைப்பதை சாதிக்கிறார்கள் புலிகள்.

ஆயுத காலாசாரம் ஒழிக என்று நாம் கூறியதால், காகித கலாசாரத்தை ஏற்படுத்துவதா?

எங்களிடம் உள்ள ஆயுதங்கள் கூடாது என்பதால் அல்ல, புலிகளிடமும் ஆயுதங்கள் உள்ளன என்பதால்தான் ஆயுத கலாசாரம் ஒழிக என்று கூவினோம்.

இந்தப் புலிகள் இப்போது காகிதத்தை வைத்தே கட்டியாள்கிறார்கள். ஆகவே, அதனால் காகித கலாசாரமும் ஒழிக. ஒழிக. ஒழிக.

ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் என்று பாரதியார் பாடியதை தங்களுக்கான பாடல் என்று புலிகள் நினைப்பது அராஜகம். ஜனநாயக விரோதம்.

எங்களால் முடியாதது எதுவோ அதுவெல்லாம் ஜனநாயக விரோதம்.

நாங்கள் காகிதம் போட்டால் கிழித்தெறிகிறார்கள்.

புலிகள் காகிதம் போட்டால் சல்யூட் அடிக்கிறார்கள்.

ஆகவே-காகித கலாசாரம் ஒழிக. ஒழிக. ஒழிக.

# கோட் கலைகிறது

யாழ்ப்பாணத்தில் ஒரு நீதிமன்றம். கம்பீரமாக தன் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் நீதிபதி.



**சேவகன்:** ஐயா! தங்களுக்கு ஒரு கட்டளை வந்துள்ளது!

**நீதிபதி:** கட்டளை! நாம் அன்றோ அதை அனுப்ப வேண்டும். கட்டளை பிறப்பிக்கும் நமக்கே கட்டளையா?

**சே:** விஷயம் கொஞ்சம் அவசரம். தாங்கள் உடன் பிரித்து படிப்பது நல்லது.

(நீதிபதி கடிதத்தை வாங்கிப் படிக்கிறார். முகம் மாறுகிறது. கதிரையில் இருந்து தன்னியல்பாக எழுகிறார்)

**நீதிபதி:** இ... இத்தோடு இந்த நீதிமன்றம் கலைகிறது!

**ச. தரணி:** மீண்டும் எப்போது கூடும்.

**நீதிபதி:** கூடாது இனி ஓடும்.

**ச.தரணி:** அப்படியானால் வழங்கப்பட வேண்டிய தீர்ப்புக்கள்?

**நீ:** தீர்ப்பை வழங்க நானும், உமது கட்சிக்காரரிடம் பீஸை வாங்க நீரும் இருக்க வேண்டாமா? இடத்தை காலி பண்ணும்!

(சீருடைக்காரர் ஒருவர் வந்து தடுக்கிறார்)

**சீ:** உங்களுக்கு நாங்கள் பாதுகாப்பு தருகிறோம். நில்லுங்கள்!

**நீ:** முதலில் உங்களுக்கு பாதுகாப்பை தேடிக் கொள்ளுங்கள். இப்போது ஆளைவிடுங்கள் (ஓட்டமாக ஓடுகிறார்.)

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331


படத்தில் காணப்படும் பாதணிகள் பிரபல ஹொலி வூட் நடிகை ஜூடி காலண்ட் என்ற நடிகை 'கவிஸாட் ஒஃப் ஓஸ்' என்ற படத்தில் 1939ல் அணிந்து நடித்தது.

பல கோடி ரசிகர்களை ஜொள்ளு விட வைத்த அந்த நடிகையின் பாதணிகளை 1988ம் ஆண்டு ஏலம் விட்டனர். மகா ஜொள்ளரும், மகா கோடீஸ்வரருமான அந்தனி லான்டினி என்பவர் பணத்தைக் கொட்டி வாங்கினார்.

அவர் கொடுத்த விலை, 90 ஆயிரம் பவுண். நம்மூர் மதிப்பில் 96 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்கள்.

1988வரை உலகில் இத்தனை பெரிய தொகைக்கு விற்பனையான தனிப் பொருள் இதுதான். விலையில் உலக சாதனை.

நியூயோர்க் நகரிலுள்ள கிறிஸ்டி ஏல விற்பனை நிலையத்தில் இந்த உலக சாதனை ஏலம் நடந்தது.








SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


→ சிலுக்கு சுமிதா கடித்துவிட்டு வீசிய ஆப்பிளை ஏலத்தில் எடுக்க பலத்த போட்டி என்ற செய்தி முன்பெல்லாம் பரபரப்பாக அடிபட்டது.

குஷ்புவுக்கு கோயில் கட்டிய செய்தியறிந்து நம்பமுடியாமல் புருவம் உயர்த்தியவர்களும் இருக்கிறார்கள்.

ஏதோ இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில்தான் சினிமா மோகம் எக்கச்சக்கம் என்பது போல சிலர் பேசுவார்கள். அது மகா தப்பு.

நம்மையெல்லாம் விட பயங்கரமான சினிமா மோகிகள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். தங்களுக்கு பிடித்த நடிகைகளுக்காக தமது சொத்தையே எழுதிக்கொடுக்கக்கூடிய மகா மோகிகள் அங்கு இருக்கிறார்கள்.

## பாட்டிகள் ஜாக்கிரதை



↑ முரசு வாசகர்களுக்கு அறிமுகமானவர்கள்தான் இவர்கள். சோக்கான படமாக கிடைத்ததால் மீண்டும் ஓர் அறிமுகத்துடன் சில மேலதிக தகவல்கள்.

உலகிலேயே அதிககாலம் உயிர் வாழும் இரட்டையர் இவர்கள். ஜப்பான் நாட்டில் நகோயா நகரில் இருவரும் உயிர்வாழ்கிறார்கள். இப்பொழுது இவர்களுக்கு வயது 105. தங்கம்- வெள்ளி என்பது இவர்களின் பெயர்கள். ஜப்பான் மொழியில் 'கின்' என்றால் தங்கம்; 'ஜின்' என்றால் வெள்ளி.

இவர்கள் அதிக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளனர். இவர்களைத் தங்கள் உற்பத்திப் பொருட்களின் விளம்பரத்துக்காகப் பல நிறுவனங்கள் பயன்படுத்துவதால் நல்ல வருமானம் பெறுகின்றனர்.

'வயது முதிர்ந்தவர்களைக் கனம் பண்ண வேண்டும்' என்று இளஞ் சமுதாயத்துக்கு உணர்த்துவதற்காக நகோயா மாநகர மேயர், ஒரு நிகழ்ச்சியை, இவர்களது 100வது பிறந்த தினன்று 1990ம் ஆண்டில் ஏற்பாடு செய்திருந்தார். அன்றைய தினம் எடுத்த படம் இது வாகும்.

↓ ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு ஆசை. ஆர்வம். இவருக்கு என்ன ஆசை?


சிறுவர்கள் உருட்டிவிளையாடும் கோலி (குண்டு)கள் முதல் செயற்கை மணிகள், மாபிள் குண்டுகள், பெறுமதியற்ற இரத்தினக்கற்களான குண்டுகள் ஆகியவற்றின்மீதுதான் இவருக்கு ஆசை. தனது எட்டு வயதிலிருந்தே சேகரிக்கத் தொடங்கிவிட்டார்.

பிரிட்டன்-மேற்கு சசெக்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த சாம் மக்கார்தி ஃபொக்ஸ்சுக்கு இப்போது 53 வயதாகிறது. அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள இவர் கடந்த 45 வருடங்களாக 40 ஆயிரத்துக்கும் அதிகமான கோலிகளைச் சேர்த்து வைத்துள்ளார்.

ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், தனது 'திரண்ட சொத்தான-கோலிகளைத் துடைத்துச் சுத்தம் செய்வார். தனது சொத்துக்களுடன் மக்கார்தி ஃபொக்ஸ் இவ்வாறு காணப்படுகிறார். உலகில் அதிக கோலிகளை சேகரித்தவர் என்று உலக சாதனை புத்தகத்திலும் இடம்பிடித்துவிட்டார். அந்த சந்தோசம் முகத்தில் தெரிகிறதல்லவா!




## 1 வது பிறந்தநாள் வாழ்த்து



உதயநாதன் பிரவின் 11.09.1998

வாழைச்சேனையைச் சேர்ந்த உதயநாதன்-சுகுணா தம்பதியினரின் செல்வப் புதல்வன் பிரவின் தனது 1 வது பிறந்தநாளை 11.09.1998 அன்று AUSTRALIA-SIDNY இல் உள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், மாமிமார்கள், சித்தப்பா, மற்றும் வாழைச்சேனையில் வசிக்கும் அன்பு அம்மம்மா, அன்ரிமார்கள், மாமாமார்கள், சவூதி மாமா, இலண்டன் சித்தப்பா, சித்தி மற்றும் மச்சாள்மார், மச்சான்மார், அண்ணன்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ பத்திரகாளியம்மன் அருளால் பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். தகவல்: வீரர் மாமா 225/3, டாம் வீதி, கொழும்பு-13

→ மாணிக்க வீணை ஏந்தும் செல்வி அமுதவாணி

அன்பானந்தர் லண்டன் அட்வான்ஸ் லெவல் பரீட்சையில் 4 பாடங்களிலும் முறையே "ஏ" தரத்தைப் பெற்றுள்ளார்.

பிரிட்டனில் இச்சிறப்புச் சித்தியைப் பெற்ற 25 பேருக்குள் ஒருவராக எமது ஈழ மண்ணுக்கு பெருமை தேடித் தந்த தமிழ் மகளாகத் திகழ்கின்றார்.

யாழ்-நீர்வேலி தெற்கைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர் பயலொஜி, கெமிஸ்ரி, மற்ஸ், ஜெர்மன் மொழி ஆகிய பாடங்களிலேயே தனது திறமையை வெளிக் காட்டியிருக்கின்றார்.

அமுதவாணி ஜீ சி எஸ் சி பரீட்சையிலும் 10 பாடங்களிலும் "ஏ" தரத்தையும் அதில் ஆறுபாடங்களில் "ஏ" ஸ்டார் எனும் உயர் நிலையையும் பெற்றார். பிரிட்டனில் இவ்வாறான சித்தி பெற்ற முதலாவது ஈழ மாணவி இவரே என்பது பெருமை.

## பெருமை

